பாரததேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணா

மலர் 1 | ஞாயிறு 27-8-'39 | இதழ் 8

பொருளடக்கம்

விஷயம்			பக்கம்
காத்திருந்தவன் கதை	...	...	2
லோக சஞ்சாரம்	...	...	7
வேலை இல்லை	...	சி. ரா. சே.	12
என்ன அடிமை உலகம்!	...	வரதன்	15
இந்தப் பெண்மைப் பேச்சு	...	கரிச்சான்	17
நாக்கு நீளம்	...	அசுவதி	19
அகத்தியன் வைத்தியம்	...	...	21
மருந்துடன் விருந்து	...	வ. ரா.	24
மாடம் தபூவா!	...	...	26
கொழுக்கட்டைப் போட்டி!	...	சிட்டி	29
கலைஞான வரலாறு	...	...	33
துரோகப் பால்	...	விகடானந்தன்	38
ஆளுக்குள்ளே ஆளு; எத்தனை ஆளு!	...	...	40
முத்து முத்தாக இருக்கே!		கோத்தமங்கலம் சுப்பு	43
வைர மோதிரம்	...	ராஜம்	46
சிரிப்பும் விளையாட்டும்	...	'ரஞ்சனன்'	49
பரதேசத் தபால்	...	...	56
அந்தப் பார்வை!	...	சீதாபதி	59
பெருமை	...	...	62
சுத்தப் பட்டிக்காடு!	...	து. ராமமூர்த்தி	65
குத்தகை வசூல்	...	ஸ. வி. சாமந்த்	72
அகத்தியன்	...	...	77
மார்க்கோனி	...	வெ. ம.	81
நட்சத்திர பலா பலன்கள்	...	...	86
காற்றடிச்சதிலே!	...	படம்	96
நிமிஷக் கதைகள்	...	...	97
சந்திரிகா	...	'பொன்னி'	100
திரை உலகம்	...	...	102

காத்திருந்தவன் கதை!

காத்திருந்தவன் ஏமாந்து போவதும் நேற்று வந்தவன் "ப்ரேஸ்" அடித்துக் கொண்டு போவதும் உலக விசித்திரங்களில் ஒன்று. உள்ளபடியே, யோசித்துப் பார்த்தால், காத்திருப்பவனுக்குக் காரியம் கைகூடப்படாது என்பதே நமது கருத்தாகும். அதிலே, ஒரு உண்மையும்கூட, இருக்கிறது.

காத்திருப்பவன் எதற்காக காத்திருக்க வேண்டும்? அவன் மனதிலே, ஏதோ சந்தேகமும் சஞ்சலமும் தட்டிக் கொண்டேயிருப்பதால் தானே, அவன் காத்துக் கொண்டிருக்கிறான்? சந்தேகம் கொண்டவனுக்கும் சஞ்சலப்படுபவனுக்கும் வெற்றி கிடைக்கவே கிடைக்காது.

நேற்று வந்தவன் என்று குறை சொல்லி, முறையிட்டுக் கொண்டு, நொந்து கொள்ளுவதும் தவறு. நேற்று வந்தவன் மனதிலே, சந்தேகமே ஏற்படுவதில்லை. சந்தேகம் தோன்றினும், சந்தர்ப்பத்தையும் இலட்சியத்தையும் உத்தேசித்து, சந்தேகத்தை உதறித் தள்ளிவிடுகிறான். உறுதியைக் காண்பிக்கும் மனிதனுக்கு, எதிலும் வெற்றி, எளிதிலே கிடைக்கும்.

சுமார் மூன்று மாத காலமாக, பிரிட்டனும் பிரான்சும் ருஷ்யாவின் நட்பை நாடி, அதற்காக முயற்சி செய்து கொண்டே வந்தன. மூன்று மாத காலமாக, பேச்சு, தோரணைப் பேச்சு, விதரணைப் பேச்சு, விஸ்தாரப் பேச்சு! ஆனால், காரியமோ, காற்றுவாக்கில் பறந்து கொண்டிருந்தது.

இதை முதலிலே தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும், அதை இரண்டாவதாக, விளக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இரு தரப்பிலும் பிடிவாதம், சங்கற்பம், முஸ்தீபு. மனதை விட்டுச் சொன்னால்தான் காரியம் சாயும் என்று சம்பிரதாயமாகப் பேசிவிட்டு, மனதை விட்டுச் சொல்லாமல் போனால், பரஸ்பரம் எப்படி மனதைத் தெரிந்து கொள்ள முடியும்? பூதக் கண்ணாடி வைத்துப் பார்ப்பதா? அல்லது குறி கேட்பதா?

ஒளிந்து பிடித்துக் கொண்டிருந்தன ருஷ்யாவும் பிரிட்டனும் இந்த மூன்றுமாத காலமாக. நேசப் பேச்சு ஆரம்பித்ததும்,

ருஷ்யாவின் அந்நிய நாட்டு மந்திரி, தமது ஸ்தானத்தை இழக்க நேர்ந்தது. அந்த ஸ்தானத்துக்கு மொலட்டாவ் என்பவர் வந்தார். அவர் வந்தது முதல், நேசப் பேச்சு, அதிகமாக அபிவிருத்தி அடையவில்லை.

நெருக்கடி வந்தால், ருஷ்யாவுக்கு, பிரிட்டனும் பிரான்சும் எந்த வகைகளில் உதவி செய்ய முடியும்? அந்த சந்தர்ப்பத்தில், ருஷ்யா எப்படி நடந்து கொள்ள வேண்டும்? ருஷ்யாவிடமிருந்து பிரிட்டனும் பிரான்சும் எவ்வித ஒத்தாசையை எதிர்பார்க்கின்றன என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்று மொலட்டாவ் கேட்டார். இந்தக் கேள்வி மிகவும் நியாயமான கேள்வி; பொருத்தமான கேள்வி.

இந்தக் கேள்விக்கு, பழைய ராஜ தந்திரத்தையும் பொது உடமைக் கொள்கையின்பேரிலிருக்கும் ஆத்திரத்தையும் தழுவி, தலைக்குப் பின்புறம் கையைக் கொண்டு போய் வளைத்து, மூக்கைப் பிடிக்கிறது மாதிரி, பிரிட்டன் பதில் சொல்லத் துவக்கிற்று.

பிரிட்டனுக்கு, ருஷ்யாவின் நட்பில் அவ்வளவு அக்கரை இல்லை என்றும், எப்படியாவது ருஷ்யாவையும் ஜர்மனியையும் போரில் முட்டவிட்டு, இரண்டு நாடுகளின் சக்தியைக் குறைப்பதே, பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தின் நோக்கமென்றும், ருஷ்ய ராஜ தந்திரிகள் முடிவு கட்டிக்கொண்டார்கள்.

பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின்பேரில் குறை சொல்லுவதிலும் பயன் இல்லை. தொடை நடுங்கி சேம்பர்லேன் என்ற பழியை நெவில் சேம்பர்லேன் வாங்கிக்கொண்டாரே யொழிய, அவர் பழைய பிரிட்டிஷ் ராஜ தந்திர முறையிலிருந்து துளியாவது நழுவிப்போகவே இல்லை.

பழைய பிரிட்டிஷ் ராஜ தந்திரம் என்பது என்ன? எல்லா நாடுகளோடும் சிநேகிதமாக இருப்பதாகப் பாவித்து, நடந்து கொள்ள வேண்டியது. எந்த நாட்டின் மூலமாக, பிரிட்டனுக்கு ஆபத்தோ, பொருள் நஷ்டமோ, பேர் நஷ்டமோ வரும்போலிருக்கிறதோ, அதையும் வேறொரு நாட்டையும் முட்ட விடுவது. இந்த மாதிரி, சுமார் முன்னூறு வருஷ காலமாக, பிரிட்டிஷ் ராஜ தந்திரம் நடந்து வருகிறது.

இந்த ராஜ தந்திரத்தின் வெற்றிதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமாகும். உலகத்தில், ஐந்திலொரு பகுதி மண்ணைக் கட்டியாளும் பிரிட்டன் இவ்வளவு பூமியையும் போரில் வெற்றியால், அடையவில்லை. இவ்வளவு பூமி சம்பத்தும் (இப்பொழுது இந்த சம்பத்து சங்கடமாக இருக்கிறது) பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தின் பயனாகும்.

ஆகவே, காலங்கண்ட முறையை, யாரும் கைவிடச் சம்மதிக்க மாட்டார்கள். ஆனால், உலகத்தில் வைதிக மனப்பான்மை

ஒருபுறமிருக்க, அது மிகவும் வேகமாக மாறிக்கொண்டே வருகிறது. மாறுதலைச் செய்யும் நிபுணர்கள், காலங்கண்ட முறையை ஏளனம் செய்வார்கள்.

மேல் நாட்டு ராஜ தந்திரமே,சத்தியம் மருந்துக்குக்கூட இல்லாத, ஒரு அவலட்சணமான சரக்கு. நேற்றைய விரோதிகள், இன்றைக்கு நட்போடு இருக்கலாம். இருவர், நண்பர்களைப் போல பாவனை செய்துவிட்டு, ஒருவருக்கொருவர் துரோகம் செய்து கொள்வார்கள். பொய், துரோகம், அற்பத்தனம், சின்னபுத்தி, ஏமாற்று, தன்னலம் முதலிய தீய குணங்களை, ராஜ தந்திரம் என்ற போர்வையைப்போட்டு, மறைத்து வைத்திருக்கிறார்கள், வெள்ளைக்காரர்களும் அவர்களது சீடர்களான ஜப்பானியர்களும்.

ராஜ தந்திரத்துக்கு, மேற்சொன்ன குணங்கள் தேவையானால், யார் யாரோடு சேர்ந்திருப்பார் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. ஜர்மனியோடு ஒப்பந்தம் செய்து கொண்ட இதாலி, சென்ற ஐரோப்பியப் போரில், ஜர்மனிக்குத் துரோகம் செய்து விட்டது. பிரிட்டனுக்குச் சாதகமாகச் சண்டை செய்த ருஷ்யா, திடீரென்று போல்ஷிவிக்கப்புரட்சிக்குள் அகப்பட்டுக்கொண்டு, போரை நிறுத்தி, ஜர்மனியோடு உடன்படிக்கை செய்துகொண்டு, பிரிட்டனைக் காலைவாரிவிட்டு விட்டது.

இது பழங்கதையாக இருந்தபோதிலும், ஐரோப்பிய ராஜ தந்திரம் என்பது எவ்வளவு கேவலமான சரக்கு என்பதை, உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டாமா?

காத்திருந்தவன் கதை என்ன? மூன்று மாத காலமாக, பிரிட்டனும் பிரான்சும் சேர்ந்து கொண்டு, எப்படியாவது ருஷ்யாவின் கழுத்திலே சுருக்கைப் போட்டு, தங்கள் கட்சியில் இழுத்து விடுவது என்று அரும்பாடு பட்டனவே! அந்தப் பிரயத்தனமெல்லாம் வீணாகிப் போய்விட்டது மாதிரி தோன்றுகிறது.

ருஷ்யாவுக்கும் ஜர்மனிக்கும் வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது என்று சில நாட்களுக்குமுன், ஒரு செய்தி வந்தது. அதற்கடுத்தால் போல, ருஷியாவுக்கும் ஜர்மனிக்கும் இன்னொரு வகையில், ஒப்பந்தம் ஏற்படுவதாக இருக்கிறது என்று ஒரு தந்தி. அது எவ்வித ஒப்பந்தம்?

ருஷ்யாவும் ஜர்மனியும் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளுவதில்லை என்று ஒப்பந்தம் ஏற்படப் போகிறதாம். ஒப்பந்தத்தை முடிவுசெய்து, அதில் கையெழுத்துப்போட, ஜர்மனியின் அந்நிய நாட்டு மந்திரி ரிப்பன்ட்ராப், ருஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவுக்குப் போகிறாராம்!

என்ன அவசர அவசரமாகக் காரியங்கள் நடைபெறுகின்றன! மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை, இருந்தால், இரண்டு ஆசைகளையும் இணைக்க முடியாது.

ருஷ்யாவின் பொது உடமைக் கொள்கையை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்று பிரிட்டன் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தது. அது பலிக்கவில்லை. அதே பொது உடமைக் கொள்கை உலகில் பரவாமல் பார்ப்பது தமது கடமையென்றும், பொது உடமையை அழிக்கப் பாடு படுவது தமது நோக்கம் என்றும் ஹிட்லர் பல தடவைகளில் உரக்கச் சொல்லியிருக்கிறார்.

ஆகவே, இரண்டு நாடுகளும் ருஷ்யாவுக்கு ஆகாதவை; இருந்தாலும், ஜர்மனியோடு ஒப்பந்தம் செய்துகொள்ள, ஏன் ருஷ்யா சம்மதித்தது? பிரிட்டனோடு ஒப்பந்தம் செய்துகொள்ள ஏன் ருஷ்யா, தாமதம் செய்து கொண்டே வந்தது? ஹிட்லர் ஒரு சர்வாதிகாரி; ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி; ஆகவே காரியம் எளிதிலே முடிந்துவிட்டது என்று விரைவில் சொல்லிவிடலாம்.

ஜர்மனிக்கு இழக்கும்படியாக, ருஷ்யாவிடம் ஒன்றுமில்லை. ஆனால், ஜர்மனியும் ருஷ்யாவும் சேர்ந்துகொண்டால், போலந்தை முன்போல, கூறுபோட்டுக் கொள்ளலாம். தவிர, உலக யுத்தம் ஏற்பட்டால், ருஷ்யாவுக்கு அதில் கலந்து கொள்ள அவ்வளவு பிரியம் இருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் ருஷ்யா, ஜப்பானை ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்று சில வருஷங்களாக உறுமிக்கொண்டே யிருக்கிறது. ஜப்பானை, ருஷ்யா தாக்குவதாயிருந்தால், ருஷ்யாவின் மேலண்டை பக்கத்திலிருக்கும் ஜர்மனியை, விரோதியாக வைத்துக்கொண்டிருப்பது, ருஷ்யாவுக்கு லாபமில்லை. ஆகவே ஜர்மனியோடு ருஷ்யா ஒப்பந்தம் செய்துகொண்டு, சீனாவுக்கு ஒத்தாசை செய்து, ஜப்பானை ஒரு கை பார்க்கலாம் என்ற எண்ணம் ருஷ்யாவுக்கு இருக்கலாம்.

அதோடு கூட, அசல் சமயோசித ராஜ தந்திரமான பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தின் பேரில், ருஷ்யாவுக்கு நம்பிக்கை இல்லையானால், அதில் ஆச்சரியம் ஒன்றுமே இல்லை. கண் கொத்திப் பாம்பைப்போல காத்துக்கொண்டிருக்கிற ஹிட்லரின் ராஜ தந்திரம் பலிப்பதிலும் யாதொரு ஆச்சரியமும் இல்லை. கண்ணை மூடிக்கொண்டு காரியம் செய்வதைப் போல பாவனை செய்யும் சேம்பர்லேனிடம் நமக்கு மிகுந்த அனுதாபம்.

சேம்பர்லேன் அவர்கள் மிகவும் துரதிருஷ்டசாலி. சிலருக்கு, இவ்வித பாக்கியம்தான் வாழ்க்கையில் கிடைக்கும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்பது நகர முடியாத மலைப்பாம்பைப் போல ஆகிவிட்டது. இதை நிர்வகிக்கும் பொறுப்பும் சாமர்த்தியமும் சேம்பர்லேன் அவர்களிடம் (இவர் உயர்ந்த மூளைக்காரர்

அல்ல) வந்து சேர்ந்தால், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கு, எதிர் காலத்தில், நல்ல திசை இல்லை என்பது தெளிவு.

மேலும், சேம்பர்லேனைக் காட்டிலும் மிகுந்த சாமர்த்திய சாலிகளான வின்ஸ்டன் சர்ச்சிலும் லாய்ட் ஜ்யார் ஜூம், பிரிட்டிஷ் பிரதம மந்திரிகளாக ஆகி, பொறுப்பை ஏற்றுக்கொண்டு, காரியம் செய்ய முயன்றாலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை, உடையாமல் காப்பாற்றுவதற்கு, அவர்களாலும் முடியாது. இனி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விரிய இடமில்லை. தானாகச் சுருங்கவும் முடியாது. வெடித்துத்தான் ஆகவேண்டும். இது ஒரு வகை இயற்கை விதி.

இந்த சந்தர்ப்பத்தில், சேம்பர்லேன் பிரிட்டிஷ் பிரதம மந்திரியானது அவரது துர்ப்பாக்கியம். அது காலச் சக்கரத்தின் சூழ்ச்சி. ஆகவே அவரை யாரும் நொந்துகொண்டு பேசுவதில் பயனில்லை. சேம்பர்லேன் ஸ்தானத்தில், யார் இருந்தாலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை, நிமிர்த்தி வைத்து, காப்பாற்ற முடியாது. முன்னூறு வருஷம் வாழ்ந்தவர்களும் இல்லை. முன்னூறு வருஷம் கெட்டவர்களும் இல்லை.

சேம்பர்லேனது ராஜ தந்திரம் தோற்றுப் போகுமாகில், அது, இந்தியாவுக்கு ஒருவகையில் இலாபம் என்று சொல்லவேண்டும். இந்தியா சம்பந்தப்பட்ட வரையிலும், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள், ஆகாயத்தில் உல்லாசமாகப் பறந்து கொண்டு போகிறது மாதிரி, நடந்து கொள்ளுவது வழக்கம். முன்னூறு பிரிவுகள் இருக்கிற இந்தியாவினிடம், எப்படியும் நடந்து கொள்ளலாம் என்ற அசட்டுத்துணிவு அவர்களிடம் உண்டு.

அந்த அசட்டுத் துணிச்சலின்பேரில், ஜர்மனி-ருஷ்ய ஒப்பந்தம், இடிவிழுந்தது மாதிரி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவின் நட்பைக் கோராமல், இந்தியாவை அடிமை நாடாக வைத்துக்கொண்டு, பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் ராஜ தந்திரம் பழகுவதில், எவ்வளவு ஆபத்து இருக்கிறது என்று அவர்கள், இந்த ஒப்பந்தத்தின் மூலமாகத் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

சேம்பர்லேன் பேசவேண்டிய பேர்வழி காந்தி; ஸ்டாலினோடு அல்ல. விடுதலை பெற்ற இந்தியா, பிரிட்டனுக்கு விலை மதிக்க முடியாத சக்தி. அடிமை இந்தியா, பிரிட்டன் கழுத்தில் தொங்கும் கரும் பாறை.

லோக சஞ்சாரம்

சரியான யோசனை

காங்கிரஸ் மாகாண பிரதம மந்திரிகள் யாவரும் பூனாவில் கூடப்போகும் சேதியைக் கேட்டு நமக்கு மகிழ்ச்சி. காங்கிரஸ் பிரதம மந்திரிகள், திரிபுரி காங்கிரசுக்கு முன்னேயே, கூடிக் கலந்து, அரசியல் விபரங்களைப் பற்றியும், விடுதலைப்போராட்டத்தைப் பற்றியும் யோசித்திருந்தால், மந்திரிப்பதவி ஏற்றுக் கொண்டதனால், காங்கிரசுக்குள் மிதவாத மனப்பான்மை பரவி, புரட்சி மனப்பான்மை தளர்ந்து வருகிறது என்ற பழி வந்திருக்காது.

மந்திரிகளானதும், காங்கிரஸ்காரர்களுக்கு, அதிகார ஆசை வந்து விட்டது என்ற அவச்சொல் பரவி வருகிறது. இந்த அவச்சொல், நாட்டில் பரவுவது தவறாகும். காங்கிரஸ் மந்திரிமார்கள், நமக்குத் தெரிந்த வரையிலும், மூட்டை மூட்டையாக, வீட்டுக்கு அரசாங்க தஸ்தாவேஜிகளை எடுத்துக் கொண்டு போய், பரிசீலனை செய்கிறார்களேயொழிய, பணத்தை எடுத்துக் கொண்டு போகவில்லை.

இப்பொழுது இந்தியாவின் நிலைமை மிகவும் விசித்திரமான நிலைமை. அரசியல் நிர்வாகம் இன்னதென்று தெரியாமலும் அதிருஷ்டத்தை நம்பியும் வாழும் ஜனங்கள் பெரும்பான்மை. அவர்கள் ஏழைகள். அவர்களை, போக்கிரிகள் ஏமாற்றப் பார்க்கிறார்கள். அடிக்கடி ஏமாற்றமடைவதால், அவர்களுக்கு மூட பக்தியிலும் அதிருஷ்டத்திலும் அதிகமாக நம்பிக்கை உண்டாகி விடுகின்றது. இந்த உறக்கத்தினின்றும், அவர்களைத் தட்டி எழுப்பியவர்கள் காங்கிரஸ் காரர்கள்.

ஆனால் காங்கிரஸ்காரர்களுக்குள்ளாகவே, கருத்து வேற்றுமை ஏற்படவே, அவநம்பிக்கையும் உண்டாகி யிருக்கிறது. இந்த அவநம்பிக்கையைப் போக்கி, மாகாண சுயாட்சி மூலமாயும் விடுதலைப் போராட்டத்தை நடத்தலா மென்றும், மந்திரிப் பதவி ஏற்றதனால், புரட்சி மனப்பான்மை அழிந்துபோய் விடவில்லை என்றும் வெட்ட வெளிச்சமாக ருசுப்படுத்த வேண்டியது காங்கிரஸ் மந்திரிமார்களின் கடமையாகும்.

ஆகவே தக்க தருணத்தில், பூனா நகரில், பிரதம மந்திரிகள் கூடுகிறார்கள் என்று நாம் சங்

தோஷப் படுகிறோம். காந்தி வழியில் நடைபெற வேண்டிய போராட்டத்துக்குத் தாங்களும் எல்லா வகைகளிலும் தயார் என்று சொல்லும்படியாக, அவர்கள் கூட்டத்தில் ஒரு திட்டத்தைக் கோலிக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

நாய்க்கரின் ஆராய்ச்சி

தமிழர்கள் இந்தியர்கள் அல்ல என்று புதிதாக, ஸ்ரீ ராமஸ்வாமி நாய்க்கர் ஆராய்ச்சி செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இந்த மாதிரி ஆராய்ச்சி அவரால்தான் செய்ய முடியும். தமிழர்கள் ஆரியர்கள் அல்ல என்பது போய், தமிழர்கள் இந்தியர்கள் அல்ல என்று சொல்லும்படியான நிலைமைக்கு, ஸ்ரீ நாய்க்கர் வந்து விட்டாரா?

இந்தியா என்பது ஹிந்துஸ்தானத்தின் மற்றொரு பெயர். இது மத சம்பந்தமான பெயரல்ல; அரசியல் சம்பந்தமான பெயருமல்ல. ஆப்கானிஸ்தானத்துக் கிழக்கே, பரந்து கிடக்கும் நிலப் பரப்புக்கு, பூமி நூல் சம்பந்தமாக, இந்தியா என்ற பெயரிட்டு அழைப்பது சம்பிரதாயமாயிற்று.

இந்த நிலப் பரப்புக்குள் வாழும் மக்கள் இந்தியர்கள் தானே? இதிலே, எப்படி நாய்க்கர் அவர்களுக்கு சந்தேகம் வந்திருக்க முடியும் என்பது நமக்குச் சற்றேனும் விளங்கவில்லை. இந்தியர்கள் என்று சொன்னால், அதிலேயும் சூழ்ச்சி வாசனை வீசுகின்றது என்று பெரியார் அபிப்பிராயப் படுகிறாரா? அருபதாம் கலக்கம் எல்லாருக்கும் இயற்கை என்கிறார்கள். அந்தச் சமாதானத்தைத் தான், நாய்க்கர் அவர்கள் ஆராய்ச்சியிலும் பிரயோகம் செய்ய வேண்டும்.

எழுத்தறிவித்தவன் இறைவன்

எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு எழுத்து வாசனை உண்டாக்குவது பெரிய புண்ணியமாகும். அந்தப் புண்ணியத்தைக் கட்டிக்கொள்ளப் பார்க்கிறார் நமது பிரதம மந்திரி ராஜாஜி. இதற்காக மெனக்கிட்டு, அவர், 'தம்பீ வா!' என்று ஒரு புஸ்தகமும் எழுதி யிருக்கிறார். தமிழ் நெடுங் கணக்குக்கு, ஜ, ஸ, ஷ முதலிய எழுத்துக்கள் தேவையில்லை என்று முன்னொரு சமயம் எழுதிய ராஜாஜி, அந்த எழுத்துக்களை, தமது சிறு நூலில், இப்பொழுது புகுத்தி யிருப்பதைக் கண்டு, நமக்கு அளவிலா மகிழ்ச்சி. அனுபவத்தால், ராஜாஜி எல்லாத் துறைகளிலும் வளர்ந்து வருகிறார் என்பதற்கு இந்த நூலும் ஒரு அத்தாட்சி. இந்த நூல், எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்; நம் நாட்டிலிருந்து, எழுத்தறியாத தீனம், விரைவில் அகல வேண்டும் என்று பிரதம மந்திரி எடுத்துக்கொண்டிருக்கும் சிரத்தையை நாம் பாராட்டுகிறோம்.

கருமித்தனம்

வங்காள மந்திரிமார்கள், அரசியல் கைதிகள் சம்பந்தமாகக் கையாளும் முறை, நமக்குச்சற்றேனும் பிடிக்கவே இல்லை. சொட்டு சொட்டென்று, ஜலத்தை 'பில்டரால்' -வடிக்கட்டுவதைப் போல, அவர்கள், ஒன்றிரண்டாக அர

சியல் கைதிகளை விடுதலை செய்கிறார்கள். இது மிகவும் பரிகசிக்கும்படியான முறையாகும்.

புலி தனது இறையை கவ்வி கவ்விச் சந்தோஷ மடைவதைப் போல இருக்கிறது இந்தக் கதை. இவர்கள் இவ்வாறு செய்வதற்குக் காரணம் என்ன? தேச பக்தக் கைதிகள், பெரும்பான்மையில் ஹிந்துக்கள் என்ற காரணமா? அல்லது இவர்களுக்கு அன்னியக் கூட்டங்களிலிருந்து, அடிக்கடி உபதேசங்கள் வந்து கொண்டிருக்கின்றனவா? மாகாண சுய ஆட்சியை, இந்த மந்திரிமார்கள் துர்விநியோகம் செய்வதைப்போல, வேறு எந்த மாகாணத்திலும் நடக்கவே இல்லை.

புத்தி இல்லை

பண்டித ஜவஹர்லால் நேரு சீனாவுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். போனவர், ஆகாய மார்க்கமாகப் போகிறார். வழக்கமாக டச்சு விமானத்தில் போவாராம். ஆனால், இந்தத் தடவை, பிரஞ்சு விமானத்தில் போனதில், சிறிய அவமானம் அவருக்கு உண்டாயிற்றாம்.

விமானம் புறப்படுவதற்கு முன், அதைப் பார்க்கவேண்டும் என்று பண்டிதரின் சிநேகிதிகளான சில ஸ்திரீகள் ஆசைப் பட்டார்களாம். விமானத்தின் காப்டனுக்குப் பண்டிதர், மரியாதையாக சீட்டுக் கொடுத்து விட்டாராம். சாப்பாட்டு சமயம் என்றும், இப்பொழுது முடியாது என்றும், காப்டன் பதில் அனுப்பி, உல்லாசமாக அரை மணிக்குமேல் விருந்துக் களியாட்டத்தில் ஆழ்ந்து கிடந்தாராம்.

இந்த காப்டனுக்குக் கொஞ்சங் கூட மரியாதை தெரியவில்லை. புத்தி இருந்தால்தானே, மரியாதை தெரியும்? பொதுவாக பிரஞ்சுக்காரர்களுக்கு, நிறத்திமிர் கிடையாது. அவர்கள் எல்லாரோடும் சகஜமாகப் பழகக்கூடியவர்கள். இந்தப் பேர்வழி, விதிவிலக்காக எப்படித் தோன்றி, பிரான்சின் நல்ல பெயரைக் கெடுக்கப் பார்த்தார் என்பது தெரியவில்லை.

என்று ஒழியுமோ?

பஞ்சாப் மாகாணத்தில் காங்கிரஸ்காரர்களுக்குள் இரண்டு கட்சிகள் நிரந்தரமாக இருக்கின்றன. ஒரு கட்சிக்குத் தலைவர் டாக்டர் சத்யபால். இன்னொரு கட்சிக்கு டாக்டர் கிச்சுலு. இவர் இருவருக்குள்ளும் போட்டி வந்திருக்கிறது, ஆச்சரியமாக இருக்கிறது.

பஞ்சாப் படுகொலை என்று சாதாரணமாய்ச் சொல்லப்படும் கொடுமையான சம்பவம் நேர்ந்ததற்கு இவர்களே ஒருவாறு காரணம். இதை தவறாக யாரும் அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. டாக்டர் கிச்சுலு, டாக்டர் சத்யபால் என்ற இரு தலைவர்களையும் எங்கேயோ அரசாங்கத்தார் கொண்டுபோய் வைத்துவிட்டார்கள் என்று அம்ருதசரஸ் வாசிகள் 1919-ம் வருஷத்தில் திகிலடைந்து போனார்கள். அந்த திகிலைப் படுபாவி டையர் கலகமாக பாவித்து அம்ருதசரஸ் வாசிகளைச் சுட்டுக் கொன்றான்.

அந்தக் காலத்தில் சகோதரர்களைப்போல இருந்த இரண்டு

டாக்டர்கள் இப்பொழுது கருத்து மாறுபாடடைந்து, வெவ்வேறு கட்சிகளுக்குத் தலைவர்களாக அமைந்து, காங்கிரஸுக்குள் பிளவை உண்டாக்குவது நாட்டின் துர்ப்பாக்கியமென்றே சொல்ல வேண்டும்.

இத்தகைய பிளவு பஞ்சாபை அரசு நடத்தும் யூனியன் கட்சி யாருக்குள் ஏற்படலாகாதா?

பம்பாய் சனாதனிகள்

தமிழ் நாட்டில் சனாதனிகள் காங்கிரசுக்கும் காங்கிரஸ் மந்திரிமார்களுக்கும் சாபம் கொடுத்த வண்ணமாக இருந்து கொண்டிருக்கையில், பம்பாய் சனாதனிகள் காங்கிரசில் சேர வேண்டுமென்று, கூடி யோசனை செய்திருக்கிறார்களாம்.

தேசத்தோறும் சனாதன ஆசாரம் வெவ்வேறாக இருக்கிறது போலத் தோன்றுகிறது. தமிழ் நாட்டில் சனாதனிகளுக்கு காங்கிரசையும், தீண்டாமை விலக்கையும் கண்டால் பிடிக்கவில்லை. வட நாட்டிலோ சனாதனிகள் கூட தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. எப்படி என்று கேட்கிறீர்களோ?

தீண்டாமை விலக்கு காங்கிரஸ் திட்டத்தில் ஒன்று. சனாதனிகள் காங்கிரசில் சேருவதாக இருந்தால், தீண்டாமை விலக்கை ஒப்புக் கொள்ளாமல், அவர்கள் காங்கிரசில் சேர முடியாது. ஆகவே அவர்கள் காங்கிரசில் சேருவதென்றால், ஆலயப்பிரவேசத்தையும், தீண்டாமை விலக்கையும் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நாம் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். பம்பாய் சனாதனிகளுக்கு நமது பாராட்டு.

பிரார்த்தனைதான் வழி

சிந்து மாகாணத்தில், அரசாங்கத்தார் ஒரு நாள் லீவு கொடுத்தார்களாம். எதற்காக? ஜனங்களெல்லாம் சேர்ந்து, கடவுளைத் துதித்து மழை வேண்டுவதற்காக. மழைக்கும் பிரார்த்தனைக்கும் என்ன சம்பந்தம் என்று நாகரிக அறிவாளிகள் ஏளனம் செய்யலாம். வீட்டிலிருந்து புறப்படும் புகைக்கும் மழைக்கும் எவ்வளவு நெருங்கிய சம்பந்தமுண்டோ, அவ்வளவு சம்பந்தம் பிரார்த்தனைக்கும் காரிய சித்திக்கும் உண்டு என்பது பெரியோர்களின் அனுபவ வாக்கு.

உலகத்திலே பாபம் மலிந்து போனதால் காலாகாலத்தில் பருவ மழை பெய்வதில்லை என்று சாதாரண ஜனங்கள் சொல்லிக்கொள்ளுவதை நீங்கள் கேள்விப்படட்டதில்லையா? அவர்கள் மூடர்கள் என்று அவர்களுடைய வார்த்தையைத் தள்ளிவிட வேண்டாம். மரத்தின் வாழ்க்கைக்கும் மனிதன் உள்ளே இழுக்கும் பிராண வாயுவுக்கும் சம்பந்தமுண்டு என்று விஞ்ஞான சாஸ்திரிகள் ருசுப்படுத்தி இருக்கிறார்கள். அதைப் போலவே பிரார்த்தனைக்கும் மழைக்கும் சம்பந்தமுண்டு என்று ஒரு மேதாவி எதிர்காலத்தில் ருசுப்படுத்தலாம்.

முட்டுக் கட்டை

ஜப்பானுக்கும் பிரிட்டனுக்கும் இடையே ஒரு சமாதானப் பேச்சு,

டென்ட்ஸின் சம்பந்தமாக நடந்து வந்தது உங்களுக்குத் தெரியும். அந்தப் பேச்சின் பயனாக நான்கு சீனக் குற்றவாளிகளை, டென்ட்ஸினிலிருக்கும் பிரிட்டிஷ் ஸ்தல அதிகாரி ஜப்பானியர்களிடம் பிடித்துக் கொடுத்து விட்டார். இது சர்வ தேச சங்க சட்டத்திற்கு மீறியது என்று அறிவாளிகள் அனைவரும் கண்டிக்கிறார்கள். ஆனால் பலஹீன மடைந்த பிரிட்டன் முறுக்காயிருக்கும் ஜப்பானுக்கு பணிந்துதான் ஆக வேண்டும். ஆனால், சமாதானப் பேச்சு முட்டுக்கட்டை ஏற்பட்டதைக் குறித்து நமக்கு மகிழ்ச்சி.

எங்கே விற்கும் ?

பணக்காரர் ஒருவர் தம் குடியானவனுக்குப் பணம் கொடுத்து அனுப்புவதற்காகத் தன் பெட்டியைத் திறந்து பார்த்தார். அதில் ஐந்து ரூபாய்களே இருந்தன. குடியானவன் இருபத்தைந்து ரூபாய் கேட்டிருந்தான். எனவே, அவர் 'செக்' புஸ்தகத்தை எடுத்து 25-ரூபாய்க்கு செக் எழுதிக் கொடுத்தார். "இதைக் கொண்டுபோய் பாங்கியில் கொடுத்தால் உனக்கு 25-ரூபாய் கொடுப்பார்கள்" என்றார்.

குடியானவன் :—என் சாமி! அதில் நூறு ரூபாய் என்று எழுதிக் கொடுத்தால் நூறு ரூபாய் கொடுப்பாங்களா? "ஓ! கொடுப்பாங்க!"

"சாமி! அப்படின்னா அந்த 'செக்' புஸ்தகம் எங்கே விற்குதுங்க?"

* * *

வேலையில்லை

சி. ரா. சேஷாத்திரி

கடற்கரை ஓரமாக விருக்கும் 'செனட் ஹவுஸ்' கட்டிடத்தில் இளைஞர்கள் திரள் திரளாக வந்து கூடினார்கள். சைகிள், ரிக்ஷா முதல் மோட்டார் வரை உள்ள எல்லாவிதமான வாகனங்களும் அந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன.

யுவர்கள் மாத்திரமல்ல; யுவதிகளும் இருந்தனர். ஆனால் எல்லாரும் ஒரேமாதிரியான ஒரு நூதன உடை தரித்திருந்தனர். ரோம் தேசத்து போப் பாதிரி இறந்து விட்டதால், அவருக்கு கடைசி மரியாதை செய்வதற்காக நாட்டிலுள்ள பாதிரிமார்களெல்லாம் கருப்புடை அணிந்து அங்கு கூடியிருக்கிறார்களோ எனத் தோன்றிற்று. ஆனால் போப் இறக்கவில்லை. இவர்கள் பாதிரிகளும் அல்ல. ஆனால் இவர்கள் இந்த வருஷத்தில் நடந்த பட்டப் பரீக்ஷைகளில் தேறியவர்கள். பட்டமளிப்பு விழாவுக்காக வந்து கூடியிருக்கிறார்கள்.

* * *

பலராமன் மதுரை ஜில்லாவைச் சேர்ந்த ஒரு சிறு கிராமத்தில் பிறந்தவன். அவன் பெற்றோர்கள் ஒரு நடுத்தரமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கொஞ்சம் நிலபுலன் உண்டு. ஆகையால் வறுமை என்னும் பிசாசை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாமலிருந்தது. ஒரு மூலைக்காட்டு ஹைஸ்கூலில் பத்தாவது வரை பலராமன் வாசித்துவிட்டு மேல் படிப்புக்காக மதுரை போய்ச் சேர்ந்தான்.

மதுரையில் அவனுடைய வாழ்வு மிகவும் இன்பமாகவே போய்க் கொண்டிருந்தது. மாதா மாதம் அவன் தகப்பனார் பணம் அனுப்பிக்கொண்டு வந்தார். அவனுண்டு அவன் நண்பர்களுண்டு. விளையாட்டுண்டு; படிப்புண்டு. இவைகளைத் தவிர அவனுக்கு வேறு கவலையே கிடையாது. இரவு நேரங்களில் கொஞ்ச நேரம் படிப்பான். மற்ற வேளைகளில் தன் நண்பர்களுடன் கூடி ஆங்கில இலக்கியம், கவிகள், அவர்களுடைய கற்பனா சக்தி இத்தகைய விஷயங்களைப் பற்றிய விசாரணையில் தன் காலத்தைக் கழிப்பான்.

அவன் கொஞ்சம் உழைப்பாளி. தவிர மந்த புத்தியுடையவனுமல்ல. ஆகையால் வருஷா வருஷம் பரீக்ஷைகளில் தேறுவது அவனுக்கு ஒரு பிரமாதமாகத் தோன்றவில்லை. அவனுடைய தகப்பனார், மாமா முதலிய மற்ற

உறவினர்கள் எல்லோரும், அவன் பின்னாட்களில் அனுபவிக்கப் போகும் வாழ்க்கையைப்பற்றிமிக அழகிய சித்திரங்களை அவனுக்குக் காட்டி வந்தார்கள். அவனுடைய அத்திம்பேர் ஐந்நூறு ரூபாய்சம்பளத்தில் மின்சார என்ஜினியராக விருந்தார். இன்னொரு உறவினர் ஜட்ஜாக விருந்தார்.

அவனது கல்லூரி உபாத்தியாயர்களும் இன்பகரமான வாழ்க்கையைப்பற்றித்தான் பிரசங்கம் செய்வார்கள். அவர்கள் பிள்ளைகளுக்குமுன் சித்தரிக்கும் உலகத்தில் துன்பமே கிடையாது. எல்லாம் ஒரே ஆனந்த மயம். ஆமாம். இனியும் வாழ்க்கையில் ஈடுபடாத இளங் காளைகளுக்கு, அதனுடைய துன்பங்களையும், துக்கங்களையும் எடுத்துக் காட்டி அவர்கள் மனதில் அச்சத்தையும், நிராசையையும் உண்டாக்குவதால் என்ன பயன்?

* * *

மதுரைக்கு வந்த சில தினங்களுக்குள்ளாகவே 'நவீனம்' என்னும் மாய ஜாலக்காரியின் கைவசமானான் பலராமன். இது ஒட்டுவாரொட்டி போல ஒரு தொத்து வியாதிதானே! நாளுக்குநாள் அவனுடைய தேவைகள் அதிகமாயின. ஒன்றிரண்டு தடவை 'நீ அதிகமாகப் பணம் செலவு செய்கிறாய்' என்று எச்சரித்தபோதிலும் கூட, பணம் என்னவோ அனுப்பிக்கொண்டே தான் வந்தார் தகப்பனார், அவன் பேரிலிருந்த வாஞ்சையின் காரணமாக.

கொஞ்ச நாட்களுக்குள் 'கிராப்' வைத்துக்கொண்டான். 'ஸூட்' போட ஆரம்பித்தான். டென்னிஸ் கோர்ட்டில் மெம்பரானான். ஆனால் அதிருஷ்டவசமாக இந்த மாறுபாடுகள் அவனுடைய படிப்புக்கு முட்டுக்கட்டையாக இருக்கவில்லை. வருஷா வருஷம் தேறிக் கொண்டேவந்து பட்டப் பரீக்ஷையிலும் வெற்றி யடைந்தான்.

பட்டமளிப்பு விழாவுக்கு குறிப்பிட்டிருந்த தேதிக்கு ஒரு நாள் முன்னதாக பலராமன் ஊரை விட்டுப் புறப்பட்டான். புறப்படுவதற்குமுன் ஊரில் அவனுக்குத் தெரிந்த பல பெரியோர்கள் அவனுக்கு ஆசி கூறியனுப்பினார்கள். தாய் தந்தையர்களுக்கு மட்டில்லாத சந்தோஷம். அவன் சென்னைக்கு புறப்படுவதே ஒரு பண்டிகைபோல விருந்தது.

மறுநாள் குறித்த காலத்தில் அவனும், பட்டம் பெறப்போகிறவர்களோடு ஒருவனாக கூட்டத்தில் நின்றுகொண் டிருந்தான். எல்லாரும் ஹாலில் போய் உட்கார்ந்தவுடனே, அன்று பிரசங்கஞ் செய்வதற்காக வரவழைக்கப்பட்ட பெரியார் தன் பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

" இளந்தோழர்களே!

உங்களை இந்தப் பட்டத்திற்கு யோக்கிய பாத்திரங்களாக்கிக் கொண்டு, ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டீர்கள். இதற்கு முன்பும் இந்தச் சென்னை சர்வகலாசாலை அரிய மாணிக்கங்களெனப் போற்றத்தக்க வாலிபர்களை பொதுஜன சேவைக்காக நம் நாட்டுக்கு அளித்திருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கையும் செயலும் உங்களுக்கு உதாரணம் மாத்திரமல்ல; உற்சாகமும் அளிக்கும்.

உங்களில் சிலர் அறிவின் பல துறைகளிலும் ஆராய்ச்சி செய்து பல புதிய விஷயங்களை உலகத்துக்கு தந்து அதிமேதாவிகளாக விளங்கலாம். உங்களில் எவர் நாட்டு இலக்கிய மறுமலர்ச்சிக்கும் காரணகர்த்தாவாக இருப்பாரோ?

நம் தாய் நாட்டின் முன்னேற்றமும், மேன்மையும் உங்கள் கையில் தான் இருக்கிறது. எந்த நாட்டுச் சரித்திரத்தை வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளுங்கள். அந்த நாட்டு அறிவாளி வாலிபர்கள்தான் அதன் உயர்வுக்குக் காரணமாயிருந்திருக்கிறார்கள். இன்று நம் தாய் நாடு உங்கள் சேவையை எதிர்பார்த்து ஏங்கியிருக்கிறது. எங்களுடைய காலம் எல்லாம் ஒரு மாதிரி கடந்துவிட்டது. இனி பூரா பாரத்தையும் நீங்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

ஊக்கத்தைத் தந்து, உணர்ச்சியைத் தூண்டி ஒவ்வொரு நரம்பையும் முறுக்கேற்றி ஆனந்தத்தை யுண்டாக்கிய அந்தப் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு பலராமன் வெளியே வந்தான்.

* * *

அந்தக் கால்வரையில் தொங்குகின்ற அங்கி, அதே நூதனத் தலையணி, பட்டம் பெற்றதற் கடையாளமாகக் கொடுக்கப்பட்ட காகிதச் சுருள் இவைகளுடனே அவன் மண்டபத்தைவிட்டு வெளியே வந்தான். தாகம் மேலிட்டதால் தாகசாந்தி செய்து கொள்வோமென்று கடற்கரையோரத்துள்ள சிற்றுண்டிச் சாலையில் புகுந்தான்.

அவனுக்கு கை துடைத்துக் கொள்வதற்காக கொடுக்கப்பட்ட காகிதம் இந்திய வேலையில்லாத படிப்பாளிகளைப்பற்றிய அறிக்கையின் ஒரு பாகமாகவிருந்தது. அவன் அதைக் கூர்ந்து கவனிக்கலானான். சற்று முன்பு கேட்ட அந்த பிரசங்கத்தின் வேகம் மடமட வெனக் கீழே யிறங்கியது. அந்த ஆனந்தமும் உற்சாகமும் எங்கோ பறந்தோடி யொளிந்தன. அவன் மனதை ஒரே இருள் சூழ்ந்து கொண்டது.

படிப்பை முடித்து, சர்வகலாசாலை அளித்த பட்டத்துடன் வெளியே வந்து வாழ்க்கையின் கடலோரத் தெருவில் வந்ததுமே இந்தமாதிரி ஒரு பிரசுரம் அவன் கண்ணில் பட்டது அவனுக்கு ஒரு சூசகம் போல் பட்டது.

தாய் தந்தையர், உபாத்தியாயர்கள், சர்வ கலாசாலை, பட்டமளிப்பில் பேசிய பெரியார் வரை எல்லோரும் ஒரு பெரிய சூழ்ச்சியில் ஈடுபட்டிருந்ததாக அவனுக்குத் தென்பட்டது. அவர்கள் அவனிடம் தெரிவிக்காமல் மறைத்த உண்மையை, அவன் வெளியே வந்ததும் அந்தத் துண்டுக் காகிதம் தெரிவித்தது.

அதுதான் முதல் முதலாக அவன் வேலையில்லாமல் இருந்த முதல் நிமிஷத்தில், அவன் கண்ணில் பட்டு அவன் நிலைமையை அவனுக்கு நினைப்பூட்டிற்று. ஆமாம்! அவன் இனிமேல் வேலையில்லாதவன். சர்வ கலாசாலை ஸெனட் ஹவுஸிலிருந்து வெளியே கால் வைத்த நிமிஷம் முதல் அவன் வேலையில்லாதவன்!

என்ன அடிமை உலகம்!

(வரதன்)

இடது கையில் தங்க 'ரிஸ்ட் வாட்ச்', இன்னொருகையில் வீரச் சங்கிலி, அரையில் அழகிய சேலம் 'குண்டஞ்சு' வேஷ்டி, இலேசான மந்த மாருதத்தில்கூட அசைந்தாடக்கூடிய அவ்வளவு மெல்லிய 'ஸில்க் ஷர்ட், அதற்கு மேல் போட்டிருக்கும் சலவை கலையாத 'விசிறி மடிப்பு' அங்கவஸ்திரம், காதில் வைரக்கடுக்கன், நெற்றியில் சிறிய 'ஜவ்வாதுப் பொட்டு,' ஷோக்குக் கொண்டை, உல்லாசமான முகம். இந்த அடையாளங்கள் கொண்ட நண்பர் யார் தெரியுமா? அவர் தான் மைனர் மார்க்க ஸகாயம். மைனர் மார்க்க ஸகாயம் வண்ணான் சலவைக்கும், தாசிப் பெண்ணுக்கும் அடிமை. நாளாக நாளாக பலவீனத்துக்கும் பயங்கர வியாதிக்கும் அடிமை என்பது அனுபவம்.

* * *

எதிர் வீட்டுத் திண்ணையில் ஏக அமளி. சப்தம், சச்சரவு, மௌனம், சிரிப்பு இவை மாறி மாறி நடைபெறுகின்றன. ஏன்? வேலையில்லாத ஐந்தாறு பேர்வழிகள் அடங்கிய ஒரு அஸெம்பிளி அது. காரியக் கமிட்டியின் தீர்மானம், ஆலயப் பிரவேசம், உள்ளூர் சங்க விவகாரம் எல்லாவற்றையும் பரிஷ்காரமாகப் பரிசீலனை செய்து பார்க்கின்றார்கள். கக்ஷி, பிரதி கக்ஷிகள் எல்லாம் சீறுகின்றன. முடிவு ஏ[illegible]ம் என்று நினைப்பதற்கில்லை. நியாய புத்தியும், அடக்கமும், தலை காட்டத் தயங்குகின்றன. வீணர்கள் திண்ணைவம்புக்கும், திமிர் வாதத்துக்கும் அடிமை என்பதுவெளிப்படையாகிறது.

* * *

தொட்டிலில் உள்ள குழந்தை வீறிட்டு அழுகிறது. பாயில் படுத்திருக்கும் பெரிய குழந்தை தூக்கம் வாராமல் தவிக்கிறது. தாய் கை வேலையைப் போட்டுவிட்டு வந்து தொட்டிலண்டை நிற்கிறாள். இனிய குரலில் ஒரு பாட்டுச் சொல்லி தொட்டிலை ஆட்டுகிறாள். குழந்தை குறட்டைவிட ஆரம்பிக்கிறது. பாயின் பக்கம் வந்து உட்கார்ந்துகொண்டு பெரிய குழந்தைக்கு ஒரு அருமையான கதையைச் சொல்லத் தொடங்குகிறாள். வெகு ஆவலுடன் கேட்டுவந்த குழந்தை பாதிக் கதையிலேயே பளிச்சென்று தூங்குகிறது. குழந்தைகள் பாட்டுக்கும், கதைக்கும் அடிமைகள் அல்லவா?

* * *

காந்தி முதற் கொண்டு கடைத்தெரு சுற்றும் பிச்சைக்காரன் வரையில் எல்லோரும் ஏதாவதொரு குணத்துக்கு அடிமையா

கத்தான் தோன்றுகிறார்கள். ஸர்வ சுவதந்திரன் கடவுள் ஒருவரே!

* * *

பாரதியார் பராசக்திக்கும், விடுதலை கோஷத்துக்கும் அடிமை. லோகமான்ய திலகர் தீரத்துக்கும், 'பிறப்புரிமைச்' சுயராஜ்யத்துக்கும் அடிமை. மகாத்மா காந்தி ஸத்தியத்துக்கும் அந்தராத்மாவின் அழைப்புக்கும் அடிமை. பிரதம மந்திரி ராஜாஜி சுறுசுறுப்புக்கும் சூக்ஷ்மமான துணிகரச் செயலுக்கும் அடிமை.

* * *

சேம்பர்லேன் சமாதானம் என்ற கோழைத்தனத்துக்கும், துரோகத்துக்கும் அடிமை. ஹிட்லரும், முஸோலினியும் பலாத்காரத்துக்கும், தேச ஆக்கிரமிப்புக்கும் அடிமையான இரட்டைகள். ஜூலியஸ் ஸீஸர் முகஸ்துதிக்கு அடிமை.

* * *

வக்கீல் சட்டத்துக்கும் சம்பிரதாயப் புளுகுக்கும் அடிமை. ஏழை உபாத்தியாயர் இங்கிதம் தெரியாத மனையாளுக்கும், இரக்கமற்ற இன்ஸ்பெக்டருக்கும் அடிமை. விவசாயி நிலத்துக்கும் மழைக்கும் அடிமை. டாக்டர் 'மிக்ஸ்சரு'க்கும், 'இஞ்ஜெக்ஷனு'க்கும் அடிமை. கற்புடைய மங்கை தன் கணவன் குறிப்புக்கும், சொல்லுக்கும் அடிமை. சங்கீதக்காரன் தாளத்துக்கும் லயத்துக்கும் அடிமை. ஜோஸியர் கிரகங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் அடிமை.

* * *

லோபி பணத்துக்கும் பயத்துக்கும் அடிமை. குடிகாரன் கள்ளுக்கும், மொச்சைக் சுண்டலுக்கும் அடிமை. கூத்தாடி இரவுக்கும், பவுடருக்கும் அடிமை. கூலிக்காரன் 'பாட்டுக்கும்' (வேலைக்கும்) பொழுதுக்கும் அடிமை. சோம்பேறி தூக்கத்துக்கும், மனோராஜ்யத்துக்கும் அடிமை. அமீனா வாரண்டுக்கும், ஜப்திக்கும் அடிமை. இளங்குமரன் அழகுக்கும் அந்தஸ்துக்கும் அடிமை. வயது முதிர்ந்தவர் மோனத்துக்கும் முக்திக்கும் அடிமை. 'ஸனாதனி' என்று கூறிக்கொள்பவர் 'கட்டுப்பெட்டி' சாஸ்திரத்துக்கும், கடைந்தெடுக்கப்பட்ட பிடிவாதத்துக்கும் அடிமை.

* * *

ஆசிரியர் வ. ரா. அறிவுக்கும், நடுநிலைமைக்கும் அடிமை. நீங்களும் நானும்?

சாரிக்குய ‘சகுந்தலை’
(ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி)

ஸ்ரீமதி வைதேகி விஜயராகவன்
(தமிழ் திரைக்கு வருகிறார்)

‘இந்தியத் தாயை’
தேடுகிறார்கள்!



'ஜெய் பாரதி'யில் குரப்புலி! (மோஹன் பிக்சர்ஸ்)

இந்தப் பெண்மைப் பேச்சு

(கரிச்சான்)

பெண்மைப் பேச்சு என்று பெண்மையைப் பற்றிய பேச்சைத் தான் குறிக்கிறேன்—பெண்மை பேசும் பேச்சை நான் குறிக்கவே இல்லே. பெண்மையைப் பற்றி யார் பேசும் பேச்சு பின் என்று கேட்கிறீர்கள்? ஆண்கள் பேசும் பேச்சுதான்.

பெண்மையைப் பற்றி மனிதன் பேசமட்டுமா செய்திருக்கிறுன்? எழுதியும் இருக்கிறுன். கொஞ்ச நஞ்சமா? அவனுக்குத் தலையில் மயிர் முளைத்த நாள்முதல் எழுதுகிறுன், பேசுகிறுன், இன்னும் முடிந்தபாடில்லே. முடிகிறதாகவும் இல்லே. என்னதான் இருக்கிறதோ அப்படி முடிவுபெருத ரகசியம் பெண்மையில் என்று தெரியவில்லே.

சிலர் பெண்மையைப் போற்றி ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பேசியிருக்கிறுர்கள், சிலர் பெண்மையை இகழ்ந்து பேசியிருக்கிறுர்கள். புகழ்ந்த கோஷ்டி காதலர்களும், கவிகளும். இகழ்ந்த கோஷ்டி துன்பமடைந்தவர்களும் துறவிகளும்.

'இந்திரன் கெட்டதும் பெண்ணுலே—அந்த
சந்திரன் கெட்டதும் பெண்ணுலே'

என்று பிராஸத்துடன் சொல்லலாம்; ஆனல் அந்த இந்திரனுக்கும் சந்திரனுக்கும் கெடுமதி ஏன் வரவேண்டும்? பெண்ணை ஏன் பிடித்திழுக்க வேண்டும்? அவள் தெய்வமே என்று இருக்கும் பொழுது அவள் மீது பழி சுமத்துவது அக்கிரமந்தானே?

கவிகளேயும் காதலர்களேயும் கேளுங்கள். பெண்ணுல்தான் பிறவியே பூத்து விரிகிறது என்று சபதம் செய்வார்கள். பெண்ணுல்தான் பெரிய காரியங்கள் நடந்திருக்கின்றன. பெண்தான் பேரவாக்களைத் தூண்டுகிருள். பெண்தான் வீரத்தின் காரணம்; பெண் செயலுக்கு மூலம், அவள்தான் சக்தி, அவள்தான் சகல மும்! அவளின்றி அணுவும் அசையாது. இப்படி இலக்கியத்தில் பெண்ணை மனிதனை ஓட்டும் ஒரு மாய இயந்திரமாகவே செய்திருக்கிறுர்கள்.

இத்தனை நாள் இந்தப் போற்றுதலுக்கும் பணிக்கும் உட்பட்டு வந்த பெண் இன்று அதிருப்தி கொண்டு விட்டாள்.

"இந்தப் போற்றுதலும் பணியும் எனக்கு வேண்டாம். நான் முதலில் நானாக இருக்க வேண்டும். பிறகு தான் மனிதனுக்கு உதவி செய்யக்கூடும். நானும் மனிதனைப்போல உணர்ச்சி பொங்கும் ஒரு உயிர், மனிதனை ஆட்டிவைக்கும் மாயை மட்டுமல்ல நான். நானும் எண்ணங்களும் ஏக்கங்களும் கொண்டவள். மனிதனை மலரச்செய்வது மட்டுமல்ல என் வேலை. நானுமே மலர வேண்டும்" என்று பெண் சொல்லுகிறாள்.

பெண் மனிதனைப் பார்த்து, "நானும் உன்னைப்போல ஆவேன்!" என்கிறாள்.

இந்த ஆசையில் அவள் தன் கவர்ச்சியைக் கூட இழக்கத் தயாராக இருக்கிறாள். அழகை இழக்க முன்வருகிறாள்.

"என் அழகால் இனிமேல் நான் மனிதனை மயக்க விரும்பவில்லை" என்கிறாள்.

"அச்சம், மடம், நாணம் என்ற குணங்கள் என்னைப் பொம்மையாக்கி விட்டன. எனக்கு இனி அவை வேண்டாம். என் உணர்ச்சி அலைகளுக்கு நானும் இடம் கொடுத்து வளர்வேன். நான் பதுமையல்ல; நானும் ஒரு பிறவி!" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறாள்.

இதுவரையில், உலகம் சிருஷ்டியானது முதல், மனிதனே பேசிக் கொண்டிருந்தான். இப்பொழுது பெண் பேசுகிறாள். இத்தனை யுகங்களாகக் கட்டிக்கிடந்த அவள் குரல், இளவேனிற் காலத்துக் குயிலின் குரல் போல, இன்று ஒலி கொள்ளுகிறது. அதை யார் இனிமேல் தணிக்க முடியும்? ஏன் தணிக்க வேண்டும், என்றும் கேட்கலாம்.

இனிமேல் மனிதனின் வாய் அடைபட்டுப் போகும். இனி அவன் பெண்ணைப் பற்றிப் பாட முடியாதவனாகி விடுவான். பெண்ணைக் கண்டு இனி அவன் பரவசமாக மாட்டான். காதலர்களும் கவிகளும் ஏட்டைக் கட்ட வேண்டியதுதான்.

புதுமைப் பெண்ணுடைய போக்கின் அர்த்தம் இதுதான். மனிதனுடைய காதல் அவளுக்குக் கர்ணகடூரமாகி விட்டது. அதைக் காது கொடுத்துக் கேட்கச் சகியாது ஓடுகிறாள். அவன் அன்பின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டால் போதுமென்று துடிக்கிறாள். மூச்சுத் திணறுகிறது அவளுக்கு. வெளிக்காற்றை விரும்புகிறாள்.

மனிதன் அப்படி மாய்த்து விட்டான் அவளைத் தன் அன்பால்— அவள் என்ன செய்வாள்?

நாக்கு நீளம்!

அசுவதி

மனிதனுக்கு மனிதன் உயரம், பருமன் இவைகளில் வித்தியாசம் இருப்பதற்குத் தக்கபடி நாக்கும் வித்தியாசமாக இருக்கத் தானே வேண்டும்? அப்படியிருக்க நாக்கு நீளம் என்று ஒரு தனிப்படுத்தின மதிப்புக் கொடுப்பதிலே என்ன விசேஷ இருக்கிறது?—என்று தான் எனக்குத் தோன்றிற்று முதலில்.

ஆனால் பிற்பாடு தெரிந்து கொண்டேன், உடல்அமைப்புக்கு ஈடுகட்டின அளவை, நீண்ட தன்மையை, அது குறிப்பிடவில்லை என்று.

அவளுக்கு கால் நீளம் என்று ஒரு சந்தர்ப்பத்தில் யாரோ சொன்னார்கள். அதாவது அவளோ, அவனோ இருக்கும் இடத்தைவிட்டு முறைபிசகி ஓடிப்போய்விடக் கூடியவன், கூடியவள் என்று அதற்கு அர்த்தம்.

கை நீளம் என்று இன்னொரு சந்தர்ப்பத்தில் இன்னொருவனைப் பற்றிக் கூறினார்கள். அதாவது அவன் திருடக்கூடியவன் என்று அதற்கு அர்த்தமாம்.

அந்த ரகத்தில் சேர்ந்தது தானா இந்த நாக்கு நீளம் என்பதும்?

பிரஸ்தாப சந்தர்ப்பங்களில், மனிதனுக்கு இயற்கையாக, ஒழுங்கான காரியங்களைச் செய்வதற்குக் கடவுளால் கொடுத்திருக்கப்படும் கை, கால்களை, அவன் அந்த ஒழுங்கை மீறி, கீழ்த்தர, இயற்கைக்கு முரணான காரியங்களை செய்வதில் ஈடுபடுத்தினதை, அந்த குணவிசேஷத்தைக் காட்டும் ஒரு தனிச் சொல்லாகத்தான் அவை அமைந்திருக்கின்றன.

அதே மாதிரி சுத்தமாகவும், தெளிவோடும் பேசுவதற்காக கொடுக்கப்பட்டிருக்கும் நாக்கை, வரம்பு மீறின தொனியில் உச்சரிப்பதைத்தான் 'நாக்கு நீளம்' அல்லது 'நீள நாக்கு' அவனுக்கு என்று சொல்லுகிறார்கள்.

'நாக்கை இழுத்து வைத்து அறுக்க வேண்டும் இந்த வார்த்தைகளை அவன் சொன்னதுக்கு' என்று பல்லைக் கடித்துச் சொல்லுகிறார்களே! அந்த வார்த்தை, இந்த நாக்கு நீளம் என்பதிலிருந்துதான் பிறக்கிறது. காரணம், அந்த வார்த்தைகளை, நேர்மைக்கு முறண்பாடானதாகக் கருதப்படும் அந்த சொற்களை வெளி உலகக் காதுகள் கேட்கத் தயாராக இல்லை.

இந்த மாதிரி, 'நாக்கை அறுக்க வேண்டும்' என்ற ஒரு நினைப்பு—மரியாதை வார்த்தையாக இவர்களுக்கு நாக்கு 'நீளம்' என்ற சிந்தனை—சமீபத்தில் ஒரு சங்

தர்ப்பத்தில் எனக்குத் தோன்றியது. சந்தர்ப்பம் எல்லோருக்கும் தெரியவேண்டியதுதான்.

நான்கு நண்பர்கள் டிராம் வண்டியில். ரொம்ப குஷியான பேச்சு. ஒரு சின்ன பாவனை நாடகம்; அதாவது ஒரு நையாண்டி சம்பாஷணை. சம்பாஷணை ரசமாக இருந்தது. நையாண்டி நடிப்பின் சாதுர்யம் வியக்கத்தக்கதாக இருந்தது.

எதிர் சீட்டில் ஒரு யுவதி. அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. வாய் விட்டுச் சிரிப்பதற்கும் அவள் பெண்மை அடக்கம் தடை போட்டது. முதலில் உதடுகளை அமிழ்த்திக் கொடுத்தாள். பிறகு பல்லால் உதட்டைக் கடித்துக்கொண்டாள். அதற்கும் மீறின சிரிப்பு வரவும், கையில் பிடித்திருந்த புஸ்தகத்தை உயர்த்தி உதட்டிற்குமுன் மறைத்துக் கொண்டாள்.

கொஞ்ச தூரம் போனதும், அந்தப் பெண் இறங்கிப் போய் விட்டாள். நண்பர்களிடையே பேச்சு மாறினது.

'எனப்பா, சிரிப்புத்தான் வருகிறதே, வாய்விட்டுச் சிரித்து விட்டால்தான் என்ன?'

'இல்லேடா, அதற்குப் பெயர் தான் புன்னகை. தெரியுமா?'

'ஆமடா, முத்து உதிர்ந்து போய் விட்டால், அப்புறம்?'

'போடா போ. அதுதான் பெண்மை! சிரித்தும் சிரிக்காமலும், பார்த்தும் பார்க்காமலும்! அதிலேதான் ஜோரே இருக்கிறது.'

என்னைப்போல் எல்லோருமே அந்தச் சந்தர்ப்பத்தில் 'நாக்கை அறுத்தால்' என்று தான் கட்டாயம் நினைத்திருப்பார்கள். மனிதன் வரம்பு மீறிச் செய்யும் காரியத்துக்குச் சட்டம் தடைக் கட்டுகிறது. நேர்மையில்லாமல் பேசும் வார்த்தைகளுக்குச் சமூகக் கண்யதை, மரியாதைக் குணம் தடைக்கட்டுகிறது.

பெண்மையை வெளிக்காட்ட அந்த யுவதி அடக்கம் காட்டினதிலே தன் மதிப்பை எவ்வளவு உயர்த்திக்கொண்டாள்? நாக்கின் போக்கைத் தடை செய்யத் தவறினதிலே அந்த யுவர்கள் எவ்வளவு தங்களைத் தாழ்த்திக் கொண்டு விட்டார்கள்?

வரம்புச் செய்கையை மீறுபவனைதண்டிப்பதுபோல்,நேர்மை பிசகினவார்த்தைக்காரனையும் இகழுகிறோம். அவன் மனிதனில்லை என்று சொல்லி விடுகிறோம். ஏன்? 'அவன் சகோதரிகளோடு பிறக்கவில்லை; அதனால் தான்,'— இப்படிப் பச்சையாகக் கூட சொல்லி விடுகிறோம்.

பேசும் நாக்குக்கு அடக்கம் வேண்டும்; அப்போதுதான் அதற்கு மரியாதை கிடைக்கும். 'மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு' என்று பழமொழி.

நாக்கின் மதிப்பில்தான் மனித அந்தஸ்தே தொங்கிக் கொண்டிருக்கிறது. சுத்தமான நாக்கு இல்லாதவனுக்கு ஒரு நிலையான ஸ்தானம் கிடைப்பதில்லை. சொத்து வேண்டாம்; வாக்கு சுத்தம் இருந்தால் போதும். நாணயம் வேண்டாம்; நாணயமாக நடந்துகொண்டால் போதும்.

அகத்தியன் வைத்தியம்

மதுமேக (Diabetes) ரோகம் உண்டாவதற்குக் காரணம்.

இம் மதுமேக ரோகம் உண்டாவதற்கு அநேக காரணங்கள் உண்டு. அதாவது:—

1. சரீரத்திற்குத் தேவையான தேகப் பயிற்சி இல்லாமை.

2. அளவிற்கு மீறிய சங்கமம்.

3. துர் வியாதிகளுள்ள ஸ்திரீ புருஷ சம்பந்தம்.

4. அதிகமான மனக்கவலையும் ஆழ்ந்த சிந்தனையும் மூளைக்குக் கொதிப்புண்டாக்குதல்.

5. பிரமேக ரோகம் முதிர்ச்சியாவதால்.

6. சரீரம் அதிக உஷ்ணமாக இருக்கையில் மிகக் குளிர்ந்த ஜலங்குடித்தல்.

7. உள் அவயவங்களின் சிற்சில தொந்த வியாதிகள் சில சூட்சம நாடி நரம்புகளைப் பற்றுதல்.

8. ஒரே இடத்தில் வாசஞ் செய்வதுடன் ஒரே ஆசனத்தில் சதா உட்கார்ந்திருத்தல்.

9. சுரா பானம் புகை வஸ்துக்களை அளவு கடந்து உபயோகித்தல்.

10. சரீரத்திற்கு அதிக கொழுப்புண்டாக்கக்கூடிய இறைச்சிகள், மாவினால் செய்த பண்டங்கள், நூதன ஆகாரங்கள், மதுரமான வஸ்துக்கள் முதலானவைகளை மிதமின்றி உபயோகித்தல்.

11. வம்ச பரம்பரையாக வரும் வியாதிகளும் மதுமேக ரோகம் உண்டாவதற்கு காரணங்களாக இருக்கின்றன.

மேற்கூறிய காரணங்களால் பலவீனமடைந்த சரீரங்களில் அதி சீக்கிரத்திலும், பலமுள்ள சரீரங்களில் நாளடைவிலும் இக் கொடிய வியாதியின் உபத்திரவங்கள் காணப்படுகின்றன.

பெரும்பாலும் இம் மது மேக வியாதியின் ஆரம்பக் குறிகளை முதலிலேயே தெரிந்து கொள்ளாமல், உண்மையாகவே இது விஷயத்தில் ஏமாற்றமடைந்து நாளடைவில் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டு அதினின்றும் மீள முடியாமல் பெருந்துன்பங்களை அனுபவிக்க நேருகிறது.

மதுமேக ரோகத்தின் ஆரம்ப லட்சணங்கள் :—

இந்த வியாதி சரீரத்தில் பற்றியவுடன் சில தினங்களுக்குள்ளாகவே வாத, பித்த, சிலேஷ்ம சரீரங்களுக்குத் தக்கவாறு வெவ்வேறு விதங்களான லட்சணங்களைக் காண்பிக்கின்றது.

அதாவது நாவில் இனிப்புச் சுவட்டுதல், சுவாசம் வெளி வரும் போது ஓர் வித காடி வாசனை வீசுதல், சரீரத்தில் திடீரென ஓர் விதமான எரிச்சல் உண்டாகி உடனே அடங்கிவிடுதல், சொற்ப வேலைகள் செய்யினும் அதிகமான வியர்வை காணுதல், பசி மந்தப்படுதல், உட்கார்ந்திருக்கும்போது நடக்கவும், நடக்கும்போது நிற்கவும், நிற்கும் போது இளைப்புண்டாகுதல், தலை, கை, கால்கள் சக்தியற்றவைபோல் தோன்றுதல், சோம்பலை உண்டாக்குதல், சரிவர நித்திரை யில்லாமை, சரீர தேஜஸ் நாளுக்கு நாள் குறைவுபடுதல், மிகுந்த குளிர்ச்சியான ஜலத்தை அருந்த அவா தோணுதல், அடிக்கடி நீர் இறங்குதல், சயன சுகமில்லாமை முதலிய இவைகள் இம் மது மேக ரோகத்தின் ஆரம்ப லட்சணங்கள். இதன் பிறகுதான் மற்ற உபத்திரவங்களெல்லாம் உண்டாகின்றன.

இந்த லட்சணங்களைக் கண்டவுடன் வியாதிஸ்தர்கள் தாமதிக்காமல் நீர் பரீட்சைகளைச் செய்து நீரில் சர்க்கரை இருப்பதாக ஏற்பட்டால், உடனே அதைத் தடுத்துக்கொள்ளும் உபாயங்களைச் செய்து இக்கொடிய வியாதியை மேன்மேலும் விருத்தியாகவிடாமல் ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும்.

மது மேக ரோகத்தை மேன்மேலும் முதிர்ச்சியடைய விடாமல் தடுத்துக் கொள்ளும் உபாயங்கள் பலவாயினும், பிரதானமானது ஆகார நியமமேயாகும்.

ஆகார நியமங்கள் இல்லாத சரீரத்தில் இந்த கொடிய வியாதி மிகவும் பரபரப்புடன் ஓங்கி வளர்ந்து விடுகின்றது.

மேலும் இவ்வியாதி சரீரத்தில் பற்றியிருக்கும் சமயத்தில் சரீர சம்பந்தம் ஏற்படுமேயானல் ஒருவர் சரீரத்தில் இருக்கும் வியாதி மற்

ெருவர் சரீரத்தில் கலந்து, அவர்களுக்கும் உபத்திரவங்களை உண்டாக்குவதுடன், கர்ப்பத்தில் கருத்தரிக்கும் பிண்டத்திலும் இவ் வியாதியானது பிரவேசித்து, பரம்பரை வியாதியாக தொடர்ந்து கொண்டே வருகிறதாகையால், வியாதிஸ்தர்கள் ஆகார நியமத்துடன் இவ்விஷயத்திலும் மிகவும் ஜாக்கிரதையாக இருந்துகொள்ளல் வேண்டும்.

உழைப்பில்லாத சரீரங்களில் மாத்திரம்தான் மதுமேக ரோகம் தோன்றுகிறதே தவிர, சரீர உழைப்புள்ள தொழிலாளிகளுக்கு இந்த வியாதி அநேகமாகத் தோன்றுவதே கிடையாது.

ஏனெனில், உழைப்பாளிகள் நாள்தோறும் கடினமான வேலைகளைச் செய்து வியர்வை சிந்தும்படி கஷ்டப்படுவதால், அவர்களுக்கு சரீரத்தில் துர்நீர்கள் மேன்மேலும் அதிகரிக்காமலும், நாளுக்கு நாள் சரீரம் பருத்து மேதோதாது (கொழுப்பு) விருத்தியாகாமலும், மூலாதார ஜாடராக்கினி சுடர் விட்டெறிந்து ஜீரணசக்தி அதிகரித்து எவ்வகையான உணவுகளையும் உட்கொண்டு சுலபமாகச் ஜீரணிக்கச் செய்து கொண்டு, திடகாத்திர சரீரமுடையவர்களா யிருப்பதால், மது மேக ரோகமெனும் கொடிய சர்ப்பம் உழைப்பாளிகளின் சரீரத்தைத் தீண்டுவதே கிடையாது. ஆதலால் மது மேக ரோகத்தையுடையவர்கள் சரீரப் பயிற்சி செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

மது மேக ரோகத்தைத் தடுத்துக் கொள்ளும் உபாயங்கள்.

1. சரீரப் பயிற்சி :—சூரிய உதயத்துக்கு முன் படுக்கையை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, சரீரத்திற்கு மிகவும் கஷ்டத்தை உண்டாக்காத சரீரப் பயிற்சிகளைச் செய்து வியர்வையை வெளிப்படுத்துதல்.

2. சூரிய நமஸ்காரம் செய்தல் :—அதிகாலையிலும் மாலையிலும் கடற்கரை, ஆற்றங்கரை மரங்களடர்ந்த சோலை, பூந்தோட்ட ஓரங்களில் இரண்டொரு மைலுக்குக் குறையாமல் நடத்தல், சாயங்கால வெயில் சரீரத்தில் படும்படி உலாவுதல், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தல், குதிரைச் சவாரி செய்தல், பந்தாடல் முதலியவைகளில் ஏதாகிலும் இரண்டொரு பயிற்சியைத் தினந்தோறும் தவறாமல் செய்து வரவேண்டும்.

(தொடரும்)

மருந்துடன் விருந்து!

வ. ரா

குணவதி அப்பொழுதுதான் கடற்கரையிலிருந்து திரும்பி வந்தாள். இரவு எட்டு மணி இருக்கும். வீட்டுக்கு வந்ததும் வராததுமாக, ‘அப்பா, அப்பா’ என்று கூப்பிட்டுக் கொண்டே, தகப்பனார் இருக்கும் அறைக்கு ஓடினாள்.

குணவதிக்கு வயது இருபது இருக்கும். அவள் குமாரசாமி முதலியாரின் தனிப் பெண். முதலியாருக்கு, வேறு ஆண் சந்ததி கிடையாது. ஆகவே, குணவதி, வீட்டில் செல்வமாக வளர்ந்த குழந்தை. இந்த மாதிரி வளர்ந்த குழந்தைகளுக்கு சிறிது தைரியமும் சுதந்திரமும் அதிகமாக இருப்பது இயல்பு.

குணவதி எம். ஏ-க்கு படித்துக் கொண்டிருக்கிறாள். இன்னும் கலியாணமாகவில்லை. கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறாள். காரணம் என்ன என்று கேட்கிறீர்களோ? ஆண் பிள்ளைகள் மோசக்காரர்கள் என்ற மாமூல் காரணம்தான்.

குமாரசாமி முதலியாருக்கு கை நிறைய, பை நிறைய பென்ஷன் வந்துகொண்டிருக்கிறது. அவருக்கு ஒரே ஒரு வேலைதான் பிடித்தம். காந்தி என்ன சொல்லுகிறார்? அவரைப்பற்றி, மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? என்பதைக் கவனிப்பதுதான் அவருடைய வேலை.

குணவதிக்கு தகப்பனாரிடம் ரொம்ப பிரியம். அதனாலே காந்தியிடமும் சிறிது ஒட்டுதல். நேர்முகமாக, குணவதிக்கு காந்தியின் தத்துவத்தில், அவ்வளவாகப் பிரியமும் பக்தியும் கிடையாது. தகப்பனாருக்காக, காந்தியைக் குறைத்துப் பேசுவதில்லை குணவதி.

அவளுக்கு வெள்ளைக்கார நாகரிகத்தில் கொஞ்சம் பிரியம். பழைய கர்நாடக வழியில் இந்தியா இருக்கும் வரையில், இந்தியா ஒரு நாளும் உருப்படப்போவதில்லை என்று சாபம் கொடுத்த வண்ணமாயிருப்பாள். ஆகவே, அவளுக்கும் தகப்பனாருக்கும் அடிக்கடி வாதம் உண்டாகிவிடும்.

காந்தி வழி தவறு என்பாள் குணவதி. அதைத தவிர வேறு வழி கிடையாது என்பார் முதலியார். மதுவிலக்கும், ஆலயப் பிரவேசமும் சுயராஜ்ய சாதனங்களா என்று குணவதி கேலி செய்வாள். ‘சுயராஜ்யம் என்பது இன்னதென்று உனக்கு விளங்காததினாலே, நீ அந்த மாதிரி சொல்லுகிறாய்’ என்று முதலியார் தன் செல்வக் குமாரியிடம் அன்புடன் சொல்லுவார்.

‘அப்பா’ என்று கூப்பிட்டுக் கொண்டு போன குணவதியை, அறையிலிருந்தே, வா என்று வர

வேற்றூர் முதலியார். "என்ன அம்மா, இன்றைக்குப் புதியவிசேஷம்" என்று கேட்டார்.

"இன்றைக்கு, கடற்கரையிலே பிரம்மாண்டமான ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்தில், காந்தி வழியை, பேச்சாளர்கள் அனைவரும் துளைத்துத் தள்ளிவிட்டார்கள். காந்தித் தத்துவம் சல்லடைக்கண்ணாகப் போய்விட்டது" என்றாள் குணவதி.

"எப்படித் துளைத்தார்கள்? சொல், பார்ப்போம்" என்றார் முதலியார்.

"அரசியலில் முன்னேற வேண்டுமானால், அதற்கேற்ற சாதனங்களைக் கையாளாமல், மது விலக்காம், ஆலயப் பிரவேசமாம், தீண்டாமை விலக்காம், விற்பனை வரியாம், கடன் நிவாரண மசோதாவாம்.........என்ன அசட்டுத்தனமான வேலைகளைச் செய்கிறார்கள்! அரசியல் லட்சியத்துக்கு அரசியல் சம்பந்தமான சாதனங்களைக் கையாள வேண்டும். வைத்தியம் செய்ய வேண்டிய இடத்தில் மாந்திரீகத்தை உபயோகப் படுத்தும் அபத்தத்தைப் போல இருக்கிறது காந்தி வழி என்று எல்லாரும் காந்தியைப் பிய்த்து விட்டார்கள்" என்றாள் குணவதி.

"அவர்கள் எல்லாரும் குழந்தைகள். வீடு என்றால் சமையல் கட்டு, கூடம், தாழ்வாரம், குளிக்கும் இடம், சிநேகிதர்களோடு பழகும் அறை—எல்லாம் சேர்ந்ததுதான். இவைகளைப் பிரித்துப் பிரித்து, தனியாகக் கட்ட முடியாது. கட்டினால் அது வீடு அல்ல. அதைப்போலவே, வாழ்க்கையைப் பிரித்துப் பிரித்து, துண்டு போட முடியாது. வீடும் நாடும் ஒரே லட்சியத்தைக் கொண்டதாகத்தான் இருக்க வேண்டும். வீடு செழித்தால் தான், நாடு செழிப்புடன் இருக்க முடியும். தனி மனிதன் தெம்போடு இருந்தால்தான், ஒரு நாட்டிலுள்ள அத்தனை பேர்களும் தைரியத்துடன் இருக்க முடியும்" என்றார் முதலியார்.

"பழைய பாடம் தான்"

"பழசு என்ற காரணத்தால், ஒரு பொருளின் உண்மை அழிந்து போய் விடுமா? பழசு என்ற காரணத்தாலேயே, அது வலுவுள்ளது என்றும், உறுதி கொண்டது என்றும், அதற்கு அர்த்தம் செய்து கொள்ளவேண்டும்" என்று முதலியார் சொன்னார்.

"பழசு என்றால் சத்து இழந்தது என்று சொல்லப்படாதோ?"

"அப்படியும் சொல்லலாம்; ஆனால் சந்தர்ப்பத்தையும் பொருளையும் ஒட்டிச் சொல்லவேண்டும். தினம் அடிக்கிற காற்று பழசா? தினம் தவறாமல் சாப்பிடும் ஆகாரம் பழசா? தினம் காய்கிற வெயில் பழசா?

"காந்தி கர்னடகம் என்று சொல்லுகிறார்களே, அவர்கள் எதைப்போல இருக்கிறார்கள், தெரியுமா? வைத்தியனிடத்தில் மருந்தும் சாப்பிடவேண்டும். பத்தியம் கூடாது. விருந்தில் ஒன்றும் குறையாமல், உடம்பு குணமாகி விடவேண்டும் என்று வக்கணை பேசுகிறார்களே, அந்த மாதிரி கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். அதைப்பற்றி, நாளைக்கு விரிவாகப் பேசுகிறேன்" என்றார் முதலியார்.

மாடம் (ஸ்ரீமதி) தபூவா

'இன்று நான் உங்களிடம் சொல்லிக்கொண்டிருக்கும் விஷயம் என்னவென்று நேற்று எனக்குத் தெரியாது. ஆனால் நேற்றே மாடம் தபூவாவுக்குத் தெரியும். அவ்வளவு புத்திசாலி அவள்!"

இந்த வார்த்தைகள் ஹிட்லரே சொன்னது!

மாடம் ஜினேவி தபூவா என்பது அவளுடைய முழுப் பெயர். பிரஞ்சு தேசத்தவள். உலக வியவகாரங்களைப்பற்றி எழுதிக்கொண்டிருக்கும் ஒரு பத்திரிகைக்காரி.

அவளுடைய பத்திரிகைத் தொழில் வாழ்க்கை ஐரோப்பாவின் சரித்திரப் போக்கையே மாற்றி இருக்கிறது. அவ்வளவு தூரம் ராஜீய வியவகாரங்களில் ஜோஸ்யம் சொல்வதில் நிபுணி. அவளுடைய சாதுர்யமான, அழுத்தமான பேனாதான் ராஜதந்திர சூழ்ச்சித் திரைகளை யெல்லாம் குத்திக் கிழித்து வெளிக்காட்டி விடுகிறது.

ஹிட்லருக்கு அவளைப் பிடிப்பதில்லை!

ஆயிரக் கணக்கான பேர்கள் ஹிட்லரைப்பற்றி எவ்வளவோ எழுதி இருக்கிறார்கள். அவர்களை எல்லாம்பற்றி ஒரு வார்த்தை பேசாத ஹிட்லர், ஜெர்மன் பார்லிமெண்ட் சபைக்குமுன் இந்த ஸ்திரீயைப்பற்றி வெறுப்போடு பேசினார் என்றால், அது போதாதா அவளுடைய வல்லமையைக் காட்டுவதற்கு?

அவள் ஒரு சாதாரண ஸ்திரீதான். ஆயினும் ஒரு தடவைக்கு இரண்டுதரம் சர்வாதிகாரிகள் யோசித்துச் செய்யும்படியாக வைத்து விடுகிறாள்!

ஏன், எதியோபியாவை இத்தாலிக்குப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு பிரஞ்சு மந்திரி லவால், பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரி ஸர் ஸாமுவேல் ஹோரோடு சூழ்ச்சி செய்துகொண்டு இருந்தபோது சொன்னார்: 'மாடம் தபூவாவைப்பற்றி நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; அவள் ரொம்ப ஆபத்தான பேர்வழி' என்று.

இவ்வளவு எல்லாம் அவர்கள் உஷார்படுத்திக் கொண்டிருந்த போதிலும் பிரயோசனம்? இருவரையும் மந்திரி பதவியைவிட்டுப் போகும்படி செய்துவிட்டாள் அவள். ரோம், பேர்லினைப்போல் லண்டனும், பாரிஸும் கூட இந்த நிலைமை ஏற்படுத்தியதற்காக அவளிடம் வெறுப்புக் காட்டினது. அவள் லக்ஷியம் செய்தால்தானே!

பிரிட்டனும் பிரான்ஸும் சர்வதேச சங்கத்தோடு சேர்ந்து எதியோபியாவை காப்பாற்றுவதற்குத்தான் வழி செய்து கொண்டிருந்தார்கள் என்று உலகம் நம்பிக்கொண்டிருந்தது. ஆனால் உள்ளே நடந்தது வேறு. இத்தாலிக்குச் சொந்தமான உபயோகமற்ற ஒரு பிரதேசத்தை அபிசீனியாவுக்குக் கொடுத்துவிட்டு, அபிசீனியா

வின் செழுமையான ஒரு பெரும் பகுதிப் பிரதேசத்தை இத்தாலிக்கு கொடுத்து விடுவதென்று சூழ்ச்சி திரை மறைவில் வெகு ரகசியமாக பிரிட்டிஷ், பிரஞ்சு ராஜீயவாதிகளிடையே நடந்துகொண்டிருந்தது.

உலகத்திலேயே சுமார் ஆறு பேருக்குமேல் இதுபற்றிய தகவல் எட்டி இருக்காது, நிச்சயமாக. ஆனால் ஒன்றைத் தவிர்த்து விவரம் எல்லாம் தபூவாவுக்குத் தெரியும். இத்தாலிக்கு கொடுக்கப் படும் பிரதேசம் எவ்வளவு என்றுமட்டும் திட்டமாகத் தெரியாது. அதை அவள் அறிந்து கொண்டவிதம்தான் விசித்திரம்!

ஒரு பிரஞ்சுப் பிரபு வீட்டில் விருந்து. எதியோப்பிய பிரச்னை பற்றி முடிவு ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருக்கும் ஒரு நிபுணருக்கு அடுத்தாற்போல் உட்கார்ந்து கொண்டிருந்தாள் மாடம் தபூவா. ஒரு குறிப்பிட்ட உணவுப் பதார்த்தத்தில் அவர் தன்னையே மறந்து சாப் பிட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பம் வரவும், குரலைக் கொஞ்சமும் மாற் றாமல் கேட்டாள்.

"ஆமாம்,.....இந்தப் பிரதேசங்களை எல்லாம் இத்தாலிக்கு அவர் கள் கொடுத்துவிடுவார்கள் என்று நினைக்கிறீர்களா?"

'ஹுஹும்!...அதையும் சேர்த்துதான் கொடுக்க வேண்டி இருக்கும் என்று நினைக்கிறேன்' என்று சாப்பாட்டு சுவாரஸ்யத்தில் சொல்லிவிட்டார் அவர். என்ன சொல்கிறோம் என்ற நினைவே அவ ருக்கு அப்போது இல்லை.

இது தான் மாடம் தபூவாவுக்கு வேண்டியது. மத்தியதரைக் கடலில் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள, எதியோபியா வின் செழிப்பான 1,50,000 மைல் சதுரத்தை இத்தாலிக்குக் கொடுக்கச் செய்த சூழ்ச்சியை, குட்டை, உலகத்துக்கு உடைத்து விட்டாள்!

வெடிகுண்டு மாதிரி அந்தச் செய்தி வந்து விழுந்தது. இது பிரிட்டிஷ் மந்திரிகளுக்கே அவள் சொல்லித்தான் தெரியும். ஹோருக்கு பதில் ஈடன் அன்னிய நாட்டு மந்திரியானதும், லவால் வீழ்ச்சியும், தொடர்ந்தன. இரு சர்க்கார்களும் மாடம் தபூவாவின் செய்தியை மறுத்துப் பார்த்தார்கள். ஈடன் அந்த செய்தியை ஊர்ஜிதப்படுத்த நேர்ந்தது பிறகு.

ஸ்பெயின் கலகத்தில் ஜெர்மன் இத்தாலிய படைகள் கலந்து கொள்வதையும் அவள் தான் தெரிவித்துவிட்டவள். பிரஞ்சு மொராக் கோவுக்கு அடுத்தாற்போல் ஸ்பானிய மொராக்கோவில் ஜெர்மன் ராணுவ நிபுணர்கள் சேகரம் ஆவதையும், பிரசாரம் செய்து கடற் படை, தளம், நீர்மூழ்கிகள் சேகரிப்புக்கு ஏற்பாடாவதையும் அறிந்து கொண்டு விட்டாள். 1937 ஜனவரியில் பல படைகள் வந்து கொண் டிருப்பதையும், மொராக்கோவின்மேல் ஹிட்லர் கண்வைத்திருப்பதை யும் சொன்னாள்.

பிரெஞ்சு சர்க்காருக்கு இது தெரியாமல் இல்லை என்றாலும், அவள் கொடுத்த முழுத் தகவலின் வேகத்தில்தான் தானும்

படையை மொராக்கோவுக்கு அனுப்பினது. ஹிட்லர் கூட தயங்கி விட்டார் பிரஞ்சு முஸ்தீப்பைக்கண்டு.

ஜெர்மனிக்கு எதிராக ஒரு பெரிய படை பலத்தின் சக்தியை உபயோகிக்கும்படியான அவ்வளவு வலிமை இருக்கிறது தபூவாவின் எழுத்துக்களுக்கு. ஏனென்றால், ஜெர்மன் ராணுவ திட்டங்களில் ரகஸ்யம்தான் பிரதானம். ரொம்ப அந்தரங்கமாக வைத்திருந்து திடீரென அதிரடியில் காரியத்தைச் செய்வதில்தான் அவர்கள் வெற்றியே இருக்கிறது.

இதனால்தான் ஹிட்லர் மாடம் தபூவாவைத் தாக்குகிறார். ஜெர்மனியில் ஒவ்வொருவருக்கும் அவள் பெயர் ஞாபகம் இருக்கும் படியாக, அவ்வளவு அவர்களே அவளைக் கண்டித்து பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

செகோஸ்லோவேகியா நெருக்கடி மார்ச் 11ம்தேதி வரலாமென்று போனவருஷம் சில வாரங்களுக்கு முந்தியே எழுதிவிட்டாள். மறுநாள் 12ம் தேதி ஜர்மன் படை பிரேக்கில் நுழைந்தது. அவள் சில வாரங்களுக்குமுன் எழுதினபோது, 'பொய் சொல்பவள்' என்று பாரிஸ் பத்திரிகைகளே எழுதினது.

ரைன்லாந்தை ஜெர்மனி மறுபடி பிடித்துக்கொள்ளப் போவதையும் 1936ல் உலகத்துக்கு முதலில் தெரிவித்தாள்.

குழந்தை முதலே ராஜீய சதுரங்கத்தில் வளர்ந்து வந்திருக்கிறாள் மாடம் தபூவா. பாரிஸ் நகரத்தில் பணக்கார குழந்தைப் படிப்பு படித்தபோதிலும், சிப்பாய்கள், மந்திரிகள், தூதர்கள், அவர்களுடைய மனைவிகள், வைப்புகள் இவர்களோடு பேசிப் பல விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருப்பதுதான் அவள் படித்த உண்மையான படிப்பு. அவள் புகை பிடிப்பதில்லை. ரொட்டி, டீ, பழம் இவைதான் அவளுக்கு ஆகாரம் மதுபானம் செய்வதில்லை.

ஆரம்பத்தில் ஸர்வதேச சங்கக் கூட்டம் ஒன்றைப்பற்றி அவள் வேடிக்கையாக எழுதினதுதான் அந்தத் துறையில் அவளுக்கு ஒரு வழி காட்டியது. இந்த பதினெட்டு வருஷங்களாக அவள் ஒரு ஸர்வதேச சங்க மஹாநாட்டிற்கோ ராஜீயவாதிகள் கூட்டத்திற்கோ விஜயம் செய்ய தவறியதில்லை.

இன்று ஐரோப்பாவில் பிரஞ்சுப் பத்திரிகையான 'ஆவ்ரி'யில் அவள் தினசரி எழுதி வரும் விஷயங்களை ராஜீயவாதிகளும், பத்திரிகைக்காரர்களும் அக்கரையாகப் படித்து வருவதுபோல வேறு யாருடைய எழுத்தையும் படிக்கிறதில்லை.

மற்றவர்களுக்கு சீக்கிரம் எட்டாத ராஜீய விஷயங்கள் அவளுக்கு எப்படியோ முதலில் கிடைத்து விடுகின்றன. இப்படித் தங்கள் ரகசிய முயற்சிகளை திடீர் திடீரென அம்பலத்துக்குக் கொண்டுவரும் இந்த ஸ்திரீயைக் கண்டு சர்வாதிகாரி ஹிட்லரும் மற்றும் பிரபல ராஜீயவாதிகளும் பயப்படுவது இயற்கைதானே!

கொழுக்கட்டை போட்டி

(சிட்டி)

ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு காலம் கழிப்பதில் ஒரு தமாஷ் இருக்கத்தான் செய்கிறது. வீட்டுக் கவலை இல்லை. ஹோட்டல்காரன் ஒருமாதிரி பார்க்கும் வரை பணத்தைப் பற்றிய கவலையும் கிடையாது. ஆனால் எதிர் வீட்டுப் பையன் வாசற்படியில் வந்து உட்கார்ந்து கொண்டு, அடைத்துணுக்கு, அவல் முதலியவற்றை ரசித்து சாப்பிடுவதைப் பார்க்கும்போது மாத்திரம், இல்லறத்தின் மகிமை தெரியாமல் போவதில்லை. இந்த மாதிரி பச்சாத்தாப எண்ணங்கள் பண்டிகை சமயங்களில் தான் அதிகமாகத் தோன்றுவது வழக்கம். ரொம்ப மிஞ்சிப்போனால் பண்டிகை தினங்களில் ஹோட்டல்களில் பாயசம் போடுவது உண்மைதான். விநாயக சதுர்த்திக்கும், வரலக்ஷிமி விரதத்திற்கும் எந்த ஹோட்டலில் கொழுக்கட்டை போடுகிறார்கள்?

ஜவஹர்லால் நேரு ஜெயிலில் இருந்தபோது, ஒரு நாள் திடீரென்று ஒரு எண்ணம் அவருக்கு தோன்றிற்றாம். நாய் குலைக்கும் சப்தம்கேட்டு ரொம்ப நாளாயிற்றே என்று நினைத்தாராம். கைதிகளுக்கு மோர் கொடுக்க வேண்டுமென்று சென்னையில் தீர்மானித்து விட்டார்கள். கைதிகளுக்காக ஜெயிலில் உண்மை நாய்களை விட்டுக் குலைக்கச் செய்யப் போகிறார்களா என்பதைப் பற்றி விவரங்கள் தெரியவில்லை. நிற்க,

ஜவஹர்லாலைப் போல எனக்கும் ஒரு நாள் ஒரு எண்ணம் உண்டாயிற்று. இரண்டு மூன்று வருஷங்களாக கொழுக்கட்டை சாப்பிடவில்லை யென்பதுதான். நாலு நாட்களுக்குமுன் வரலக்ஷிமி விரதம் வரப்போகிறதென்று தெரிந்ததும் எனக்கு கொழுக்கட்டையைப் பற்றிய சிந்தனைகள் எழுந்தன. இதைப் பற்றி என் நண்பன் கிட்டப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

வரலக்ஷிமி விரதம் கழித்து அனுப்புவதாக மாமனார் எழுதி விட்டார். ரொம்ப கோபித்துக் கொண்டு ஒரு பதிலும் போட்டேன். அதன் பிறகு சமரஸ சம்பாஷணைகள் முன்னேற்றமடையவில்லை. கிட்டப்பாவும் நானும் ஒரு வாரமாக சமையல் செய்து பார்த்தோம்.

அது ஒரு பெரிய கதை. அதை விவரித்து உங்களைக் கண்ணீர் வடிக்கச் செய்ய வேண்டுமென்பது என் விருப்பமல்ல. எங்களோடு குடித்தனமிருப்பவர்கள் வீட்டுச் சிறுமியைக் கேட்டால் அந்தக் கண்றாவி தெரியும். அந்தப் பெண்ணுக்கு வயது பத்து ஆகியும் சமைக்கத் தெரியாது என்

பதை நிச்சயமாகச் சொல்வேன். இந்த லக்ஷணத்தில் நாங்கள் இருவரும் கஞ்சியைக் கையில் கொட்டிக் கொண்டதைப் பார்த்து அவளுக்குச் சிரிப்பென்ன வந்தது?

ஆனால் நாங்கள் விடுகட்டி விளையாடவில்லை. உண்மையாகவே பசிப் பிரச்னையைத் தீர்க்க வழி தேடினோம் என்பதை மறுநாள் முதல் எங்களுடைய விடா முயற்சியிலிருந்து அவள் தெரிந்து கொண்டாள். அதிலிருந்து அவளுடைய பரிகாசம் அனுதாபமாக மாறிவிட்டது. அதைப்பற்றிச் சாவகாசமாய் இன்னொரு முறை சொல்லுகிறேன்.

வரலக்ஷ்மி விரதம் வருகிறதே, யார் வீட்டிலாவது நம்மைக் கூப்பிட்டுக் கொழுக்கட்டை சாப்பிடச் சொல்லமாட்டார்களா என்று நானும் கிட்டப்பாவும் யோசித்துக் கொண்டிருந்தோம். அன்று லக்ஷ்மியை அழைக்கும் அன்பில் எங்களையும் யாராவது நினைக்க மாட்டார்களா என்று விவாதித்துக் கொண்டிருந்தோம்.

"யார் கூப்பிடப்போறா? சங்கரன் இருக்கான். அவனிடத்திலிருந்து அழைப்பு எதிர்பார்ப்பதைவிட ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்து உண்ணாவிரதம் இருக்கலாம்" என்றேன்.

"என்ன இருந்தாலும் நாம் ஹோட்டலில் சாப்பிடுகிறோம், என்று தெரிந்தால் கூப்பிடாமலிருப்பானா?" என்றான் கிட்டப்பா.

"தெரிந்தால் அவனும் ஹோட்டலுக்கு வந்துவிடுவான்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. நான் எப்படியாவது அவன் நம்மைக் கூப்பிடும்படி செய்கிறேன், பார்க்கிறாயா?" என்றான்.

"ஒரு நாளும் முடியாது."

"பந்தயம்!"

"நீ ஜெயித்துவிட்டால் நானே உனக்குக் கொழுக்கட்டை செய்து கொடுக்கிறேன்" என்று சொன்னேன்.

"நீ சமைக்கிறது போதாதுன்னு இது வேறேயா? நான் தோற்றுப் போனலாவது அந்த மாதிரி தண்டனை ஏற்கும். தொலைஞ்சு போறது. பந்தயம் ஒண்ணும் வேண்டாம். நான் அவனை தாஜா பண்ணி நம்மைக் கூப்பிடும்படியான ஸ்திதியில் வைத்து விடுகிறேன், பார்" என்றான்.

கிட்டப்பா யோசனைப்படி நானும் அவனும் வியாழக்கிழமை சாயங்காலமே சங்கரன் ஆபீசிலிருந்துவரும் வழியில் திரிந்து கொண்டிருந்தோம். சங்கரன் எங்களைச்சந்திக்காமல் இருக்க முடியுமா? ஆனால் அவன் எங்களைப் பார்த்ததும் மரியாதை சம்பிரதாயப்படி பல்லை யிளித்துவிட்டு மேலே நடந்தான். கிட்டப்பா அவனை விடவில்லை.

"ஏது ரொம்ப சிரமம் போலிருக்கே?" என்றான்.

"சிரமம் என்ன" என்று நடந்துகொண்டே பதில் சொன்னான் சங்கரன்.

"இல்லே. இன்னிக்கி வேலை ரொம்ப இருக்குமோன்னுதான் சொன்னேன்" என்று கிட்டப்பாவும் பின் தொடர்ந்து கொண்டே பேசினான்.

"எப்பவும் போலத்தான் வேலை. இன்னிக்கின்னு விசேஷம் ஒண்ணுமில்லே."

"இல்லே நாளேக்கித்தான்....... ......நாளேக்கி உங்களுக்கு லீவ் தானே?" என்று கேட்டான் கிட்டப்பா.

"லீவ் ஏது? லீவுக்கென்ன இப்போ திடீர்னு?"

"ஓ, நாளேக்கி பப்ளிக் ஹாலி டேன்னு நினேத்தேன். ஆபீஸ் உண்டோ?"

"பேஷாய் உண்டு. எதுக்காக பப்ளிக் ஹாலி டே?"

கிட்டப்பா முகம் மலர்ந்தது. இந்தச் சமயம் பார்த்து சங்கரன் மனதில் யோசனே உதிக்கும்படி செய்ய வேண்டுமென்று நினேத் தான்.

"வரலக்ஷ்மி விரதமாச்சே; ஹாலிடேயேன்னு கேட்டேன்."

"அதுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்," என்று சங்கரன் அலக்ஷியமாகச் சொன்னான்.

"இல்லே. கொழுக்கட்டை சாப்பிடறதுக்காவது நேரம் வேணுமே" என்று பாதி சிரித் துக் கொண்டே கிட்டப்பா நினே வூட்டினான். எப்படியோ கொழுக் கட்டைப் பிரச்னேயை நிகழ்ச்சிக் குறிப்பில் கொண்டுவந்து விட் டோமென்று அவனுக்குச் சந் தோஷம்.

"என்ன கொழுக்கட்டை வேண்டிருக்கு, எல்லாம் பொம்ம னட்டிகள் விஷயம்" என்று சிரமப்பட்டுக் கொண்டே சங்க ரன் சொன்னான்.

"ஆம். அதுதான் விசேஷம். கஷ்டம் தான், இன்னும் சாமான் கீமான் வாங்கிப் போட வேண்டி யிருக்கும் உங்களுக்கு; பொம்ம னட்டிகள் விஷயம்னு லேசா? பாருங்கோ, நம்ம கோபாலன் குடும்பம் ஊரிலிருந்தா இப்போ உங்களோடும் என்னேடும் பேசிக் கொண்டிருக்க அவனுக்கு சாவ காசமாருக்குமா? ஆத்திலெ ஒருத்தருமில்லேன்னு கொஞ்சங் கூட கவலேயில்லாமெ என்னேடெ ஹோட்டல்லெ சாப்பிட்டுண்டு திரிகிருன். அவன் குடும்பம் இங்கே இருந்தா நாளேக்குக் கொழுக்கட்டைப் பலகாரம் தான் எனக்கு."

கிட்டப்பா என்னேக் கருவியாக வைத்து, மேற்கண்டவாறு சொற் பொழிவு நிகழ்த்தித் தள்ளிவிட் டான். அவன் தன் வார்த்தை களில், நாங்கள் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நிலே மையையும், கொழுக்கட்டை சாப் பிடுவதற்குஎங்களுக்கிருந்த ஆசை யையும், கிரகஸ்தர்கள், ஹோட்ட லில் சாப்பிடுபவர்களே விருந்துக் கழைக்க வேண்டிய கடமையை யும், அவ்வளவு அழகாக மறை பொருளாகப் பொருத்திச் சொன்னது எனக்கு ஆச்சரிய மாகவே இருந்தது.

சங்கரன் சட்டென்று நின்று ஏதோ யோசனே செய்தான். கிட்டப்பா என் பக்கம் தன்னு டைய வெற்றிப் பார்வையைச் செலுத்தினன். சங்கரன் எங்களேச் சாப்பாட்டுக்கழைக்கப் போகி ருன் என்று நிச்சயமாய் எனக் குத் தெரிந்தது.

"நீங்க ரெண்டுபேரும் ஹோட் டலிலேயா சாப்பிடறேள்?" என்று சங்கரன் சட்டென்று கேட்டதும் என் நம்பிக்கை ஊர் ஜிதமாயிற்று.

"என்ன டிக்கட் ஸிஸ்டம் தானே? நல்ல வேளே. எங்கே ஒரு டிக்கட் கொடு. நாளேக்கு அவள் எங்கேயோ தெரிஞ்சவா

ளாத்துக்குப் போய் ஜோம் பிக்கப்போறளாம். எனக்கு 9 மணிக்கே ஆபீஸுக்குப் போக ணும். நல்ல வேளையா உங்களை மீட் பண்ணினேன். நாளைக்கா வது ஒரு நாள் கவலையில்லாமெ ஹோட்டல்லெ சாப்பிடலாம். உங்கபாடு தேவல்லெ" என்று தன் பேச்சைமுடித்தான் சங்கரன்.

நான் கிட்டப்பா முகத்தைப் பார்க்கவில்லை. அந்தப் பரிதா பத்தைப் பார்க்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. பாக் கெட்டிலிருந்து டிக்கெட் புஸ்த கத்தை எடுத்து ஒரு டிக்கட்டைக் கிழித்து சங்கரன் கையில் கொடுத்தேன்.

சங்கரன் போன பிறகு கிட் டப்பாவைத் தேற்ற முயன்றேன். உண்மையில் என்னைத்தான் தேற் றிக் கொண்டேன்.

"விநாயக சதுர்த்திக்குள் அவள் நிச்சயமாய் வந்துவிடு வாள். பயப்படாதே, வேண்டிய கொழுக்கட்டை சாப்பிடலாம்... ராத்திரி என்ன, சமைக்கலாம்? ஹோட்டலுக்கே போய் விடு வோமா?" என்றேன்.

கிட்டப்பா ஒன்றும் பதில் சொல்லாததால், அவனுடைய மன நிலையை உங்களுக்குத் தெரிவிக்க முடியாதது பற்றி வருந்துகிறேன்.

"சொல் வேண்டும்!"

"சொல் வேண்டும்!" என்று சக்தியை நோக்கிக் கதறி னர் பாரதி.

சொல்வதெல்லாம் சொல்லன்று; வாயில் வருவதெல்லாம் வாக்காகாது.

பாரதி வேண்டும் சொல் கவி உள்ளத்தின் குமுறலி லிருந்துதான் புறப்படும். ஒரு மகத்தான வேட்கையின் இறுதி யில், அதன்வடிவாக வெளிவரும்.

அந்தச் சொல்லிலேயே செயல் கருப்போல இருக்கும். அந்த சொல் ஆயிரத்தில் ஒன்று—பிஞ்சுடனேயே தோன்றும் பூப்போல.

சொல்லின் பொருள் செயல்; செயலின் கருத்து சொல்; செயலற்ற சொல் வன்மையில்லாதது—காய்க்காத மரம்போல.

சக்தியின் அருளால் அது உண்டாகும். சக்தியைப் போற்றவேண்டும். சக்தியை உள்ளத்திலே இருத்தினல் அவள்சொல்லிலேயே தோன்றுவாள்.

பாரதியின் ஒவ்வொரு சொல்லிலும் அவள் முத்திரை இருக்கிறது.

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணனுக்கு சுவாமிநாதன் என்று ஒரு மகன், சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவர்க்கிடமான வனத்தையடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் உபதேசித்தருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். மகன் வரவைக் காணாத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்தனர்.

எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தை விடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த சதிபதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானான அகஸ்திய மாமுனி உபதேசம் செய்த பார்வதிதேவியின் தவ வரலாற்றை அவர்களுக்குச் சொல்லுகின்றார்.

தவத்திலிருந்த மலைமன்னன் முன் உமாதேவி மூன்று வயது குழந்தையாக உற்பவிக்கின்றாள். அதைக் கண்டு மலைமன்னன் மகிழ்ச்சிகொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வீடு போய் செல்வமாய் வளர்க்கிறான். ஐந்தாம் வயதில் பார்வதி என்று பெயர் வைத்தான். பதிமூன்று வயதான பொழுது பார்வதி பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்ய வேண்டுமென்று தந்தையை வேண்டினள். தந்தையும் அதற்கிணங்கி அவளை மலைச்சாரலில் தவம் புரிந்த வசிஷ்ட முனிவரிடம் கூட்டிச் செல்லுகிறார். வசிஷ்டர் பார்வதிக்கு தவ முறையைச் சொல்ல அவள் அதன்படியே தவம் செய்கின்றாள்.]

பரமேசுவரர் இமாசலம் சென்று பார்வதி தவஞ்செய்யும் பர்ணசாலையை அடுத்து சன்யாச வேடந்தரித்து யாசகஞ் செய்ய, பார்வதியின் தவங் கலைந்து எதிரே நின்று யாசிக்கும் சன்யாசியை நோக்கினாள் என்பது வரை, சிவஞான தேசிகருக்கும் அவர் மனைவியாருக்கும் முனிவர் சொல்லி முடித்து, அச் சதிபதிகளை அழைத்துக்

கொண்டு, தனது ஆசிரமத்தை அடைந்து முறைப்படி மாலைக் கடன் முதலியவற்றைச் செய்து யோக நித்திரையில் ஆழ்ந்தனர்.

இது நிற்க, சிவஞான தேசிகரின் புதல்வனை சுவாமிநாதனுக்கு மற்றோர் முனிவர் உபதேசிப்பதை சிலது சொல்வோம்.

"சுவாமிநாதா! 'அது' என்று காண்பிப்பதற்கு முடியாததே, பரமானந்த ஸ்வரூபம் என்னும் வரை முன் தினம் சொன்னேனல்லவா? பின்னும் சிலது சொல்லி வருவோம். கேட்பாயாக!

"குழந்தாய், திக்குகளும் காலங்களும் இல்லாததால் மறைப்பில்லாமல் எங்கும் பிரகாசிப்பதும் ஆதியந்தமில்லாததும் ஏகமாகியும் சலனமில்லாது ஆன்மாவின் சுயத்தன்மையாகியு மிருக்கின்ற நிலையான பிரம்மம் ஒன்றே உள்ளது. மற்றொன்று மில்லை.

"பிரம்மம் ஒன்றே அல்லது வேறொரு வஸ்துவுமில்லை" என்று மனத்தில் சிந்தித்து காணப்படும் விஷயங்களில் நான் என்னும் அகம்பாவத்தை நீக்கி, தேகப் பிரிவில்லாமல், சகல விருப்பமுமற்று ஞானமடைந்தவனாய், அத்துவித ரூபமாய் உபசாந்தமாகிய மௌனத்தை யடைந்து ஆத்ம ஞானத்தில் துன்பம் இறந்த ஆனந்தத்தை அடைதல் வேண்டும்.

"தொடருகின்ற அஞான நினைப்பானது எதுவரையில் இருக்கிறதோ அதுவரையில் பரமானந்த பாவனை மனத்தில் பொருந்தாது.

ஜெகஜ்ஜாலத்தில் போகப் பிரமை எதுவரை யிருக்கிறதோ, அதுவரை மனம் முதலியற்றின் கற்பனைகள் சேரும்.

"சித்தம், மாயை, மனம், ஜீவன் ஆகிய இவைகள் ஒன்றுவது இல்லை. பிரகாசிக்கின்ற பரம்பொருளே சமத்துவமான வேகத்தோடு கடல்போல பொங்கி வளர்ந்து கொண்டிருக்கிறது.

"எதுவரைக்கும் நவத்துவாரமுள்ள நான் என்றும், தோற்றப்படுவதை எல்லாம் நமக்கு உதவும் பொருள் யென்றும் பாவனை யிருக்கிறதோ, அதுவரையில் முன் கூறிய சித்தம் முதலான மயக்கங்கள் உண்டாயிருக்கும்.

"மாசற்று உலக பளுவில்லாமல் திரணமான ஞானக்கினியை படிப்படியாய் மனத்தில் சேர்த்து வளர்ந்துவர சித்தம் முதலிய பிரமைகள் மனத்திற்சேராது.

"ஞானம் வளர்ந்துவர வேண்டுமாயின், அந்த வரம்பு இந்த வரம்பு யென்பனவைகளில் பற்றற்று இடம் பொருந்தி எங்கும்

பொருந்திய ஸ்வரூபத்தைச் சிந்தித்து மாயையால் உண்டாகும் விருப்பங்களை அடைய விரும்பாமலும், உயிரைக் கொலை செய்யும் சத்துருவையும் மனதில் வஞ்சகமில்லாது நேசித்து வருதல் வேண்டும். இவைகளில் பழகி வர, பரிசுத்தமாகிய ஆத்ம ஸ்வரூபத்தை தரிசிப்பாய்.

"பின்னும் கரையிலிருக்கிற விருட்சத்தை வேரோடு தள்ளுகின்ற ஆற்றைப்போய், சகல விஷயங்களிலும் இச்சையையும் நன்மையில்லாத மாச்சர்யத்தையும் அறவே விடுத்தல் வேண்டும். பொய் பொறாமைகளையுமகற்றி, மகிழ்ச்சியோடு ஒப்பற்ற தத்துவ ஞான சாஸ்திரங்களை தக்கவாறு ஆராய்ந்து ஆசை யென்னும் கொடிய எண்ணத்தை அகற்றி வருபவன், உதயமான சூரியன் இருளை அகற்றியதற்கு ஒப்பாவான்.

"குழந்தாய்! உண்மை விளங்கத்தக்க வாக்கியங்களை சொல்லப்படும் வன்மையால், வெந்த பூமியில் நீரை யூற்றியது போல் மனதில் அமையுமல்லவா?

"அத்தகைய வன்மை பொருந்திய வசனங்களை கேட்டும் மனத்தில் அமைத்தும் பிரயோசனம் என்ன? அவ்வரிய மார்க்கங்களில் பயிற்சித்து பிரம்மானந்தத்தைப் பெறுதல் வேண்டும். மன விருப்பத்தில் உலர்ந்து துரும்பைப்போல வீணாக உழல்வதில் பயன் என்ன?

"சுவாமிநாதா! வா, கடனை முடிப்போம். மற்றும் நாளைச் சொல்லுகிறேன்" என்று முடித்தனர்.

இது யிப்படி யிருக்க, சுவாமிநாதனின் தாய் தந்தையர்களுக்கு முனிவர் உபதேசித்து வருவதை சிலது சொல்லுவோம்.

"சிவஞான தேசிகரே! பரமேசுவரர் சன்யாசு வேஷத்துடன் பர்ணசாலையின் முன்னிற்பதை பார்வதிதேவியார் கண்ணுற்றார் என்னும் வரை முன் தினம் சொன்னோமல்லவா? பின்னும் சொல்வோம் கேட்பீராக.

"ஈசனின் தொனியானது பார்வதியின் செவியில் இடி யென முழங்கித் தவங்கலைய, பார்வதி திகைத்து எதிரில் நிற்கும் சன்யாசியை உற்று நோக்கி, "இவன் ஈசனோ, ஈசனில்லாது பின் யாருடைய தொனி என் செவியுட் புகுந்து மனதைக் கலைத்திருக்கக் கூடும்! இது என்ன ஆச்சர்யம்? ஆம், கவனிப்போம். ஜயவதி, இச் சன்யாசிக்கு பிட்சையிட்டனுப்புவாய்" என்றனர்.

ஜயவதியும் பயபக்தியோடு அமுதுடன் சன்யாசியை அடுத்து நின்றனள். அவ்வரிவையை சன்யாசி நோக்கி "பேதாய், நீதான் இப் பர்ணசாலையின் தலைவியோ?" என்றனர்.

ஜயவதி "சுவாமி! அடியாள் அல்ல. அதோ ஆசனத்தில் அமர்ந்திருக்கும் அரசியே இச்சாலையின் தலைவி. நான் அவ்வரசியின் பணிப்பெண்" என்றனள்.

சன்யாசி, "நமக்குப் பிட்சையிட நீ முனைந்து வந்தது உமதரசியின் கட்டளையோ? அப்படியாயின் பணிப் பெண்களால் இடும் பிச்சையை நாம் ஏற்றுக் கொள்வதில்லை. ஆதலால் உமதரசியே நமக்குப் பிட்சையிட முடியுமோ என்று கேட்டு வருவாய்" என்றனர்.

அதற்கு ஜயவதியும் சம்மதித்து பார்வதியிடம் சென்று சன்யாசியின் விருப்பத்தை சொல்ல, அரசியும் வியப்புற்று, "நல்லது நாமே பிட்சை யிடுவோம்" என்று எழுந்து, ஜயவதியிடமிருந்த அமுதைத் தனதரிய கரங்களில் வாங்கிக் கொண்டு, சன்யாசியின் அருகிற் சென்று அமுதைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்ட, சன்யாசியும் பெற்றுக் கொண்டே, சிலது சொல்லுகிறார்.

"அம்மா, நீ யார்? பற்றற்ற முனிவர்கள் தவஞ் செய்தற்குரித்தான இப்மலைச் சாரலில் தனித்து ஓர் பர்ணசாலை அமைத்துக் கொண்டு இருக்கும் காரணம் யாது? நீ எதைக் குறித்துத் தவஞ் செய்கின்றனை? சொல்லவியலுமோ?" என்றனர்.

பார்வதி, "பிட்சைக்கு வந்த தங்களுக்கு, விருப்பியபடி பிட்சை கிடைத்ததல்லவா? பின்னும் என் விருத்தாந்தங்களை தெரிந்து கொள்வதில் உமக்கு ஆகும் பலன் என்ன? சென்று வரலாம்" என்றார்.

சன்யாசி, "பாவாய்! நீயோ, ஓர் அழகிய அரசிளங்குமரியைப் போல் தோன்றுகிறாய். ராஜ டத்திரியான நீ இப்பால்ய வயதில் எதைக் குறித்துத் தவஞ்செய்கின்றனை? நீ செய்யும் தவத்தன்மையை பார்க்கின, ஏதோ கிடைப்பதற்கரிய பொருளை விரும்பி அதை அடைதற்காக நீ தவஞ் செய்வதுபோல் தோன்றுகிறது. அவ்வரிய வஃதுவை நானும் தெரிந்துகொள்ளப் பிரியப்படுகிளன்: சன்யாசியாகிய நான் அதை அறிந்து கொள்வதில் பிசகென்ன? யோசித்துக் சொல்வாயாக!" என்றனர்.

அச்சன்யாசியின் நயமிகுந்த வார்த்தைகளுக்கிணங்கி, பார்வதியும் "சுவாமி! தாங்கள் சொல்லியபடி எளிதில் கிடைப்பதற் கரிய பரம் பொருளான பரமேசுவரனை மணஞ் செய்து கொள்ளக் கருதியே இத்தவத்தினைச் செய்து வருகிறேன். வேறொன்றுமில்லை" என்றனள்.

இச்சொற்களைக் கேட்ட சன்யாசி நகைத்து, "பாவாய்! என்ன பேதமை! அப்பித்தனையோ எளிதிற் கிடைப்பதற்கரிய பரம் பொருள் என்று கூறினை. நன்றாயிருக்கிறது. அப்பித்தனை மணப்பதற்கு இத்தனை தவமா? உடலில் அணிவதற்குங் கூட ஆடை

யாபரணமில்லாமல் நாகங்களையும் புலித்தோலையும் தரித்துக்கொண்டு, கரங்களில் பிடிப்பதற்கும் தக்க ஆயுதமில்லாமல் மானையும் மழுவையும் உடுக்கையும் சூலமும் தாங்கிக்கொண்டு, சுடுகாட்டில் வசிக்கும் பேய்களுடன் கூடிக்கொண்டு ஆடி அலைந்து பிணஞ்சுடு சாம்பலை உடல் முழுதும் பூசித் திரியும் அவவெளியவனை மணக்கவோ இத்தனை தவமும்?

“பேதாய்! நீ கோருவது சற்றும் தகுதியற்றது. அத்தகையோனை நீ மணப்பதைக் காட்டிலும் ஏன் என்னை மணந்து கொள்ளலாமே” என்றனர்.

சன்யாசியார் பரமேசுவரரைக் குறை கூறி தன்னை மணந்து கொள்ளலாமே என்று கூறும் இக்காலையில் பார்வதாதேவிக்குற்ற கோபத்தை இங்கெவ்வாறு என்னல் எடுத்துச் சொல்ல வியலும்? எதிரில் நின்ற சன்யாசி ஈசனுனதினுல் அல்லவோ எரியாதி நந்தனர். மிகுந்த கோபத்துடன் சன்யாசியை நோக்கி “சற்றும் யோசனையற்றவனே! நீயோ எனதப்பனைக் குறை கூறுபவன், உனக்கென்ன தைரியம்? சற்றும் அஞ்சாது தகுதியற்ற வார்த்தைகளை என் முன் சொன்ன உன் நாவை இதோ அறுத்தெறிகிறேன்” என்று மிகச் சினத்துடன் பர்ணசாலையுட் சென்று பார்வதி வாளாயுதமொன்றைக் கரத்திலெடுத்துக் கொண்டு சன்யாசியை வந்து பார்க்க, சன்யாசியும மறைந்தனர்.

சன்யாசி மறைதலும் பரமேசுவரரென உணர்ந்த பார்வதி திகைத்து, ஆகாயத்தை நோக்கிய வண்ணம் பரமேசுவரரைப் பலவாறு தியானித்து பிழை செய்தோமென அஞ்சி நிற்குங்காலையில், பரமேசுவரர் ரிஷப வாகனுரூடராய் அந்தரத்திலிருந்து பார்வதி தேவிக்கு தரிசனம் தந்தருளினர்.

(தொடரும்.)

துரோகப் பால்

(விகடானந்தன்)

'பம்—பம்' என்று சங்கை ஊதிக் கொண்டு, பிச்சைவாங்கி, ஊர் ஊராகத் திரிந்து ஜீவிக்கும் ஒரு தாஸரி ஒரு நாள், பாதைவழியே சென்று கொண்டிருக்கும்போது, பெரிய புயல் அடித்து, வானம் முழுதும் செவ்வானம் ஆய்விட்டது. எந்த நிமிஷத்தில் பிரசண்டமான மழை பெய்ய ஆரம்பித்து விடுமோ என்று தோன்றியது. தாஸரி, தான் நியமித்துக் கொண்ட கிராமத்திற்குப் போய்ச்சேர முடியாது என்பது தெளிவாகி விட்டது. 'எந்த ஊராக இருந்த போதிலும், பக்கத்து ஊரில் போய்ப் புகுந்து கொண்டு இரவைக் கழிக்கவேண்டியதுதான்; என்றுதாஸரி தீர்மானித்தான்.

பக்கத்தில் ஒரு சிறிய கிராமம். அதில் பாதிபூமிகளை விலைக்குவாங்கியிருந்த ஒரு பிரபு, அந்தக் கிராமத்திலேயே ஒரு பெரிய வீட்டைக்கட்டிக் கொண்டு வாசம் செய்து வந்தார். தாஸரி ஊர்க்காரரை விசாரித்த போது, "அவர் தான் பிரபு; அவர் தாராள சிந்தையுடையவர், உமக்கு அன்னமும் கொடுப்பார்; இரவில் தங்குவதற்கு இடமும் கொடுப்பார்" என்று சொன்னார்கள்.

தாஸரி, அந்தப் பிரபுவின் வீட்டிற்குச் சென்று, பிரபுவை தரிசித்தான். பிரபு, நல்ல மரியாதையுடன், தாஸரியை வரவேற்று அமரும்படி செய்து, ஒரு வாரமாவது தாஸரியை தாமதிக்க வேண்டும் என்றும், தன்னுடைய சஞ்சாரங்களில் தான் கண்ட விநோதங்களைத் தனக்குக் கதை கதையாகச் சொல்லவேண்டும் என்றும், வேண்டிக்கொண்டார்.

தாஸரி, பிரபுவின் விமரிசையான உபசாரத்தை மனதார மிகவும் கொண்டாடினர். இரவில், சாப்பாடு நடந்தது. கடைசி அயிட்டமாக, அன்னத்திற்குப் பாலும் விடப்பட்டது. தாஸரி மிகுந்த சந்தோஷமடைந்தார். அப்பேர்க்கொத்த பாலைக் கொடுத்த பசுவைப் பார்க்க ஆவல் கொண்டார். சாப்பாடு ஆனபிறகு கைகளைக் கழுவும்போது, பிரபு அன்புடனும், பெருமையுடனும், அந்தப் பசுவை தாஸரிக்குக் காட்டினர்.

அது ஒரு வெள்ளிமலைபோல் நின்றது. கைலாஸ பர்வதத்தில் சிவபெருமானது வாகனமாக விளங்கும் நந்தி பகவானுடைய பரம்பரையில் வந்த பசுவோ, அல்லது பிருந்தாவனத்தில் கிருஷ்ண பரமாத்மாவின் புல்லாங்குழலின் இசையைக் கர்ப்பத்திலிருந்தே கேட்டு அனுபவித்த ஒரு பசுவின் பரம்பரையில் வந்த பசுவோ என்று தோன்றியது.

பிரபுவிற்கு ஆனந்தம் அதிகமாயிற்று. தாஸரி படுக்கப் போவதற்குமுன், ஒரு வெள்ளிப் பாத்திரம் நிறம்ப பாலை தாஸரிக்கு குடிக்க கொடுத்தார்.

வீட்டில் அனைவரும் தூங்கலானார்கள். தாஸரியும் அயர்ந்தார். நடுநிசியில் தாஸரிக்கு ஒரு தடவை விழிப்பு ஏற்பட்டது. மறுபடி அவருக்கு நித்திரை வரவில்லை. பாலின் பேரிலும் பசுவின் பேரிலும் ஞாப

கம் ஓடிக்கொண்டேயிருந்தது. ஞாபகம் கொஞ்ச நேரத்தில் ஆசையாக மாறிவிட்டது.

இதென்ன விபரீதம் என்று பன்முறை அந்த ஆசையை விரட்டியும், அது போனபாடில்லே. அந்த ஆசை அட்டைபோல் ஒட்டிக் கொண்டது. சஞ்சலத்தை தாஸரி விட்டுவிட்டு கட்டுத் தரைக்குச் சென்ருன்; தும்புகளே அவிழ்த்து, பசுவைவ்யும் கன்றையும் பிடித்துக்கொண்டு, தனது, பழய சொத்தாகிய ராஜபாட்டையில், சமீபத்தில் கிடைத்த இந்த சொத்துக்களுடன் நடந்து சென்ருன்.

பிரபு, அதிகாலேயில் நாலு மணிக்கே எழுந்திருந்து, தனது பசுவைத் தரிசிப்பது வழக்கம். அன்று கட்டுத் தரையில் பசுவையும் காணேம், கன்றையும் காணேம். தாஸரி படுத்திருந்த இடத்தில் தாஸரியையும் காணேம். ஆட்களேப் பல திக்குகளிலும் அனுப்பித் தேடச் செய்தார்.

வெகு சீக்கிரத்தில், தாஸரியையும் மாடையும் கன்றையும் பிடித்து கொண்டு வந்தார்கள்.

பிரபு "அநியாயமாக நான் கொடுத்த பாலே சாப்பிட்டுவிட்டு, என்னே மோசம் செய்தீரே! தாஸரி வேஷம் போட்டுக் கொண்டீரே!" என்று பலவிதமாகப் பேசிஞர் பிரபு.

தாஸரி, "எனக்கு நீ பால் கொடுத்துவிட்டால், பெரிய உபகாரம் செய்து விட்டதாக உனக்கு ஞாபகமோ? 'பாத்திரம் அறிந்து பிச்சை கொடு' என்று சொல்வார்கள். நான் சத்-பாத்திரம் அல்ல. எனக்குப் பிச்சையிட்டது பிசகென்று நினேக்கிருய். 'அல்ப சகவாஸம் பிராணசங்கடம்' என்பது உனக்குத் தெரியுமா? நீ யோக்கியஞ? இப்போது வரும்போது ஆட்களே விசாரித்தேன். நீ லஞ்சம் வாங்கும் அதிகாரியாம்! உனது வாழ்க்கை முழுதும் நீ வாங்கிய சம்பளத்திற்குத் துரோகம் செய்தாயாம். இந்தப் பசுவின் தாயே உனக்கு லஞ்சமாகக் கொடுக்கப் பட்டதாம். இப்பேர்க்கொத்த அயோக்கியன் வீட்டில் சாப்பிட்டதனுல், உன்னுடைய துரோக புத்தி இந்தத் தாஸரியையும் பிடித்துக் கொண்டது. எனது ஜன்மத்தில் எனக்குத் திருட்டு புத்தி ஏற்பட்டதுண்டா? கிடையவே கிடையாதே! உனது பால் சாப்பிட்டதும் தானே, இந்தக் கொடிய துரோக சிந்தனே என்னேப் பிடித்துக் கொண்டது! நீ தருமம் செய்யாதே. என்னேக் கெடுத்ததுபோல், மற்றவர்களேயும் கெடுத்து விடாதே. உனது தருமக் கடையைக் கட்டு. இந்தா உனது மாடு! உனது கன்று! இந்தா உனது பால்" என்று விரலே வாயில் வைத்துக்கொண்டு வாந்தியெடுத்தான்.

பிச்சைக்காரரே! "பாத்திரம் அறிந்து பிச்சையேடு" என்று சங்கநாதம் செய்து கொண்டு தாஸரி போய்விட்டான்.

'நல்லவன்' என்பதோ, 'சாது' என்பதோ, இப்பொழுது கிட்டத்தட்ட 'அசடு' என்பதைக் குறிக்கும் வார்த்தைகளாசப் போய்விட்டன. உலக வெளி வேஷங்களில் மனமிளகி 'ஐயோ' என்பவன் அநேகமாக நஷ்டத்திற்கு ஆளாகிறான் என்பது உலகறிந்த ரகசியமாகப் போய்விட்டது! வெளியில், உலகத்தோடு ஒத்துப் போய்க்கொண்டு, மனதிலும், சமயம் வரும்போதும், தன்னுடைய காரியங்கள் நிறைவேறும் வழியையே குறித்துத் தியானம் செய்துகொண்டிருப்பவன் 'கெட்டிக்காரன்'!

மனத்திலொன்று, வெளியிலொன்றாக இருப்பவன், தனக்குள் இருப்பது வெளியில் வந்துவிடக் கூடாது என்பதற்காக மிகவும் ஜாக்கிரதையோடு நடந்து கொள்கிறான். ஆனால் சில சமயங்களில் எது வெளிவரவேண்டாமென்று அவன் நினைக்கிறானோ, அது வந்துவிடுகிறது! உண்மை விளங்கின உடனே நாம் பிரமித்துப் போகிறோம். 'அட! இவன் என்ன, ஆளுக்குள்ளே பெரிய ஆளாகவல்லவா இருக்கிறான்' என்று ஆச்சரியப்படுகிறோம்!

சமீபத்தில் ஸ்ரீ கோபியோடு பழகினபோதுதான் மேற்சொன்ன அவ்வளவு உணர்ச்சிகளும் என் மனதை வந்து கவிந்து கொண்டன. விசேஷம் ஒன்றும் பிரமாதமாக இல்லை. நானும் ராமசாமியும், போன செவ்வாய்க்கிழமை இரவு கோபியைப் பார்க்கப்போயிருந்தோம். பேசிக்கொண்டே இருந்ததில் பொழுதுபோனது தெரியவில்லை. மணி ஒன்பதிற்கு மேலாகிவிட்டது.

நடுவில் ஒருதரம் கோபி சமையல் கட்டைப் பார்க்கப் போய்விட்டு வந்தான். போனவன் ஐந்து நிமிஷம் கழித்துத்தான் வந்தான் என்றாலும் எனக்கு அப்பொழுது சந்தேகம் ஒன்றும் தோன்றவில்லை. ஆகையால் சாதாரணமாகவே நான், 'ராமசாமி! போவோமா, நாழியாகிறதே' என்றதும், கோபி, 'இல்லை. இல்லை. ராமசாமி இருந்து

விட்டு வரட்டும். அவனோடு கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது' என்றான்.

அன்றைய விஷயம் அதோடு நின்றுவிட்டது. நானும் வந்து, கிட்டே இருந்த 'தண்ணீர் பந்தலில்' காபி சாப்பிட்டுவிட்டு என்னுடைய அறையை நோக்கி நடையைக் கட்டினேன்! ஆனால் மறுநாள் எதிர்பாராத விதத்தில் உண்மை வெளிவந்தபோதுதான் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! 'இது என்ன, கோபிதானா இப்படிச் செய்தான்; அதுவும் நம்ம கோபியா?—ஐந்து வருஷமாகப் பழகின அதே மனுஷனா?' என்றெல்லாம் என் மனதில் தோன்றிற்று.

சாப்பிடும்பொழுது ராமசாமி சொன்னானும், 'பாவம். இனி மேல் அவன் போகும் நேரத்திற்குக் கிளப்பில் சாப்பாடு இருக்குமோ இருக்காதோ. இல்லாவிட்டால் அவன் பட்டினி கிடக்கவல்லவா வேண்டும்?' என்று என்மீது பச்சாதாபம் கொண்டு. அவனுக்கு எப்பொழுதுமே என்மேல் ஒரு ஆசை.

அதற்கு கோபி, "உனக்குத் தெரியாது அவனுடைய விஷயம். நான் ஒரு நாள் அவனுடைய இடத்திற்குப் போயிருந்தபோது என்னை 'சாப்பிட்டுவிட்டுப்போ' என்று மரியாதைக்குக்கூடச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாமலிருந்தாலும் ஒன்றும் பரவா இல்லையே! அதோடுகூட 'அடே அப்பா' நீங்களெல்லாம் எங்களோடு சாப்பிடுவீர்களா? ஒருக்காலும் மாட்டீர்கள். நான் போய் வருகிறேன் சாப்பிட' என்றான்" என்றானம்!

ஒருவரோடு பழகுவதிலும் ஜாக்ரதையாக இருக்கவேண்டும் என்று என் மனதில் பட்டது அதுதான் முதல் தடவை. அவன் என் அறைக்கு வந்ததென்னமோ வாஸ்தவம். ஆனால் நான் சாப்பிடப் போகும்போது அவனையும் கூப்பிட்டேன். அவன் உபசாரமாக 'இல்லை; நான் வீட்டுக்குப்போய் சாப்பிடுகிறேன். அவள் காத்துக் கொண்டிருப்பாள்' என்றாள்.

புதிதாய் குடும்பம் ஆரம்பித்து நடத்தும் ஒருவனுடைய அந்த வார்த்தைகளில் வரட்டு உபசாரம் இருக்கும் என்று நான் எண்ணவில்லை. 'சரி! உண்மையைத்தான் சொல்லுகிறான்', என்று நினைத்தேன். எனவே, 'நீங்கள் எல்லாம் இனிமேல் என்னோடு சாப்பிட மாட்டீர்கள். போய்வா', என்று சொன்னேன். இதில் தப்பு எங்கே இருக்கிறது?

மேலும், நாங்கள் பழகின விதத்தில் அவனுக்கு வெளி உபசாரம் தேவையே இல்லை என்று நினைத்தேன். உண்மையாகப் பழகின ஒருவனிடம், மூன்றாம் மனுஷனிடம் நடந்து கொள்வதைப் போல் ஏன் நடந்து கொள்ள வேண்டும், என்று உண்மையாகவேதான் சாப்பிடக் கூப்பிட்டேன். அதை அவன் மறுத்ததற்குச் சொல்லிய காரணம் நியாயமாக இருந்தது. நான் 'சரி' என்று ஒப்புக்கொண்டு, அவனை வருந்தி அழைக்கவில்லை. இதற்காக அவனுக்குக் கோபம்!

என்னை வெளியே அனுப்பிவிட்டு 'ராமசாமியை மாத்திரம் சாப்பிடச் சொல்லவேண்டும்' என்று என்னென்ன வழிகள் யோசித்திருக்கிறான்! சாப்பிடச் சொன்னால் இருவரையும் சொல்ல வேண்டும்; இல்லாவிட்டால் ஒருவரிடம் மாத்திரம் சொல்லிவிட்டு, மற்றவரிடம் சொல்லாமல் எப்படி இருக்க முடியும்?

'சாப்பிட்டுவிட்டுத்தான் போகட்டுமே' என்று திடீரென்று ஒரு யோசனை வந்ததும், சமையல் கட்டைப்போய் பார்த்திருக்கிறான். அங்கே சமையல் எல்லாம் முடிந்த பிறகு அவள் படுத்துக்கொண்டிருந்தாள். 'இரண்டு 'பேர்கள் சாப்பாட்டிற்கு வந்திருக்கிறார்கள், என்ன பண்ணி இருக்கே?' என்று கோபி கேட்டதும், 'நம்மைத் தவிர இன்னும் ஒருவர் வேண்டுமென்றால் சாப்பிடலாம், இரண்டு பேருக்கென்றால் என்னால் முடியாது. நீங்கள்தான் சமைக்கணும்' என்று பதில் வந்தது!

கோபியின் விஷயம் இப்பொழுது ரொம்ப மோசமாய்ப் போய்விட்டது. அவனுக்கோ என்னையும் சாப்பிடச் சொல்லலாம் என்ற எண்ணம்; ஆனால் வீட்டில் சௌகர்யமாக இல்லை. ராமசாமி ஒரு நாளும் வராதவன்; அவனையாவது அவசியம் அங்கே சாப்பாட்டிற்கு இருக்கச் சொல்லலாம் என்றால், கூட நான் இருக்கிறேன்!

கடைசியில் எப்படியாவது என்னைப் போகச் சொல்லிவிட்டு ராமசாமியை இருக்கச் சொல்லிவிடலாம் என்று எண்ணிக்கொண்டு முதலில் சொன்ன தந்திரத்தைக் கடைப்பிடித்து, என்னை விரட்டிவிட்டான். பிறகு என்மீது அபாண்டம் எதற்காகச் சுமத்த வேண்டும்? உள்ளதை உள்ளபடி சொன்னால் நான் 'சரி' என்று சொல்ல மாட்டேனா? ஒருவேளை வெட்கமோ என்னமோ?

மொத்தத்தில் விஷயம் எனக்குப் புரிந்துவிட்டது. நான் அவனுடைய வீட்டிற்குப்போன பொழுதே உள்ளே விஷத்தை மறைத்து வைத்துக்கொண்டு, என்னைச் சிரித்த முகத்துடன் வரவேற்றிருக்கிறான். ஆகையால் என்னைப் போகச் சொல்லிவிட வேண்டும் என்று அவனுக்கு வந்த கோபம் மிகவும் இயற்கையானதே!

பிறகு ராமசாமிக்காக என்னையும் சாப்பிடச்சொல்ல வேண்டும் என்று எண்ணிக்கொண்டு உள்ளே போயிருக்கிறான். நான் அங்கே சாப்பிட்டிருந்தால், 'ஏண்டா அன்றைக்கு என்னை அப்படிப் போகச் சொன்னாய்,' என்று ஏதாவது பேச்சு வந்து, மனதிலுள்ள கோபம் போய், சமரஸம் உண்டாயிருக்கலாம். ஆனால் மனைவியின் கோபத்தைக்கண்டு அவன் பயந்துவிட்டான்!

அந்தப் பயத்தை அவன் ராமசாமியிடம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ராமுவோ இந்தப் பேச்சை ஆரம்பித்து விட்டான். அவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும். அந்தப் பதில் அவனை திருப்தி செய்யவும் வேண்டும். எனவே, ஒரு பதிலைக் கற்பித்து அதைச் சொல்லிவிட்டான். அவ்வளவுதான். 'ஸ்ரீ கோபி இவ்வளவு பெரிய ஆசாமியா' என்று அப்புறம்தான் தெரிந்து கொண்டேன்.

முத்து முத்தாயிருக்கே!

கோர்த்தமங்கலம் சுப்பு

கவிச்சக்கரவர்த்தி சுப்ரமணிய பாரதியாரின் பாடல்களைப் படித்துக் கொண்டிருந்தேன். என் பாட்டி பக்கத்தில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். மிகவும் ஸ்வாரஸ்யமான கட்டம். "அடாடா! முத்து முத்தா இருக்கே" என்றாள் பாட்டி.

முத்து முத்து, ஆக இருக்காமல் எப்படி இருக்கும்; முத்துக்கும் பாடலுக்கும் என்ன சம்பந்தம்? கருகல், வெள்ளோல், சிப்பிப்பத்து, வரி, புகை மந்தம் முதலியவை இல்லாமல் பார்த்தலும் கோர்க்கலும் தனித்து கிறகலும் மாலையாகக் கட்டி அன்புடன் பூஜிக்கும் உருவங்களை அணிந்து கொள்ளும்படி செய்து, அழகு பார்ப்பதில், இன்பம் தரும் முத்துக்கும், கேவலம் கிரிக்கித் தள்ளும எழுத்துக்கும் என்ன சம்பந்தம்?

முகமூடி, மூச்சுக் குழாயுடன் இடுப்பிலே கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் குதித்து, உயிரைப் பணயம் வைத்து, மூச்சை யடைத்து, அடக்கி, சிப்பியைக் கொண்டுவந்து, கொட்டும் முத்துக் குளிப்பவனுக்கு, எழுத்தாளன் எந்த விதத்தில் இணையாக முடியும்? உட்கார்ந்து எழுதுவதில் என்ன சிரமம்? பேனு உதவி மறுத்தாலும் எழுத்து பக்கங்களை அடைக்காதா? அந்த எழுத்துக்களை முத்து என்று சொல்வதன் தாத்பரிய மென்ன?

இது இருக்கட்டும். குறிப்பிட்டு முத்து என்று மட்டும் சொல்லுவானேன்? நவரத்தினங்களில் முத்து ஒன்றைத்தவிர மற்ற எட்டு ரத்தினங்களும் எத்தனையோ இமிடேஷன்களும் இல்லையா?

வைரத்தை எடுத்துக் கொள்வோம். ஒளி வீசவில்லையா? டால் இல்லையா? பட்டைக் கேற்ற பளபளப்பும், துடிப்பும், பிரபையும் இல்லையா? மதிப்பவர்களில்லையா? வைரங்காய்த்த மரங்களாக சில பிரகிருதிகள் காக்ஷியளிப்பதை நாம் பார்த்ததில்லையா? ஏன் அதைக் குறிப்பிட்டிருக்கக் கூடாது?

பட்டைக்குத் தகுந்த படிதான் பிரகாசம் உண்டாகிறது என்பதற்காகவா? வியாக்கியானம் செய்பவரின் சாமர்த்தியத்தால் மட்டும் பிரகாசிக்கும் பாட்டு மட்டமென்று நினைத்திருப்பார்களோ? கட்டிடத்தில் மறைந்ததுபோக காக்ஷியளிக்கும் பாதிதான் உபயோகமாகிறது என்ற எண்ணத்தினலா? இல்லை. குணத்தைவிட குற்றத்தைத்தான் துரிதமாய் எடுத்துக்காட்டுகிறது. நுரை, கருப்புப் புள்ளி, ரத்தப் புள்ளி, மது முதலியவற்றைப் பளிச்சென்று எடுத்துக் காட்டுகிறது என்ற காரணத்தினலோ?

இருக்கலாம்! முழு வைரமணி இருக்கிறதே? அது அதிகம் பிரகாசிப்பதில்லையா! ஆனல் சரி, கூழாங்கல்லுக்கு மட்டமில்லை. கேவலம் கரிச் சுரங்கத்தில் பிறக்கும் வைரம் எங்கே? கற்பனைக் கடலில் தோன்றும் முத்து எங்கே?

மரகதத்தை எடுத்துக் கொள்வோம். நல்ல தெளிவுடன் மந்தமில்லாமல் ரங்காய் குளிர்ச்சியாக வசீகரிப்பது பச்சை. இவ்வளவும் இருந்தும் என்ன? உறுதியில்லையே. நவநாகரீக பெண்களைப்போல் பளபளப்புடன் இருந்தாலும் துர்ப்பலமானதல்லவோ? ஜாக்கிரதையாகக் கையாள வேண்டியிருக்கிறதே? நவநாகரீகப் பெண்ணுக்கு சங்கீதக் கச்சேரி கேட்டால் "டயர்ட்" ஆகிவிடுகிறது. மத்தளம் அடிபட்டால் மரகதம் உடைபடுகிறது. ஆகவே இதைக் கூறுததால் குற்றமில்லை.

மாணிக்கம் நெருப்புத் தணல்போலிருக்கலாம். எழுத்து நெருப்புத் தணல்போலிருக்கக் கூடாது. பவளத்தைப்போலும் பளபளப்பின்றியிருக்கக் கூடாது. வைடூரியத்தைப் போல் ஒரு பக்கத்தில் ஒரு வரி மட்டும் பிரகாசமாயிருக்கக் கூடாது. மற்ற ரத்தினங்கள் போல் சந்தேகம் தருவதும கூடாது.

ஆனால் கடல் நீலம், ககனம் நீலம், இரண்டையும் காட்டிலும் சர்வவியாபியான கடவுளும் நீலம். ஏன் அதைச் சொல்லவில்லை? என்ன காரணமோ! யார் கண்டது?

முத்தின் வடிவம் உருண்டை. உலகமும் உருண்டை. அதற்காகச் சொல்லியிருப்பார்களோ! ஏன்? பூஜ்யத்தின் வடிவமும் உருண்டைதானே? முத்து உருண்டை உறுதியானது. உள்ளே பொருளடக்கம் உள்ளது. பூஜ்யம் அப்படியல்ல. அடியேனது வியாசங்களைப் போல் பொருளில்லாமல் வானத்தைவளைத்துக்கொண்டு நிற்கிறது. எழுதும் எழுத்துக்களில் கருத்து நிறைந்து புஷ்டியாய் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் முத்தை உவமை கூறியுள்ளார்கள்.

கம்பன் பாடல்கள் காலம் உள்ளமட்டும் இருப்பானேன்? நந்தன் புகுந்த கோவில் நாளைக்கும் இருப்பானேன்? முறையே வெற்றைமுத்தில்லாததாலும், உவட்டு மண்ணல்லாததாலும் தானா?

ஆகவே எப்படி நோக்கினும் பளபளப்புள்ளதாய், உறுதியாய், எல்லோரையும் வசீகரிப்பதாய், உள்ள முத்து உவமைதான் சரி.

"கரும்புபோல் இனித்து மருந்துபோல் வடித்த மொழி" என்று பெரியோர் கூறியுள்ளபடி இனிமையாய், அளவுடன், எழுதிவைத்த பட்டோலைச் செல்வங்கள் முத்தின் ஸ்தானத்துக்கும் மேலாக நிற்பது ஆச்சரியமல்ல.

இனி அநுபவிப்பவர்களை கவனிப்போம். குத்தகைக்காரன் ஒரு சிப்பிக்கு விலை கேட்பதில்லை. குப்பலாக வாங்குகிறான். பொறுமையுடன் மூக்கைப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு சிப்பியாகப் பிரிக்கிறான், திறந்து பார்க்கிறான். குப்பலுக்கு ஒரு முத்துக் கிடைத்தாலும் திருப்தி அடைகிறான். கிடைக்காவிட்டால் மறுபடியும் ஒரு குப்பல் வாங்குகிறான். அவனுடைய விடாமுயற்சியால் முத்து உலகத்தில் உலாவுகிறது. ஆனால் நமது நண்பர்களோ முகவுரையைப் படித்தவுடனே, அல்லது முதல் வரியைப் படித்தவுடனே தூக்கி எறியும் புத்தகம் அனந்தம். 'தமிழ் லிட்டரேச்சர் உருப்படாது ஸார்' என்று சொல்லி இங்கிலீஷையும் ஒரு கெட்ட பேரையும் பிணைத்து விடுகிறார்கள். தமிழ் வளர்ச்சியைக் குறைக்கிறார்கள்.

எழுத்தாளனும் முத்துக் குளிப்பவனும் சிரமப்படுவதில் ஒரே மாதிரிதான். ஆழிக்கு மனமிருந்தால் முத்துக் கிடைக்கும். மனிதன் விருப்பத்துக்கு ஆழி முத்துத் தராது. வற்புறுத்தலுக்காக கவிஞன் எழுத உட்கார்ந்தால் கற்பனைக் கடலும் முத்துத் தராது. கற்பனை

தானாகவே ஓடவேண்டும். உதாரணமாக இன்று இருக்கும் தனிப் பாடல்களில் பாதி கவிஞர்களின் கற்பனைக் கடலில் அலைமிதந்து ஆனந்தப் படுங்காலத்தில் சேர்த்து கொழித்தெரிந்த போது சிதறிய சில எழுத்துக்கள் தான். அதைப் பொருக்கி உலகத்துக்குத் தருவதற்காகவே அவனுடன் கூடத் திரிந்த கையேட்டுக்காரச் சிஷ்யர்கள் தந்த செல்வம் அது.

கவிஞனின் கற்பனையை முதலில் அவன்தான் சுவைக்கிறான். சில சமயங்களில் அடுத்தாற்போலுள்ள மடையனிடம் கூறிவிட்டுத் தலையிலடித்துக் கொள்வான். “கடவுளே ரஸனையில்லாதவனிடம் என்னைச் சேர்க்காதே” என்று வாய்விட்டு அலறுவான். தன்னுடைய அழகிய சாஹித்யம் அழிந்துவிடக் கூடாதென்றெண்ணுவான். கரியையெடுத்துச் சுவரில் எழுதுவான். கண்டவனிடமெல்லாம் கூறுவான். அடே அப்பா! அவன் கற்பனையில் லயித்திருக்கும் போது அரசனைக் கூடப் பொருட்படுத்த மாட்டான்.

கவிஞன் உல்லாச புருஷன், வம்பன், எல்லாவற்றிலும் அவன் சம்பந்தப் படுவான். சட்ட சபைக்கும் போவான். சந்தைக் கடைக்கும் போவான். விளக்கிற்கு எண்ணெய் ஊற்றுவதுபோல் விஷயங்களைக் கிரகித்துக் கொண்டு வந்து தனியிடத்தில் நிம்மதியாக உட்காருவான். அசைபோடும் மாடுபோல் அவைகளைச் சிந்தனை செய்வான். சாரத்தைப் பறித்துக்கொண்டு அத்துடன் தன் சரக்குச் சேர்ப்பான். சில சமயம் நிகழ்ச்சி என்னும் விளக்கில் அந்த அழகிய வண்ணாத்திப் பூச்சி விழுந்து இரையாகி விடுவதும் உண்டு.

அவன் படிப்பான். அப்பொழுது அவன் ஹிருதயத்தில் மழை பெய்யும். உடனே ஈசல்கள், காளான், பட்டுப் பூச்சி முதலியவை உண்டாகும். பட்டுப் பூச்சியை மட்டும் உலகத்துக்குத் தருவான். மற்றவைகளை ஒதுக்கித் தள்ளி விடுவான்.

கவிஞன் வேறு. ஞானி வேறு. ஆனால் அவனால் ஞானியின் போர்வையைப் போர்த்திக் கொண்டு உலகத்தில் திரிய முடியும். விருப்பந்தான் ஞானி. எல்லாவற்றையும் விரும்பி நோக்குபவன் கவிஞன். மணலைப் பார்ப்பான். கற்பனையை நூற்பான். பட்டுக் குஞ்சம் போலப் பாட்டுக் கட்டி விடுவான். ஆகாசத்தில் ஒரு கோட்டையை உண்டாக்கி புது உலகம் என்ற பெயருடன் கவிதை செய்வான். ஆசை, ஆசை, ஆசை. அடக்க முடியாத ஆசை. எல்லோராலும் புகழப்பட வேண்டுமென்னும் ஆசை. புகழெனும் பாதையிலேயே சென்று வீடு அடைய எண்ணுவான்.

அவன் ஒரு குழந்தை. உலகத்து மக்கள் அவனுடைய உற்றார். நாம் அவனிடம் சென்று விளக்கெண்ணெய் என்றால் அழுவான். வெல்லம் என்றால் சிரிப்பான். பொது ஜனங்களின் ஆதரவால் அவன் புகழ் வளர வளர, அவனும் அகத் தோற்றங்களில் வாலிப முறுக்குடன் வளருவான். ஆதரவு சிறிது குறைந்தாலும் கிழவனாகி விடுவான். அவனுக்கு சத்துரு யார் தெரியுமா?— “டே, அரையணாவுக்கு உப்பு வேணுமாம்.”

வைர மோதிரம்

ராஜம்

"வேறு எதை வேண்டுமானாலும் தருகிறேன், வாங்கிக் கொண்டு போங்கள்!" என்று கெஞ்சினாள் கனகம்.

"வேறொன்றும் வேண்டாம் எனக்கு, அதைமட்டும் கொடு போதும்" என்று பிடிவாதமாகச் சொன்னான் கோபு.

"இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறீர்களே! இத்தனை வருஷங்களில் நான் எதை என்னுடையது என்று வைத்துக் கொண்டு உங்களுக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறேன்? இதைக் கொடுக்க முடிந்தால் கொடுக்க மாட்டேனா?" என்று கனகம் கண் கலங்கிக் கேட்டபொழுது கூட அவன் மனது இளகவில்லை.

"ஏன் முடியாது?" என்று தான் மறுபடியும் கேட்டான்.

"எவ்வளவு தரம் சொல்லுகிறது? அப்பாவுக்கு அந்த வைர மோதிரத்தின் மேல் உயிர். அதை நான் எடுத்து உங்களுக்கு எப்படிக் கொடுப்பது அவர் அறியாமல்?"

"ஏன் இந்த வெறும் சாக்கெல்லாம்? உனக்கிஷ்டமில்லையென்றால் உன் அப்பாவின் தலையில் ஏன் போடுகிறாய்? அவர் என்ன தலையிலா கட்டிக் கொண்டு போகப் போகிறார்? எல்லாம் உன்னுடையது. நீ அதை எடுத்ததற்காக உன்னை அவர் வீட்டை விட்டுத் துரத்திவிடப் போகிறாரோ?"

"அம்மா நினைவாக அதை வைத்துக் கொண்டிருக்கிறார். அதை எடுத்தால், அப்பாவுக்குக் கோபம் வந்துவிடும் நிச்சயம். அது போதாதா? வீட்டை விட்டுத் துரத்த வேண்டுமா?"

"இப்பொழுது எனக்குக் கோபம் வருகிறது, என்ன செய்யப் போகிறாய்?"

"அதற்காகத்தான் உங்களை இவ்வளவு நல்ல வார்த்தை சொல்லுகிறேன்?"

"அந்த வார்த்தைகளையெல்லாம் உன் அப்பாவுக்குச் சொல், எனக்கு வேண்டாம்" என்று சீறினான் கோபு.

"இப்படிப் பிடிவாதம் பிடிக்கலாமா?"

"நீதான் பிடிக்கிறாய்!"

கனகம் ஆத்மநாத அய்யரின் ஒரே பெண். அவள் சிறு குழந்தையாக இருந்த பொழுதே அவளுடைய தாயார் சுவாசகாசத்தால் இறந்தாள். அவர் மறு விவாகம் செய்து கொள்ளவில்லை. பெண்ணை நன்றாகப் படிக்க வைத்து நல்ல தேர்ச்சி கொண்டவளாகச் செய்தார்.

கோபு அவருடைய தமக்கை பிள்ளை. படிப்பைத் தவிர பாக்கி

யெல்லாம் அவனுக்குத் தெரியும். கண்ணுக்கு அழகாக, எப்பொழுது பார்த்தாலும் குஷாலாகத்தான் இருப்பான் வாழ்க்கை எப்படி நடக்கிறது என்பதைப் பற்றியே அவனுக்குக் கவலை இல்லை. எப்படியாவது பொழுது பவுஷாகக் கழிந்தால் சரி, பிறர் அவஸ்தைகளைப் பற்றி அவனுக்கு யோசனை கிடையாது.

தெரிந்தேதான் ஆத்மநாதய்யர் கனகத்தை அவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தார். தன் வீட்டிலேயே பெண்ணையும் மாப்பிள்ளையையும் வைத்துக் கொண்டு அவனை வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்று எண்ணினார். முதலில் 'ஜமக்காள வியாபாரம் செய்கிறேன்' என்று மாமனாரிடம் மூவாயிரம் ரூபாய் வாங்கி அதைக் கடைவாடகையும் காபி சப்ளையுமாக செலவழித்துத் தீர்த்தான். பிறகு நீலி வியாபாரம். அதில் ஆயிரம் ரூபாய் போயிற்று. பிறகு காகித விற்பனை ஏஜெண்டு, அதில் கொஞ்சம். கடைசியில் மாமனார் அவனை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சும்மா வீட்டில் இருக்கச் சொல்லி விட்டார்.

கனகம் அவனைச் சீர்திருத்த முயன்றாள். ஆனால் அவளுடைய அழகு எதனாலோ அவனைக் கட்டுப் படுத்தவில்லை. முதல் இரண்டு வருஷம் அடிமை போலத்தான் அவள் காலடியில் கிடந்தான். பிறகென்னமோ அவளிடம், ஒரு வெறுப்பு ஏற்பட்டு விட்டது அவனுக்கு அவள் உள்ள அழகு கூட அவனைக் கவரவில்லை என்றால் உடலழகு நிரந்தரமாக அவனைக் கவரவில்லை என்பதில் ஆச்சரியமில்லை!

ஆனால் கனகம் தன் அன்பைக் கொட்டி அவனை ஆதரித்தாள். மாமனார் அவன் முகத்தைப் பார்ப்பதில்லை. தன் பெண்ணிற்காக அவனை வீட்டில் இருக்கும்படி அனுமதித்தார். என்றாவது புத்தி வந்து நல்ல வழிக்கு வந்து விட மாட்டானா என்று நம்பிக் கொண்டு கனகம் அவனிடம் இரக்கம் கலந்த அன்புடன் நடந்து கொண்டாள். அவன் கேட்டதையெல்லாம் கொடுத்தாள். அவன் மனம் நோகக்கூடாதென்று. அப்படித் தன் நகைகளில் பலவற்றை இழந்தாள்.

"நான் சொல்லுகிறதைக் கேளுங்கள், கேட்கக் கூடாதா?"

"எல்லாம் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறேன். ஒன்றும் புதிதாகச் சொல்லக் காணோம்!"

"புதிதாக என்ன சொல்ல வேண்டும் உங்களுக்கு?"

"நீ என்னிடம் வைத்திருக்கிறதாகச் சொல்லும் அன்பு உண்மை என்றுதான்!"

"நான் அதை வாயைத் திறந்து சொல்ல வேண்டிய அவசியம் கூடவா இன்னும் இருக்கிறது?"

"நான் கேட்கிறதிலிருந்தே தெரியவில்லையோ?"

"நீங்கள் கேட்பது நியாயமல்ல. நியாயமா நீங்களே சொல்லுங்கள்."

"கேட்கலாமென்று தானே கேட்கிறேன்?"

"எது கேட்கலாம், எது கேட்கக் கூடாது என்று தெரிய வேண்டாமா?"

"உன் அன்பில் அந்த மாதிரி விவகாரம் வித்தியாசம் கூட உண்டோ?" என்று கோபு ஏளனம் செய்தான்.

சட்டென்று கனகத்தின் முகம் சிவந்தது. எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

"உங்கள் அன்பில்?" என்று திருப்பிக் கேட்டாள். அந்த சொல் சுருக்கென்று தைத்தது. அவன் மிருகமானான்.

"என் அன்பிலா! பிறகு சாவகாசமாக யோசித்துச் சொல்லுகிறேன். இப்பொழுது அவசரம். உடனே அதைக் கொடு" என்று முறட்டுத்தனமாகக் கேட்டான்.

"எதற்காகக் கொடுக்க வேண்டும்?" என்று மனத்தாங்கலுடன் கேட்டாள் கனகம்.

"எதற்காகவா? நீ என்னமோ சொல்லிக் கொள்கிறாயே பின்—"

"அதற்குப் பதிலாக நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுமே இல்லையோ?" என்று அவள் குறுக்கிட்டுக் கேட்டாள்.

"பதில் எதிர்பார்த்துத்தான் ஆனால்?"

"அதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் என் மனதை அறிந்து போகாவிட்டால்—"

"உன் மனதை-பெண் மனதை அறிந்தா—"

"இல்லாவிட்டால் பிரயோஜனம் என்ன?"

"யாருக்கு? அது கிடக்கட்டும்: மோதிரத்தைக் கொடுப்பாயா மாட்டாயா?"

"அதான் சொன்னேனே. வேறு எது வேண்டுமானாலும் தருகிறேன்."

"வேறொன்றும் வேண்டாம்!"

"அதைத்தர முடியாது!"

"நீ என் பெண்சாதியாக்கும்?"

"பெண்சாதி யென்றால் பெற்றவனுக்குத் துரோகம் செய்வதோ? மாட்டவே மாட்டேன்!"

சிரிப்பும் விளையாட்டும்

"ரஞ்சனன்"

(ஒரு பெரிய கூடத்தைச் சேர்ந்த சிறிய அறை. கூடத்தில் குழந்தைகள் சத்தம்போட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றனர். கிருஷ்ண மூர்த்தி அவர்களை மாடியின்மேல் போய் விளையாடும்படி சொல்லிவிட்டுத் தான் படித்துக் கொண்டிருக்கும் புஸ்தகத்தைத் தொடர்ந்து படிக்கிறான். அறையில் நாலுபக்கத்திலும் புஸ்தக பீரோக்கள். நடுவில் ஒரு ஐ. சி. எஸ். மேஜையும், சாய்வு நாற்காலியும் போடப்பட்டிருக்கின்றன. ஜன்னலின் பக்கத்தில் ராஜம் ஊசியும் நூலுமாய் உட்கார்ந்து கொண்டு சவுக்கம் போட்டுக் கொண்டிருக்கிறாள். ராஜம் நல்ல அழகு. கைகள் வேலை செய்கின்றனவே ஒழிய மனம் அதில் இல்லை என்பதை அவளைப் பார்த்து சுலபமாய் எவரும் தெரிந்து கொள்ளலாம். அவளைக் கல்யாணம் செய்துகொள்வதற்கு முன்பு எப்படி இருந்தானோ அதேமாதிரிதான் இன்னும் இருக்கிறான் கிருஷ்ணமூர்த்தி. அவனிடத்தில் ஒரு மாறுதலும் காணப்படவில்லை!

புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தவன் திடீரென்று நிமிர்ந்து ஒரு குறும்புச் சிரிப்பு சிரித்துவிட்டு மனைவி இருக்கும் பக்கம் திரும்பி அவளிடம், தான் படித்துக் கொண்டிருக்கும் பாகத்தை அவளுக்கும் கேட்கும்படி உரக்கப் படிக்கிறான். "வெற்றியின் சிகரங்களுக்கு நடுவில் தோல்வியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான் நெப்போலியன். மேரி வெல்வ்ஸ்காவின் காதல் அவனுக்கு முதலில் கிடைக்கவில்லை. ஆனால் அவள் அவனுக்குக் கிடைத்து, அவனோடு சேர்ந்து வாழ்ந்த பிறகு, அவளை நெப்போலியன் கைவிட்டு விட்டான். ஏனென்றால் அவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வரும் குழந்தை சுத்தமான அரச வம்சத்திலேயே பிறந்ததாக இருக்க வேண்டுமென்ற ஆசையினால்! குலத்தளவை ஒத்து குணம் வரும் என்பது மாத்திரமல்ல; 'குழந்தைகளின் பரிசுத்த வாழ்க்கை பெற்றோர்களின் வாழ்க்கையில்தான் இருக்கிறது' என்பது அவன் கட்சி. அதுதான் அவள் வாழ்க்கையின் சோக நாடகம்.") .

ராஜம்:—உண்மையாகவா?

கிருஷ்ணமூர்த்தி:—ஆம்! நீயே பார்க்கலாம். நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் அப்படித்தான். பிறக்கும்போது குழந்தைகள் பொய், புரட்டு, இவைகளோடு பிறப்பதே இல்லை.

ராஜம்:—சகவாச தோஷத்தால்.........?

கிருஷ்:—இல்லை, இல்லை. சகவாச தோஷம் இல்லாமல் துர்க்குணங்கள் குழந்தைகளுக்குப் பிடிபடுவதில்லையா?

ராஜம்:—(எழும் பெரு மூச்சை அடக்கிக்கொண்டு) அப்படியானல்?

கிருஷ்:—ஏன்? அப்பா, அம்மாவிற்கு இருக்கும் குணங்களெல்லாம் குழந்தைகளுக்கும் தான் வரும். சந்தேகமென்ன? (வேடிக்கையாக) உன்னிடம் இருக்கும் திருட்டுத்தனங்களெல்லாம் உன் குழந்தைகளுக்கும் வந்துவிடப் போகிறது, பார்த்துக் கொண்டே இரு!

ராஜம்:—(திடுக்கிட்டு) ஆ! என்ன! திருட்டுத்தனமா? என்ன திருட்டுத்தனம்?

கிருஷ்:—அசடு! அசடு! விளையாட்டாகச் சொன்னல் என்ன இவ்வளவு பதறல்!

ராஜம்:—(உணர்ச்சிகளை மறைத்துக்கொண்டு) போதும்! விளையாட்டாம்—விளையாட்டு! என்ன விளையாட்டு வேண்டிக்கிடக்கிறது!

கிருஷ்:—பாரு, பாரு. இந்த சிடுமூஞ்சித்தனம் கூட உன் குழந்தைகளுக்கு வந்துவிடப் போகிறது, பார்த்துக்கொண்டே இரு!

ராஜம்:—(பொங்கி வரும் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு) ஒன்றும் வராது. போய்!

கிருஷ்:—வராதா! சரி...(வாசலில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு) யாரது?

குரல்:—போஸ்ட் மன், ஸார்!

கிருஷ்:—இரு. இரு. (வாசலில் போகிருன்).

ராஜம்:—(மறைந்துகொண்டிருந்த உணர்ச்சிப் புயல் கோரமாக அடிக்கிறது) போஸ்ட் மனு? அப்பாவுக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாமல் இங்கே ஏதாவது எழுதி வைத்துவிடப் போகிறரே! (கிருஷ்ணமூர்த்தி வருகிருன்) என்ன கடிதம்?

கிருஷ்:—உனக்கு உங்க அப்பா போட்டிருக்கிறர்.

ராஜம்:—(அலட்சியமாக இருப்பது போல் பாவனை செய்து) ஓஹோ! (கிருஷ்ணமூர்த்தி பிரிப்பதைப் பார்க்கிருள்.) ஐயையோ! இதென்ன வழக்கம், ஒருவருக்கு வரும் கடிதத்தை இன்னொருவர் பார்ப்பது!

கிருஷ்:—ஏன்? உனக்கு வந்தாலென்ன, எனக்கு வந்தாலென்ன? (விளையாட்டாக) என் மாமனர் போட்டிருக்கார். நான் பார்க்கப் போகிறேன்.

ராஜம்:—ஆம்! வாழுகிறது, மாமனர் மாப்பிள்ளை என்று! (கண்ணீரை அறிவிக்கும் குரலில்) அதுதான் முகாலோப நம் கூடக் கிடையாதே!

கிருஷ்:—என்ன வரவர இவ்வளவு அசடாகப் போய்விட்டே! இதற்கெல்லாம் அழுவார்களா?

ராஜம் :—ஆம்! சின்னக் காரியங்களுக்கெல்லாம் மனஸ்தாபம்! எல்லா வற்றிற்கும் நான் கஷ்டப்படவேண்டி யிருக்கிறது.........

கிருஷ் :—(அதைக் கவனிக்காமல் கடிதத்தைப் பிரித்து மனதிற்குள் படிக்கிறான். திடீரென்று). இங்கே பாரு.. ...

ராஜம் :—(திடுக்கிட்டு) ஆ! என்ன?

கிருஷ் :—ஏன் இப்படி எடுத்ததற்கெல்லாம் தூக்கி வாரிப்போடுகிறது உனக்கு?

ராஜம் :—நீங்கள் அப்படி என்னை பயமுறுத்துகிறீர்கள்......அதிருக் கட்டும் ஏன் கூப்பிட்டீர்கள்...?

கிருஷ் :—இதைப் படிக்கிறேன் கேளு. "......என்னமோ, என்னு டைய கஷ்டகால வேளை என்றுதான் தோன்றுகிறது. பணம் அனுப்ப முடியவில்லை. இதற்கு இன்னும் என்ன போராட்டம் நடக்குமோ தெரியவில்லை......" இதெல்லாம் என்ன......?

ராஜம் :—(நடுங்கிய குரலில்) ஏன்?

கிருஷ் :—(கோபமாக) என்ன ஏன்? உனக்கு மூளை, கிளை கலங்கிப் போய்விட்டதா? இவர்கள் பணம் கொடுத்தா இவ்வளவு நாள் நாம் காலங்கழிக்கிறோம்? நீ 'பணம் வேண்டுமென்று எழுதி னுயா?

ராஜம் :—(தடுமாற்றத்தோடு) இல்லையே!

கிருஷ் :—அப்படியென்றால் இதற்கு என்ன அர்த்தம்? "இதற்கு என்ன போராட்டம் நடக்குமோ தெரியவில்லை!" எதற்காகப் போராட்டம்?

ராஜம் :—எனக்கே புரியவில்லை.

கிருஷ் :—ராஜம்! இதோ பார். இவ்வளவு நாள் நடக்காத விஷயங்கள் வித்தைகளெல்லாம் இப்பொழுது நமக்குள் நடக்கவேண்டாம். அப்பாவுக்கு நான் கஷ்டப்படுகிறேன் என்று பணத்திற்கு நீ எழுதி இருக்கிறாய். அவரால் அனுப்ப முடியவில்லை. இதை எல்லாம் என்னிடம் மறைத்து ஏன் பொய் சொல்லுகிறாய்......? (தூரத்தில் குழந்தையின் சிரிப்புக் கேட்கிறது)...அதோ பார்! ராஜம் (துக்கமும் அயர்வும் கலந்த குரலில், அழுத்தமாய்) நீ பொய் சொல்ல ஆரம்பித்தால்......

ராஜம் :—(அதே குரலில், யந்திரத்தைப்போல்) ஆரம்பித்தால்......?

கிருஷ் :—ஆம்! குழந்தைகள்......(அழுத்தமாய்) குழந்தைகளுக்காக ......நீ பொய் சொல்லக் கூடாது!

ராஜம் :—(கண்களில் நீர்ததும்பி நிற்க) இல்லை... (கிருஷ்ண மூர்த்தி வெளியே போவதைப்பார்த்து) எங்கே போகிறீர்கள்... கோபமா?

கிருஷ் :—(ஏக்கம் தேங்கிய குரலில்) கோபமே இல்லை. ராஜி! உன்மேல் கோபித்துக் கொண்டுபோக என்னால் முடியுமா? சற்று வெளியே போய்விட்டுவந் நால்தான் மனதில் நிம்மதி யுண்டாகும்......(வாசல் படிக்கட்டுகளில் காலடிச் சத்தம் தேய்ந்துமறைகிறது.)

ராஜம் :—(பெருமூச்சோடு) அதுவும் நல்லதுதான். எப்படியோ இன்னும் ஒருவாரம், பத்து நாள்......பணம் வந்துவிடும். அதற்குப் பிறகு...(மறுபடியும் வாசலில் யாரோ வரும் சத்தம்) யாரது?

(ஜகன்னுதன் உள்ளே வருகிறான்; அவன் அவளோடு கூடப் படித்த வன். மிகவும் பழக்கமான முறையில் அலட்சியத்துடன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறான். ராஜம் வெறுப் போடு அவனைப்பார்க்கிறாள்.)

ஜகன் :—கிருஷ்ணமூர்த்தி இல்லையா?

ராஜம் :—வெளியில் போயிருக்கிறார். இந்தா! நான் முதலிலேயே என்ன சொல்லி இருக்கிறேன் உனக்கு? இப்படி எல்லாம் வரக்கூடாது என்று சொல்லவில்லையா?

ஜகன் :—இரு. இரு. ஏன் இப்படி என்னைக்கண்டாலே உனக்குக் கோபம் வருகிறது?

ராஜம் :—கோபம் இல்லை. இப்படி அடிக்கடி எதற்காக வருகிறாய்? நான்தான் சொன்னேனே!

ஜகன் :—என்ன சொன்னாய்? இன்றைக்கு அநேகமாக வந்துவிடும் என்று சொன்னாயே, பார்த்துக்கொண்டு போகலாம் என்று வந்தேன்.

ராஜம் :—இல்லை. இதோபார், இன்றைக்குக் கடிதம்தான் வந் திருக்கிறது. (கெஞ்சும் குரலில்) நான் என்ன செய்யலாம், ஜகன்னுதா? இன்னும் ஒரு வாரம் பத்து நாள் பொறுக்க முடியாதா?

ஜகன் :—இதோடு மூன்று தடவையாகிவிட்டது. இன்னும் எத் தனை தடவை......

ராஜம் :—சமயத்திற்கு, உடன் பிறந்த பிறப்பைப்போல், உதவி செய்தே! இதுதான் கடைசித்தடவை. அடுத்த தடவை பணம் கொடுத்து விடுகிறேன்! அவர்கூட இப்பொழுது......

ஜகன் :—ஆம். நீ ஏன் கஷ்டப்படவேண்டும்? நான் அவரிட மிருந்து வாங்கிக்கொள்ளுகிறேனே!

ராஜம் :—ஐயையோ! கூடவே கூடாது. அவருக்கு இது தெரியவே கூடாது. தெரிந்தால் என்னைக் கொன்றுவிடுவார்.

ஜகன் :—(நிதானமாக, ஆச்சரியம் கலந்த வகையில்) நீ 'என்னிடம் கடன் வாங்கி இருக்கிறாய்' என்று கிருஷ்ணமூர்த்தியிடம் சொல்லிப் பணம் வாங்கிக்கொண்டு போகலாம் என்று வந்தேன்.

ராஜம் :—ஜகன்னாதா, நாம் ஒன்றாய்ப் படித்த நாள்முதல்......

ஜகன் :—இருக்கலாம். அதனால் என்ன? பணத்தை வாங்கி உன் தகப்பனாருக்குத்தானே அனுப்பி இருக்கிறாய்? அதைச் சொன்னால் என்ன? நீ என்ன பணத்தைக் கெட்டவழியில் வாரி இறைத்திருக்கிறாயா? இல்லையே!

ராஜம் :—உனக்குத் தெரியாது. என் தகப்பனாரும் இவரும், ஒருவர் முகத்தில் ஒருவர் விழித்து எவ்வளவோ வருஷங்களாய் விட்டன...எவ்வளவோ சண்டைகள்! அதனால்...

ஜகன் :—அப்படியிருந்தால் நீ ஏன் இதில் தலையிட்டுக்கொண்டாய்? அவர் உன்னைதவிர இந்தப் பணத்தை வேறு யாரிடத்திலும் வாங்கிக் கொள்ளலாமே. நிலமிருக்கிறது, பாங்கு இருக்கிறது.......

ராஜம்:—அந்த வழியில், பணம் வேண்டிய தினத்திற்குப் பிறகு ஒரு வருஷம் கழித்துத்தான் அவருக்குக் கிடைத்திருக்கும். அவருக்கோ வாரண்டு வந்து விட்டது. உன்னிடம் வந்து, உன் மூலமாக வாங்கித் தந்தி மணியார்டர் செய்தேன். இல்லாவிட்டால்......

ஜகன்:—இல்லாவிட்டால் என்ன?

ராஜம்:—(ஆத்திரத்தோடு) அப்பா ஜெயிலில் இருப்பார்!

ஜகன்:—(சற்று யோசித்து) ராஜம்! அண்ணன் தங்கையைப்போல் பழகி விட்டதினால் சொல்லுகிறேன்; இல்லாவிட்டால் நான் இந்த விஷயத்தில் அபிப்பிராயமே சொல்லமாட்டேன். என்ன இருந்தாலும் நீ கிருஷ்ணமூர்த்தியின் மனதை மாற்றிய பிறகு தான் இந்தக் காரியத்தைச் செய்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

ராஜம் :—ஒருக்காலும் அவர் உத்திரவு கொடுத்திருக்கமாட்டார்.

ஜகன் :—இல்லாவிட்டால் அவரவர்கள் விதிப்படி நடக்கிறதென்று விட்டுவிட வேண்டும்!

ராஜம் :—(ஆச்சரியமும், கோபமும் சேர்ந்து) என்ன! அவரை ஜெயிலுக்குப் போகும்படி நான் விட்டுவிட வேண்டுமென்று சொல்லுகிறாயா?

ஜகன்:—ஆம்!

ராஜம் :—என்ன?

ஜகன் :—(அழுத்தமாய்) ஆம்!

ராஜம் :—சீ! (கோபம் தலையைச் சுற்றுகிறது) நீ யார் இதை எனக்குச் சொல்லுவதற்கு? போ, வெளியே!

ஜகன் :—(கோபத்துடன்) முடியாது! கிருஷ்ணமூர்த்தியிடம் நான் வந்திருக்கிறேன். அவன் குடும்பத்திலிருந்து வரவேண்டிய பாக்கியை அவனிடம் சொல்லி வாங்கிக்கொண்டுதான் வெளியே போகப்போகிறேன்.



ராஜம் :...(பயந்துபோய்) ஜகன்னுதா! கொஞ்சம் பொறுத்துக் கொள். உன் காலில் விழட்டுமா? நம்முடைய பழைய பள்ளிக் கூட சிநேகத்திற்காகவானும்......கொஞ்சம்...........

ஜகன் :—(கீழே பார்த்துக்கொண்டே நிற்கிறுன்)

ராஜம் :—பதில் சொல்லு......தயவு செய்து, கொஞ்ச நாள் பொறுத் துக்கொள்.

ஜகன் :—ராஜம். நானே ஒரு சிக்கலில் அகப்பட்டுக் கொண்டிருக் கிறேன்! உனக்காக நான் எந்த வழியில் பணம் சேகரித்துக் கொடுத்தேன் என்பது உனக்குத் தெரியாது......ராஜம் (கவலை தேங்கிய முகத்துடன் பரிதாபகரமாகப் பார்க்கிருள். ஜகன் ஞதன் தொடர்ந்து சொல்லிக்கொண்டு போகிருன்).....மேலும் நீ எவ்வளவு பெரிய தவறைச் செய்துவிட்டாய் என்பதை நான் சொல்ல வந்த போதுதான் உனக்கு அவ்வளவு கோபம் வந்தது!

ராஜம் :—(திடீரென்று) எது?

ஜகன் :—தகப்பனருக்கு உன் கடமையைச் செய்யும்போது கிருஷ்ண மூர்த்திக்கு நீ எவ்வளவு பெரிய தீங்கைச் செய்துவிட்டாய் என்பது உனக்கே தெரியவில்லை....(வேகமாக) அது மாத்திர மில்லை..........

ராஜம் :—பிறகு? (மணி நாலடிக்கிறது)

ஜகன் :—(திடுக்கிட்டு) ஆ! நாலுமணியா! நான் அவசரமாகப் போக வேண்டுமே! நீ என் மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. இன்னும் இரண்டு மூன்று நாளைக்குள் எப்படியாவது...... ராஜம்......என் சமயத்தை மாத்திரம் நீ கொஞ்சம் தெரிந்து கொண்டால்—

ராஜம் :—நான் எப்படிக் கொடுப்பேன் ஜகன்னுதா?

ஜகன் :—ஐயோ, என்னை அப்படிவிட்டுவிடாதே. அவசியம் வருகி றேன். உன்னை நம்பித்தான் வருவேன். (உரக்கச் சொல்லிக் கொண்டே போகிறுன்.)

ராஜம் :—(தனியாக) என்னைப் பார்த்து 'ஐயோ' என்று இரக்கப்படுவ தற்கு ஒரு ஆள் இந்தப் பூலோகத்தில் இல்லை. இவன் வருகிற போது அவர் இருந்து விட்டால்...(யோசிக்கிறுள்) அப்—பா! வேண்டாம்...இந்தப் பரீக்ஷையே வேண்டாம்...சரி!...(உரக்க) ஜகன்னுதா!

ஜகன் :—(வீதிப்பக்கத்திலிருந்து வந்து கொண்டே) ஏன்?

ராஜம் :—(நகையைக் கழுத்திலிருந்து எடுத்து) இந்தா! இந்தக் கடியா ரச்சங்கிலியைப் வைத்து பணம் வாங்கிக்கொள்...

ஜகன் :—(திடுக்கிட்டு) இது என்ன?

ராஜம் :—சீக்கிரம் போய்விடு. அவர் வருவதற்குள்! (மௌனமாய் ஜகன்னுதன் போகிறுன்.) அப்பா! ஒருவழியாக இந்தக் கஷ்டம் ஒழிந்தது. பணம் வருகிறபோது கொடுத்து நகையைத் திருப் பிக் கொள்ளலாம். அட! (கிருஷ்ணமூர்த்தி சிரித்துக் கொண் டே வந்து சட்டையைக் கழற்றிக் கோட் ஸ்டாண்டில் மாட்டு கிறுன்.

கிருஷ்ண :—(பிறகு ராஜம் இருக்கும் பக்கம் திரும்பி) யாரங்கே?

ராஜம் :—(சாதாரணமாக) எங்கே?

கிருஷ்ண :—இப்போது நீ யாரோடு பேசிக்கொண்டிருந்தாய்? (சுற்று முற்றும் பார்த்து) அட! நீயே பேசிக் கொண்டிருந்தாயா என்ன, தனக்குத் தானே?—(விழுந்து விழுந்து சிரிக்கிறுன். திடீரென்று சிரிப்பை நிறுத்திவிட்டு) —ராஜி!

ராஜம் :—ஏன்?

கிருஷ்ண :—நம்முடைய காலமெல்லாம், சிரிப்பும் விளையாட்டுமாகவே கழிய வில்லை?

ராஜம் :—(நடுங்கும் குரலில்) ஆம்!

பரதேசத் தபால்

தமிழ் வாசகர்களுக்கு,

தமிழ் நாட்டில் பத்திரிகை படிப்பவர்கள் சமீப காலத்திற்குள் மிகவும் ஜாஸ்தியாகி இருக்கிறார்கள் என்பது ரொம்ப சந்தோஷத்திற்குரிய விஷயம். அப்படிப் புதிதாகப் பத்திரிகை படிக்க ஆரம்பித்திருக்கும் நண்பர்கள் பத்திரிகைகள் எவ்வளவு விதமானவை என்பதை அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

தினசரிப் பத்திரிகைகள் அநேகமாக உலகச் செய்திகளைத் தருவதால் அவை வரவர வாழ்க்கைக்கு மூச்சு காற்றுபோல அவ்வளவு அவசியமாகிவிடும். அவை வாரக்கடைசியில் சில விசேஷ பகுதிகளையும் பிரசுரிக்கின்றன. அவற்றை வாசகர்கள் கொஞ்சம் தினசரியைக் காட்டிலும் ஆழ்ந்தே படிக்கவேண்டி யிருக்கும்.

வாரப் பத்திரிகைகளில் சில வெறும் செய்திகள் மட்டும் அடங்கியனவாக இருக்கின்றன. சில பூராவும் கட்டுரை, கதை முதலிய இலக்கிய விஷயங்கள் அடங்கியனவாக இருக்கின்றன. மற்றும் சில இரண்டு ரகங்களும் கலந்தவையாகவும் இருக்கின்றன.

சிலவற்றை மேலெழுந்தவாரியாகப் படித்து விடலாம். அவற்றில் அதிகமாகக் கவனம் செலுத்தி ஊன்றிப் பார்க்க வேண்டிய விஷயங்கள் இருக்காது. அதாவது சில பத்திரிகைகள் வெறும் பொழுது போக்குக்காக, ஏற்பட்டவைகள் ; வேறு சில அறிவுத் தாகத்தைத் தணிக்க முயலுகின்றன.

மாதப் பத்திரிகைகள் எல்லாம் அநேகமாகப் பின் ரகத்தைச் சேர்ந்தவைதான். என்றாலும் கதைகள் கட்டுரைகள் பொழுது போக்காகவும் உள்ளத்தைக் கிளறுவனவாகவும் இருக்கலாம். லேசான இலக்கியம் (லைட் லிட்ரசர்) என்பதும் நிரந்தரமாக இன்பமூட்டுவதாகவும் இருக்கலாம்.

எனவே வாசகர்கள் தாங்கள் வாசிப்பதை இந்த இரண்டு விதமாகப் பகுத்தறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். கனமான விஷயமானாலும் சரி லேசான சரக்கானாலும் சரி— எது நிரந்தரமாக, எப்பொழுது படித்தாலும், எவ்வளவு தரம் படித்தாலும் ருசிகரமாக இருக்கிறதோ அதுதான் இலக்கியம்.

அதைத்தான் வாசகர்கள் ஆதரிக்க வேண்டும். சோக ரஸமான விஷயம் தான் நிரந்தரமென்று கிடையாது. சலிப்பில்லாமல் இன்பத்தை அளிக்கும் ஹாஸ்யக் கட்டுரைகளும் கதைகளும் உண்டு.

பத்திரிகைகளின் கணக்கற்ற பத்திகளின் இடையே யிருந்து வாசகர்கள் இந்த மாதிரி இலக்கியத்தைப் பொருக்கி எடுக்கவேண்டும். அன்னம் பாலையும் நீரையும் பிரித்தெடுத்து விடும் என்பார்களே அந்த மாதிரி வாசகர்கள் தூசிலிருந்து தங்கத்தைப் பிரித்து எடுக்கவேண்டும்.

அப்பொழுதுதான் பத்திரிகைகள் வளரும்; இலக்கியம் வளரும்; பொதுஜன அறிவும் வளரும்.

லேசானது என்பதால் எல்லாம் படிக்கக் கூடியவை ஆகிவிடாது; கனமென்று இலக்கியத்தைத் தள்ளி விடவும் கூடாது. வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் என்பது போன்ற இரட்டைகள் போல, உள்ளத்திற்கும் லேசு, கனம் இரண்டும் வேண்டும். ஹாஸ்யம் மட்டும் உள்ளத்தை உருக்காது. சோகமும் இதர ரஸங்களும் கூட வேண்டும். நுனிப்புல் மேயும் காலமுண்டு, ஆனால் காலமெல்லாம் நுனிப்புல் மேய முடியுமா? வாழ்க்கையில் சிரிப்பு வேண்டியதுதான். ஆனால் சிரிப்பு வாழ்க்கையாகுமா?

தமிழன்.

காலேஜ் ஆசிரியர்களுக்கு

"நாளைய தேசம்" என்று சொல்லப்படும் மாணவ உலகத்தைப் பதன் படுத்தும் பேறு பெற்றிருக்கிறீர்கள் நீங்கள். உங்கள் வேலை எளிதல்ல. எவ்வளவோ கஷ்டங்களை யெல்லாம் பொருட் படுத்தாமல், நீங்கள் தேசத்தொண்டு இயற்றி வருகிறீர்கள். ஆனால்மாணவர்களுக்கு அவர்களுடைய பாடங்களைக் கரைத்துப் புகட்டுவதில் மட்டுமே நீங்கள் ஈடுபட்டிருக்கக் கூடாது.

தமிழ் நாட்டில் இன்று நவயுகத்தின் விளைவுகள் எல்லாம் பல துறைகளிலும் ராசிராசியாகக் குவிந்து கொண்டிருக்கின்றன வென்பதை நீங்கள் தான் மாணவர்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டும்.

முக்கியமாக தமிழ் இலக்கியத்தைப் படிக்கும்படி நீங்கள் தான் அவர்களைத் தூண்டவேண்டும். ஷேக்ஸ்பியரும், ஷெல்லியும் கீட்ஸும் மகா கவிகள் என்று அறிந்த மாணவர்கள் தமிழிலும் மகாகவிகள் இருக்கிறார்கள் என்று அறியவேண்டும். புது சக்திகளுக்குப் பிரதி பலிப்பாக ஆங்கிலத்தில் இலக்கியம் நவ நவமாகச் சிருஷ்டியாகிக் கொண்டிருக்கிறதென்றால் தமிழிலும் அதே துறைகளில் முதல் வேலைகள் நடந்து வருகின்றன என்பதை அவர்கள் அறியவேண்டாமா?

மாணவர்கள் கவனம் தமிழ் இலக்கியத்தில் திரும்பினால்தான் இலக்கியம் அபரிமிதமாக வளரும். அவர்கள் தான் அந்தக் கொடிக்குப் பந்தல் போட்டு நீர் இறைத்துப் பாதுகாக்கவேண்டியவர்கள்.

சிலர் இன்று விதை விதைத்து கால்கால் கட்டியிருக்கிறார்கள்.

மாணவர்கள்தான் கச்சை கட்டிக் கொண்டுவந்து நாத்தைப் பிடுங்கி நட்டுப்பயிரேற்ற வேண்டும்.

மாணவர்களுடைய வாழ்க் கைக் கொள்கையை நீங்கள் கொஞ்சம் மாற்றமுயலக்கூடாதா? வெறும் ஊதாரித்தனமும், பகட்டும், வேஷமும் மட்டும் வாழ்க்கையாகாது என்று அவர்களுக்கு அறிவுறுத்தவேண்டியது உங்கள் கடமையல்லவா ? அவர்களுடைய உணர்ச்சிகளில் ஆழமில்லை. ஊக்கமில்லை ; எளியவாழ்க்கையில் அவர்களுக்குப் பிடித்தமில்லை ; மேலான உணர்ச்சிகளை அவர்கள் ஏளனம் செய்கிறார்கள். பொதுவாக மாணவர்கள் காந்தியத்தை அவ்வளவாக மதிக்காமலிருப்பதற்கு இவைதானே காரணம் ? நீங்கள் என்ன செய்கிறீர்கள் அவர்கள் மனதைமாற்ற?

மடை பிடுங்கிக்கொண்டு எங்கோ ஓடும் அவர்களுடைய உள்ள வேகத்தை நீங்கள்தான் கரைபோட்டுக் கட்டுப்படுத்தக் கூடும். அதில் நீங்கள் உங்கள் முழுதிறமையையும் காட்டவேண்டியது உங்கள் கடமை. பாடபுத்தகங்களைச் சொல்லிக்கொடுப்பது பெரிதல்ல. வாழ்க்கையைச் சொல்லிக்கொடுங்கள் : உன்னத லட்சியங்களைப் புகட்டுங்கள்.

பெரியோர்களே, உங்கள் கடமையை நீங்கள் அறியாமல் நான் என்ன சொல்லப்போகிறேன் ? உங்களில் பலர் சிறந்த மேதாவிகள். மாணவ உலகத்தை நீங்கள் முயன்று முன்னுக்குக் கொண்டுவாருங்கள். மாணவர்களுக்கு மற்றொரு சமயம் நான் மனுச் செய்துகொள்ளுகிறேன்.

பழைய மாணவன்

திருடன் :—எங்கே காட்டு ! எவ்வளவு பாப்பம் !

இரண்டாம் திருடன் :—என் அவசரம் ? நாளக்கி பத்திரிகெலே வந்துடுது.

அந்தப் பார்வை!

சீதாபதி

ஆடி வெள்ளிக்கிழமை தினம். ஆடி வீதி முழுவதும் ஒரே கூட்டம். ஆயிரக்கணக்கான பேர்கள் மீனாக்ஷி அம்மனை தரிசனம் செய்யப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் நானும் ஒருவன்.

சாயந்திரம் மணி ஆறடித்ததும் புதிசாக வெள்ளை மடிப்பு உடைகளைப் போட்டுக் கொண்டேன். ஜோராகக் கிராப்பை வாரிவிட்டுக் கொண்டேன். சிகப்பு குங்குமப் பொட்டும் ஒன்று வைத்துக் கொண்டேன். கலையாத விசிறி மடிப்பு அங்கவஸ்திரத்தைப் போட்டுக் கொண்டு, அடிக்கொருதரம் அதைச் சரி பார்த்துக்கொண்டே ஆடி வீதியில் நடந்துகொண்டிருந்தேன்.

மின்சார விளக்குகள் அத்தனையும் ஏற்றப்பட்டு, ஜெகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது ஆடி வீதி. அடேயப்பா! எத்தனை வித சுந்தர உருவங்கள்! வண்ண வண்ணச் சேலைகள்! வைர ஒளி டால்கள்! மின்சார ஒளியால் எரிச்சல் எடுத்த கண்களுக்கு குளிர்ச்சி யூட்டும், இத்தனையிலும் மனதைப் பறிகொடுத்துப் போய்க் கொண்டிருந்தேன்.

வடக்கு மூலை திரும்பி, நாலெட்டு எடுத்து வைத்துவிட்டிருப்பேன். அபபோதுதான், என் கண்கள் க்ஷணமே கவ்வி விட்ட அந்த உருவம், எனக்கு முன்னால் போய்க்கொண்டிருந்தது, சுமார் ஐந்தாறு கஜ தூரத்தில்.

உருவத்தின் முன் சாயல் விழவில்லை. பின் சாயல் தான் பளீரென வீசி அடித்தது. பின் சாயலே அப்படி என்றால் முன் சாயல் எப்படி இருந்திருக்கும்? என் உள்ளம் ஒரு தரம் புல்லரித்துக் கொடுத்தது.

காலடிகளை இன்னும் அடக்கிப் போட்டேன், அந்த உருவத்திற்கு முன்னால் போய்விடாமல் இருக்கவேண்டும் என்று. முன் சாயலைப் பார்க்கவேண்டும் என்ற அவாதான் என் கண்களுக்கு. ஆனால், அதற்காக முன்னுக்குப் போய் அந்த உருவத்தையே கண்ணிலிருந்து மறைத்துக் கொள்ள விரும்பவில்லை.

நான் காலடி அடக்கிப் போட்டது எப்படி அந்த உருவத்திற்குத் தெரிந்திருக்க முடியும்? அந்தப் பெண்ணும் காலடிகளைத் தளர்த்திவிட்டு எட்டுகளைச் சிறிதாக்கி நடந்தாள். என்னை யறியாமல் இருவருக்கும் இடையே உள்ள இடை தூரம் சில எட்டுகளுக்குக் குறைந்துவிடும். 'அடாடா' என்று மறுபடி கால்களை இன்னும் வெகுவாக அடக்கிப் போட்டு இடை தூரத்தை அதிகப்படுத்திக் கொள்வேன்.

கருநாகம் போல முதுகின் மத்தியிலே விழுந்து புரண்டுகொண்டிருந்த பின்னலின் தலைப்பில், நாகரத்தினம் போல பளீரிட்டுக்கொண்டிருந்தது ஜடைவில்லை. நீலப்புடைவையில் ஜரிகைப் பூக்கள் மின்னிக்கொண்டிருந்தன. காலிலே பாத சரம், அவள் ஒவ்வொரு அடி எடுத்து வைத்த போதும் கலீர் கலீரென்று ஒலித்து, என் ஹிருதயத்தைச் சவுக்கினால் சுண்டிக் கொடுத்ததுபோல் இருந்தது. அவள் வயது—யுவதி என்றால் போதாதா?

திடீரென்று அந்தக் கழுத்து அசைந்து கொடுத்தது. மறு விநாடி அந்தப்பெண் பின்புறம் திரும்பிப் பார்த்தாள். நேரே அவைகள் வந்து என் கண்களில் குத்தின. என்ன ஊடுருவின பார்வை! மறுகணம் அந்த முகம் முன் பக்கம் திரும்பிவிட்டது.

என் அதிர்ச்சியை அடக்கிக்கொண்டு மறுபடியும் பின் நடந்து கொண்டிருந்தேன். என்னை அவளுக்குத் தெரியுமா? பின், பார்வை என்மீது விழுந்தது ஏன்? அந்தப் பெண்ணை எனக்குத் தெரியாதே!

இன்னும் நாலெட்டுக்கள்தான் போயிருப்போம். மறுபடியும் ஒரு தரம் திரும்பிப் பார்வை. இந்தத் தடவை அந்தப் பெண் நின்று விட்டாள். அதே ஊடுருவின பார்வை! இப்போது இன்னும் கொஞ்சம் அழுத்தமாக.

நிச்சயமாக என்னை அவளுக்குத் தெரியும் போலிருக்கிறது. ஒரு வேளை வேறு யாரையாவதா? பின்னால் திரும்பிப் பார்த்தேன், சந்தேகத்துக்கு. எனக்குப் பின்னால், அவள் பார்த்த திசையில் வேறு யாரும் இல்லை. என் மனதில் ஒரு குலுக்கல் ஏற்பட்டது. ரத்தம்கூட கொஞ்சம் வேகமாகப் பாய்ந்தது. நிச்சயமாக அந்தப் பெண் என்னைத்தான் பார்த்தாள். சந்தேகமே இல்லை. மூச்சு கொஞ்சம் வேகமாகக் கிளம்பி வந்தது. அடக்கி விட்டுக்கொண்டேன்.

அந்தப் பெண் மறுபடியும் திரும்பி முன்னால் நடந்தாள். நான் பழைய எட்டுக் கணக்கே போட்டேன். என் மனது எத்தனை நினைப்புகளை அப்போது உருட்டிவிட்டது? அத்தனையோடும் அலை நீந்தி, நடந்து கொண்டிருந்தேன், அந்த உருவத்தையே பார்த்துக்கொண்டு.

இன்னும் கொஞ்ச தூரம். முன் பாதியைக் கடந்து விட்டோம். இன்னும் கொஞ்சம் எட்டுகள் போட்டு விட்டால் கிழக்குப் பகுதியையும் திரும்பி விடுவோம். அந்தப் பெண் மறுபடியும் சடக்கென்று நின்றுவிட்டாள். என் கண்களைச் சரிப்படுத்திக்கொண்டு தயாராக நின்றேன். அதை அறிந்துகொண்டு விட்டவள்போல் அந்தப் பெண்ணும் சொல்லி வைத்ததுபோல் திரும்பிப் பார்த்தாள். இப்போதும் என்னையேதான்! அந்தப் பார்வை!

நானும் நின்றுவிட்டேன். ஒரு தரம் என் கண்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு மறுபடியும் பார்வையை நிலை நிறுத்தினேன். அப்போதும் அந்தப் பார்வை சிறிதும் மாறவில்லை. நேரே என்னை ஊடுருவி துளைத்துச் செல்லும் தோற்றம் அந்தக் கண்களில்—

எனக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்து அப்படியே நின்று விட்டேன். நாவல்கள், கதா பாத்திரங்கள், காதல் நிலைகள், எல்லாம் என் மனதிலே அப்போது அலறி ஓடின. சரிதான்! என்னைத் தயார்செய்து கொண்டுவிட்டேன்! ஒரு திடம் என் மனதில் ஏற்பட்டு விட்டது. கடைசி முறையாக உறுதியோடு நான் பார்த்தபோது—

அவ்வளவுதான்! அந்த முகத்தில் எத்தனை மாறுதல்கள்! நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே படீரென உதடுகள் வெடித்து விரிந்தன. மாதுளை முத்துக்களின் வரிசை இரண்டு பளீரென அதோடு திறந்து பளீரிட்டன. முத்துக்கள் கலகலத்தன. ஒரு சிறு புன்னகை முதலில், அதைத் தொடர்ந்து ஒரு சிரிப்பு!

என்னால் இதை நம்ப முடியவே இல்லை. எப்படி முடியும்? என் உதடுகளையும் நெகிழ்த்தி விட்டுவிட்டேன். எப்படிச் சிரித்திருப்பேனோ எனக்குத் தெரியாது. சிரித்துக் கொண்டே முன்னேறி இரண்டு எட்டுக்கள் வைத்து விட்டேன் நெருங்கி. இடையே இருந்தது சில எட்டுக்கள் தான்.

அடுத்த க்ஷணம் முத்துக்கள் கலகலத்து ஏதோ ஒரு சப்தத்தை வெளிக்கிளப்பினது போல் இருந்தது. அந்த வாயிலிருந்துதான்! ஆனால் பார்வை என்மீதுதான். சந்தேகமேயில்லை.

'இதுக்கா இவ்வளவு நாழி?' என்று கலகலப்போடு என்னைப் பார்த்துக்கொண்டே கேட்டாள் அந்தப் பெண். எனக்கு புரியவில்லை. அப்படியே பிரமித்து நின்றேன். எதற்காக இப்படி கேட்க வேண்டும் என்னை?

'இல்லெடிம்மா. ஏகக்கூட்டம். வாங்குகிறத்துக்குள்ளே பெரிய பாடாக போயிடுத்து!'

ஒரு புதுக்குரல்! திடுக்கிட்டு பின்னால் திரும்பிப் பார்த்தேன். எனக்குச் சற்று எட்டிவந்து கொண்டிருந்தாள் நடுத்தர வயது ஸ்திரீ ஒருவள்!

'அப்போதே முதல் உன்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தேன்'—அந்த யுவதியின் பதில்.

'என்னது? பார்த்தது, கேட்டது என்னை யில்லையா?' என் தலை ஒரு கிறுக்கிறுக்கினது. பின்னால் இரண்டு எட்டு வைத்தேன். முன்னாலே திரும்பிப் பார்த்தேன். அப்போதுதான் அந்த முகம் எனக்கு நேரே திரும்பி இருந்தது. ஆனால் கண்கள்!

அவை எங்கே பார்த்தன ?

அந்த நடுத்தர வயது ஸ்திரீ வந்து அவளோடு சேர்ந்து கொண்டாள். அந்தப்பெண் முகத்தை அவள் பக்கம் திருப்பினாள்!

அந்தப் பார்வை!

மறுபடியும் நேரே என் மீது வந்து விழுந்தது!

அட, கண்ருவியே! ஒண்ணரைக் கண்!

நாவல்கள், கதா பாத்திரங்கள், காதல் நிலைகள் எல்லாம் என் மனதிலிருந்து அப்போது ஓடின ஓட்டம்!

பெருமை

சிலர் பெரியோராகப் பிறக்கிறார்கள்; சிலர் பெருமையை சம்பாதித்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர்மீது சிறப்பு புகுத்தப்பட்டு விடுகிறது.

* * *

உங்களுடைய சிறப்பைப்பற்றி நீங்கள் எவ்வளவுக் கெவ்வளவு சொல்பமாக பேசுகிறீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு நான் அதிகமாக அதைப்பற்றிச் சிந்திப்பேன்.

* * *

நிரந்தரமாக நிற்கக்கூடியது என்று இல்லாத சிறப்பு சிறப்பே அல்ல.

* * *

சிறப்பைக் கண்டு எப்போதும் பொறாமைப் படாதே. அதனால் நீ இன்னும் உன்னை கேவலமாக்கிக் கொள்கிறாய். அதற்கும் உனக்கும் உள்ள தூரம் அதிகமாகி விடுகிறது. உன்னை அரிக்கும் புழுவாக நீயே இருக்காதே. ஆனபோதிலும், பிறரை உறுத்தாத வகையில் ஏற்படும் பெருமை நல்லது தான்; சிலாக்கியமான தூண்டுகோலாகும்.

நல்ல, திடமான மனப்பான்மை வாய்ந்த குணாதிசயத்தில்தான் சிறப்பின் சுருதி லயத்தைக் காணலாம். அந்தமாதிரி குணாதிசயத்தில்தான் பரந்த, ஆழ்ந்த வாழ்க்கை கிளம்புகிறது.

* * *

ஒருதரம் எனக்குப்பழகின, ஒரு ஐரிஷ் நகரத்தின் பிரபல வியாபாரி ஒருவனுக்கு நகர மேயர் பதவி கிடைத்தது. எனக்கு இருந்த உற்சாகத்தில் அவனைப் பாராட்டப் போனேன். அந்த ஸ்தானத்துக்கு அவன் உயர்ந்ததைப்பற்றி, அதை நான் தெரிவித்துக் கொள்வதில் நான் பட்ட அவஸ்தையையும், குழப்பத்தையும் கண்டு அவன் திடீரென்று என் பேச்சை தடைசெய்து சொன்னான்:

'பரவாயில்லை. எனக்குகிடைத்த உயர்ந்த பதவி ரொம்ப பெரியது தான். சந்தேகமே இல்லை. ஆனாலும் உனக்கும்எனக்கும்இடையே அதனால் ஒருவித வித்யாசமும் ஏற்படாது.'

* * *

மனிதனாகப் பிறந்தவர்கள் யாருமே, ஒருவர் தவறாமல் ஏதா

வது கற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. சமூகத்தின் அந்தஸ்தில் அவர்கள் எவ்வளவு உயர்ந்து இருந்தாலும் பரவா யில்லை. தங்களுடையது என்று பிரத்தியேகமான ஒரு தனி குண விசேஷத்தை அவர்கள் அடைந் தால் ஒழிய அவர்கள் சிறப்பாக விளங்க முடியாது.

* * *

பிறர் யாரையும் மிஞ்சிப் போவது, எல்லோருக்கும் முன் னணியில் போவதுதான் சிறப் பின் தன்மை.

* * *

சொத்து அல்லது பிறப்பு இவை வந்து ஒருவனைப் பெருமை யடையச் செய்கிறதில்லை. கௌர வமும், கண்யமுமான நடத்தை கள், பெருந்தன்மையான போக்கு. இவைதான் சிறப்படையச் செய் கின்றன.

* * *

சிறப்பு அடைவது கற்றுக் கொடுக்கக்கூடிய விஷயம் இல்லை. லாபம் தரக்கூடிய பொரு ளும் இல்லை. கடவுள் சிருஷ் டித்த ஒரு தனிப்பெரும் மனித னின் மனதை விளக்கும் நிலை தான்சிறப்பு. சொல்லிக்கொடு, உப தேசம் பண்ணு, எதுதான் செய் யேன்; ஒருவன் சக்திக்கும் இன் னொருவன் சக்திக்கும் மேடிட முடியாத ஒரு வித்தியாசத்தைத் தான் நீ காண்பாய்.

* * *

கடவுள் கொடுத்த இந்த உச்ச நிலை இருக்கிறதே, அது விலையற்ற பொருள். எந்தக் காலத்துக்கும், இந்த உலகத்துக்கு அரிதானது தான்.

நீ செய்யும் எந்தப் பொரு ளுக்கும், சொல்லுக்கும் கூட விலையைக் குறைத்துவிடலாம். இந்த உயர்ந்த மனதைப் பிறருக்கு எடுத்துக்காட்ட முடியாது; அதன் விலையைக் குறைக்க முடி யாது. அளவை அதிகமாக்கவும் முடியாது.

ஆகவே, மனிதன் செய்யக் கூடியது என்ன? ஒன்றைப் பார்க்கும்போதே, இரும்பிலிருந்து தங்கத்தையும், மணலிலிருந்து வைரத்தையும் பிரித்துப் பார்க்க வும் ஆராய்ந்து பார்க்கவும் வேண் டும். அதில் நாம் எவ்வளவுவெற்றி பெறுவோம் என்பதைப்பற்றி கவனிக்க வேண்டாம். பரிசீலனை செய்து பார்ப்போமே.

* * *

எப்போதும் ஒரே வழிதான் இருக்கிறது. அந்த வழிதான் கடினமான உழைப்பு. இந்த விலையை ஒருவன் சிறப்பு அடை வதற்குக் கொடுக்கத் தயாராக இல்லாவிட்டால், அவன் செய்ய வேண்டியது என்ன தெரியுமா?

பேசாமல் போய் நரிவேட்டை ஆடலாம். காளை மாடுகளைப் பற்றிப் பேசலாம். இதுமாதிரி வேலைகளில் தன்னைத் திணித்துக் கொண்டு குதிக்கலாம். அவனுக்கு அதுதான் சரி.

* * *

திடமாக இருப்பதினாலே மட் டும் சிறப்பின் தன்மை இல்லை. அந்த திடத்தை சரியான, ஒழுங் கான வழியிலே உபயோகப்

படுத்துவதில் தான் அதன் தன்மை இருக்கிறது.

சுய, தனிப் பெருமைக்காக ஒருவன் மற்றவர்களுக்கு முன்னால்போக ஏற்பட்டதானது இந்த இடத்தைச் சரியானவழியிலே உபயோகப்படுத்தினது அல்ல. யாருடைய இடத்தினால் தன் ஹிருதயத்தைத் திறந்து காட்டினவுடனே பல ஹிருதயங்கள் வசீகரமாகி விடுகிறதோ அவன்தான் சிறப்பு அடைந்தவன்!

* * *

'சிறப்பே! போய் வா.' இது தான் மனிதனின் நிலைமை. இன்று அவன் ஆசையிலை குறுத்து விடுகிறது. நாளை மலருகிறது. சிறப்பு, கௌரவம் அதன்மேல் அழுத்தமாக எழுதியாகி விடுகிறது.

மூன்றாவது நாள் வருகிறது ஒரு பனிப்புயல்! கொலைகாரப் புயல்!

ஏழை மனிதன். சரி, பழம் பழுக்கப்போகிறது என்று நிச்சயமாகவே நம்பிக் கொண்டிருக்கிறான். அப்போது தான் வேரையே கிள்ளி எறிந்து விடுகிறது!

நான் விழுந்தேனே! அதே போல அவனும் கீழே விழுகிறான்! சீச்சி! புகழும், பெயரும்! தொலையுங்கள்!

* * *

சிறப்பு வாய்ந்த ஒருவனைப் பற்றிக் கவனிப்போம். அவன் எழுந்திருக்க வேண்டியதுதான் தாமதம்! நூற்றுக்கணக்கான பேர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு விடுகிறார்கள். இது தான் சிறப்பின் முக்ய அம்சம்! இதில்லாமல் காலை எழுந்த உடனே தன் இஷ்டப்படி செய்ய முடிந்த ஒருவன் இருக்கிறானே. அவனை யாரும் லக்ஷியம் செய்வதில்லை! வேடிக்கை!

* * *

அவனுக்கு சகல சாமான்களும் கடலிலிருந்தும், மலையிலிருந்தும் கிடைத்து விடுகின்றன. அந்தஸ்து உள்ளவர்கள் என்று நாம் கருதுபவர்கள் எல்லாம் அவனுக்கு ஏவல் செய்கிறார்கள். அவன் விரும்பாத பேர்கள் எல்லாம் அவனைச் சுற்றிக்கொண்டு விடுகிறார்கள். எல்லோரும் அவனுக்கு மரியாதை செலுத்துகிறார்கள். அவன் ஆடையைப் புகழ்கிறார்கள், அவன் வீட்டுச் சமையலை, சமையற்காரனைக்கூட அவனிடம் புகழ்கிறார்கள்.

இப்படி அவனைக் கைதியாக்கி விடுகிறபோது அவன் எப்படி சுதந்திரமாக இருக்க முடிகிறது? அவனுக்கு எங்கேயும் சுதந்திரம் கிடைக்கிறதில்லை. கூட்டம் எப்போதும் சூழ்ந்து கொள்கிறது. வெளியே போனால், ஒப்புக்கான சம்பிரதாயங்களை எல்லாம் அவன் கைக்கொள்ள வேண்டி இருக்கிறது. அடேயப்பா! 'இப்படி போங்கள்' 'அந்தப் பக்கம் வேண்டாம்' 'இங்கே உட்காருங்கள்' இப்படியெல்லாம் எவ்வளவு அவஸ்தைகள்! இந்த நாள் வீணாகப் போச்சு அவனுக்கு!

சுத்தப் பட்டிக்காடு!

கு. ராமமூர்த்தி

1

"கலை உலகம்" பத்திரிகை ஆசிரியர் சிவராமனைப்பற்றி நேயர்களுக்கு நான் ஒன்றும் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. சமீபத்தில் அவனுக்கு நடந்த விவாகத்தைக் குறித்துப் பத்திரிகைகளில் வெளியான செய்தியை நேயர்கள் படித்திருப்பார்கள். சிவராமனுடைய கல்யாண விஷயம் கொஞ்சகாலமாகவே அனைவரும் ஆவலுடன் எதிர் பார்த்த விஷயம்தான். சிவராமன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சமாசாரமும் அவ்வப்பொழுது பத்திரிகை வாயிலாகவோ வதந்திகள் மூலமாகவோ வெளியாகும்போது ஜனங்களிடையே கொஞ்சம் பரபரப்பை உண்டுபண்ணித்தானிருக்கிறது.

தமிழ்ப் பத்திரிகைகளில் அடிக்கடி சிறு கதைகளும் கட்டுரைகளும் எழுதி, எழுத்தாளர் உலகில் ஒரு முதன்மையான ஸ்தானம் பெற்றுவிட்ட இந்த இளம் எழுத்தாளனைப் பற்றிய விஷயங்களை, அவை எதுவாக இருந்தாலும், ஜனங்கள் அறிந்து கொள்ள ஆவல் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

சிவராமனுடைய எழுத்துத் திறமையைக் குறித்து அவனுடைய வாசகர்கள் எப்படி நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தார்களோ, அவ்வாறே சிவராமனும் தன்னுடைய சாமர்த்தியத்தைப் பற்றிச் சிறப்பாகவே நினைத்துச் சிறிது தற்பெருமை கொண்டிருந்தான். இது மட்டு மல்லாமல், மற்ற சகோதர எழுத்தாளர்களைப் பற்றி அவன் மனதில் ஒரு தாழ்வான அபிப்பிராயமும் ஏற்பட்டிருந்தது.

மற்ற எழுத்தாளர்கள் என்று சொல்லும்பொழுது நான் எழுத்தாளர் கோஷ்டியில் அந்த சாக்ஷாத் பிரம்ம தேவனையும் சேர்த்துக்கொண்டுதான் சொல்லுகிறேன். ஒவ்வொரு பிராணியையும் சிருஷ்டிக்கும்போது, அதனதன் தலையில் அதனதன் வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயித்து அந்தப் பிரம்மாவானவர் எழுதி வைக்கிறார் என்று நாம் நம்புகிறோம் அல்லவா?

ஆனால் சிவராமனுக்கு இதில் துளிக்கூட நம்பிக்கை கிடையாது. இப்படிப்பட்ட மனுஷனுக்கு—அதாவது பட்டண நாகரிகத்தில் முற்றி பட்டிக்காடு என்றால் எட்டிக் காயைப்போல் வெறுத்தவனுக்கு — கடைசியில் ஒரு பட்டிக் காட்டுப் பெண்ணே மனைவியாக வந்து வாய்த்தாள் என்பதை நினைக்கும் போது, அவன் தாயார் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தபடி அவனையும்

சரோஜாவையும் சிருஷ்டிக்கும் போதே பிரம்மா முடி போட்டு வைத்தாரோ என்றுதான் நம்பத் தோன்றுகிறது.

பட்டிக்காட்டிலும் படு பட்டிக்காடான சின்னக் குப்பத்திலே தான் நம் சிவராமன் பிறந்தான். [அதை நினைத்தால் இப்பொழுது கூட அவனை வெட்கம் பிடுங்கித் தின்னும்!] அந்த ஊரிலேயே தான் பன்னிரண்டாவது வயது வரையில், அடுத்த வீட்டு மிராசுதார் பெண் சரோஜாவுடன் விளையாடிக் கொண்டும், சண்டை பிடித்துக்கொண்டும் வளர்ந்தான்.

அதற்கப்புறம் அவன் தகப்பனுருக்கு திடீரென்று அதிர்ஷ்டம் அடித்தது. அந்த அதிர்ஷ்டம் எமன் ரூபத்தில் வந்து, ரங்கூனில் வெகு காலமாகத் தேக்கு மர வியாபாரம் செய்துகொண்டிருந்த அவர் தமையனுரை 'க்ளோஸ்' பண்ணி விட்டது. அவர் சந்ததியின்றி இறக்கவே, சிவராமன் தகப்பனுர் அந்த வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காகக் குடும்பத்துடன் பர்மாவுக்குப் பிரயாணமானுர்.

எட்டு வருஷங்கள் சென்றன. இதற்கிடையில், பர்மாவில் குடியேறியிருந்த இந்தியர் நிலைமை வரவர மோசமாகிக் கொண்டே வந்தது. தேசம் விட்டு தேசம் வந்து, வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்து, இந்த 'கள்ளக் கருப்பர்கள்' தங்கள் நாட்டிலிருந்து பொருள் திரட்டிக் கொண்டு போகிருர்களே என்று பர்மாக்காரர்கள் இந்திய சகோதரர்களிடம் க்ஷாத்திரம் கொண்டார்கள். இந்தியரின் சொத்து சுதந்திரத்துக்கும், உயிருக்குமே ஹானி ஏற்படும்போலிருந்த படியால், சிவராமன் தகப்பனுர் 'திரைகட லோடித் திரவியம் தேடியது' போதும் என்று குடும்பத்துடன் தாய் நாட்டுக்குத் திரும்பினுர். நாட்டுப் புறத்து மனிதர்களாய் இருந்தவர்கள் நாகரிகத்தில் தேர்ந்தவர்களாய் விட்டபடியால், கிராமத்துக்குத் திரும்பிப் போக இஷ்டமில்லாமல் சென்னை நகரத்திலேயே தங்கி விட்டார்கள். சின்னக் குப்பத்திலிருந்த வீடும் நிலபுலனும் விற்கப்பட்டன. இரண்டு மூன்று வருஷத்துக்குள் சிவராமனும் பத்திரிகை உலகில் பெயர் பெற்றவனுனன்.

சிவராமனுடைய பெயர் தமிழ் நாட்டில் எங்கும் பிரபலமாய் விட்டது. தமிழ்ப் பத்திரிகைகள் செல்லும் இடங்களெல்லாம், கிராம கிராமாந்திரங்களில் கூடப் படித்த மனிதர்களில் சிவராமனின் பெயரை அறியாதவர் கிடையாது. ஓர் இளைஞன்—கலியாணம் ஆகாதவன்—இவ்வளவு புகழ் சம்பாதித்து விட்டானென்ருல், பெண்ணைப் பெற்றவர்கள் சும்மா இருப்பார்களா? நான் முந்தி, நீ முந்தி என்று அவர்கள் ஜாதகத்தைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தார்கள். திடீரென்று ஒரு நாள் சிவராமன் தகப்பனுருக்கு அவருடைய பழைய நண்பரான சின்னக்குப்பம் மிராசுதாரிடமிருந்து கூட ஒரு கடிதம் வந்தது.

அந்தக் கடிதத்தில், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவது போல, சரோஜா

வுக்கு அந்த வருஷம் கல்யாணம் செய்யவேண்டும் என்று தாம் உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்து விட்டு, சரோஜாவின் தகப்பனர், சிவராமனை ஒரு தரம் சின்னக் குப்பத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவனைப் பார்க்க வேண்டு மென்று தமக்கு அதிக ஆசையாக இருப்பதாகவும் எழுதியிருந்தார்.

கடிதம் வந்ததோ இல்லையோ, அதற்கப்புறம் ஒரு பத்து நாள் வரையில் சிவராமன் வீட்டில் இதே பேச்சுத்தான். பத்து வருஷத்துக்கு முன் சின்னக்குப்பத்தில். இருந்தபொழுது நடந்த விஷயங்களெல்லாம் ஒவ்வொன்ருக அவர்களுக்கு அப்பொழுதுதான் நேற்று நடந்ததுபோல் நினைவுக்கு வந்தன. வேறு யாருக்கு நினைவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிவராமன் தாயாருக்கு இந்த மாதிரி விஷயங்களைப் பொருத்த வரையில் ஞாபக சக்தி அபாரமாய் இருந்தது.

ஒரு நாள் மத்தியானம் மழை தூறிக் கொண்டிருந்த பொழுது, தான் சர்க்கரை இல்லை என்று சிவராமனை மிராசுதார் வீட்டுக்கு அனுப்பினது, சரோஜாவின் அம்மா ரவையைச் சர்க்கரை என்று நினைத்துப் பொட்டலம் கட்டித் தந்தது, தான் அதைக் கவனிக்காமல் காப்பியில் போட்டுவிட்டு அப்புறம் தெரிந்து கொண்டு அவஸ்தைப் பட்டது, முதலான ஸ்வாரஸ்யமான விஷயங்களைக் கைச்சரக்கைச் சேர்த்து அவள் விஸ்தரித்தாள்.

"இத்தனை வருஷத்துக்கு அப்புறம் இன்னும் நம்மை மறக்கவில்லை பார்த்தாயா மங்களமும் அவள் ஆத்துக்காரரும்! சரோஜனியை உனக்குக் கொடுக்க வேண்டுமென்று அவாளுக்கு ஆசையாய் இருக்கிறது போலிருக்கு. அதான் அப்படிக் கடுதாசி எழுதியிருந்தார். அந்தப் பெண்ணுக்கும் பதினெட்டு வயதாய் விட்டிருக்கும்; இன்னும் கல்யாணம் பண்ண வில்லையே! உனக்காகத்தான் அந்த சரோஜா காத்துக்கொண்டு இருக்கிருளோ என்னவோ! உனக்கும் அவளுக்கும்தான் முடி போட்டிருக்கிறதென்று எனக்கு அப்பவே தெரியுமே. ஏண்டா, நீ எப்போது சின்னக்குப்பம் போகப் போகிருய்?" என்று சிவராமனைக் கேட்டாள்.

நாட்டுப்புறம் என்றாலே கட்டோடு பிடிக்காத சிவராமனுக்கு இந்தக் கேள்வி ஆத்திரத்தை உண்டு பண்ணியது. தனக்குப் போய் ஒரு பட்டிக்காட்டு மனுஷன் பெண்ணைக் கொடுக்க உத்தேசித்திருப்பதையும், அதைத் தன் தாயாரும் தகப்பனரும் ஆதரிப்பதோடு நில்லாமல் அந்த சரோஜனியின் குணத்தையும் அழகையும் வாய் ஓயாமல் புகழ்வதையும் காண அவனுக்கு அடக்க முடியாத கோபம் வந்தது.

சின்னக்குப்பத்திலிருந்து கடிதம்வந்த அன்றையதினமே, தான் எந்தக் குப்பத்துக்கும் போகப் போவதில்லையென்றும், தனக்கு யாரையும் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் உத்தேசமே கிடையாதென்றும் கண்டிப்பாய் அறிவித்து விட்டான். இருந்தாலும் அவன் தாயாரின் உபத்திரவம் மட்டும் ஓயவில்லை.

"நீ ஒத்தரையும் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டாம். பிள்ளையாரோடு போட்டி போட்டுக்கொண்டு உட்காந்திருக்க வேண்டுமென்று உனக்கு ஆசையாக இருந்தால் இருந்து விட்டுப் போ. அவர்கள் உன்னை இவ்வளவு ஆசையோடு பார்க்க வேண்டும் என்று எழுதியிருக்கிறபோது நீ போகாமல் இருந்தால் நன்றாயிராது என்றுதான் சொல்லுகிறேன். வெறுமனே போய் மனுஷாளைப் பார்த்துவிட்டு இரண்டு நாள் இருந்துவிட்டு வந்தால் தேஞ்சா போய்விடுவாய்?" என்று அவள் தொந்தரவு செய்தாள்.

சிவராமன் சிநேகிதன் ஒருவனும் இதையேதான் சொன்னான்.

"கிராமாந்திரத்தைக் கண்டால் உனக்குப் பிடிக்கா விட்டால் போகிறது. வெறுமனே போயிட்டு வாயேன். பட்டிக்காடாயிருந்தாலும் நாலு இடத்துக்கும் போய்ப் பார்த்தால்தான் உனக்கும் கதை எழுதுவதற்கு விஷயம் ஏதாவது அகப்படும்" என்றான் அவன்.

நண்பன் சொன்ன வார்த்தை உண்மையானது என்று சிவராமனுக்குப் பட்டது. அதனால் திடீரென்று ஒரு நாள் தன் தாயாரைப் பார்த்து, "அம்மா, உன் இஷ்டப்படியே அந்தக் குப்பத்துக்குப் போய்விட்டு வருகிறேன்; அந்த சரோஜனி தேவியையும் தரிசனம் பண்ணிவிட்டு வருகிறேன். கோபித்துக் கொள்ளாதே" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

2

எழும்பூர் ஸ்டேஷனில் அவன் டிக்கட் வாங்குவதற்காகப் படி மேல் காலை வைத்தபோதே அந்த நாசமாய்ப் போகிற படி அவன் காலில் பட்டென்று இடித்தது. அந்தச் சமயத்தில் பிச்சை கேட்ட பிச்சைக்காரனைக் கோபத்தோடு வைது விட்டுச் சிவராமன் டிக்கட் வாங்கிக்கொண்டு ரயில் வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

அன்று ரயிலில் அதிகக் கும்பலே இல்லை. சிவராமன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு எதிரே இருந்த பெஞ்சியில் பரட்டைத் தலைக் கிராப்புடனும் ஹிட்லர் மீசையுடனும் விளங்கிய ஆசாமி ஒருவன் மட்டும்தான் இருந்தான். சிவராமன் பெஞ்சி மேல் படுக்கையை விரித்துப் போட்டு சாய்ந்து உட்கார்ந்துகொண்டு, ரயிலில் படிப்பதற்கான பத்திரிகையைப் பிரித்தான்.

அதில் கட்டுரை எழுதியிருந்த பிரமுகர் ஒருவர், "படித்த இளைஞர்களே! கிராமத்துக்குப் போங்கள்" என்று எழுதியிருந்ததைப் படித்ததும் கோபத்துடன் பத்திரிகையை மூடிவைத்துவிட்டு, "கிராமத்துக்குப்போய் என்னத்தைப் பண்ணுகிறது, என்று கேட்கிறேன். இவர்தான் கிராமத்துக்குப் போய் நாசமாய்ப் போகட்டுமே!" என்று முணுமுணுத்துக் கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

அப்போது, அவன் இருந்த வண்டிக்கு அடுத்தாற்போலிருந்த ஸ்திரீகளின் வண்டியில் ஏறிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் உருவம் அவன் கண்ணில் பட்டது. நடுத்தர வயதுடைய ஒரு மனிதர் அவளை அந்த வண்டியில் ஏற்றிவிட்டு, தாம் பிளாட்

பாரத்தில் நின்றபடியே கதவைச் சாத்திப் பூட்டினர். ஒரே ஒரு கணம்தான் சிவராமனின் பார்வை அந்தப் பெண்ணின்மேல் விழுந்திருக்கும். அந்த ஒரு கண நேரத்தில் சிவராமன் சொர்க்கத்துக்கே போய்விட்டுத் திரும்பினன். அவள் முகத்தில் தோன்றிய வசிகரமும், அவள் மருண்ட பார்வையை ஊருக்கு அனுப்புகிறேன் தனியாக. கூடத் துணைக்கு ஒத்தரும் இல்லை. நீங்கள் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கோ" என்று கேட்டுக் கொண்டார்.

"அதற்கென்ன" என்று சிவராமன் சொன்னன்.

அப்புறம் வண்டி புறப்பட்டபோது, அந்தப் பெண்ணின் தலை



யும், உடை அணிந்திருந்த அழகும் அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டன.

அவளை ரயிலேற்றிய மனிதர் சிவராமனைப் பார்த்ததும் அவனிடம் வந்து, "நீங்கள் எது வரையில் போகிறீர்கள்? மாயவரத்தைத் தாண்டியா?" என்று கேட்டார்.

சிவராமன், "ஆமாம்" என்று சொன்னதும் அவர், "குழந்தை ஜன்னலுக்கு வெளியே தோன்றிற்று. "போயிட்டு வரேன் மாமா!" என்று பிளாட்பாரத்தில் நின்றிருந்த மனிதரிடம் சொல்லிக் கொண்டாள். அப்பொழுது அவள் முகத்தில் தோன்றிய புன்னகையைக் கவனித்துக் கொண்டிருந்த சிவராமன் பளீரென்று மின்னல் தான் தோன்றி மறைந்ததோ என்று சந்தேகப்பட்டான்.

அவனுக்கு எதிரே உட்கார்ந்திருந்த பரட்டைத் தலை ஆசாமி அப்போது அவனைப் பார்த்து, "என்னுங்க, அந்த அம்மாளைத் தெரியுமா உங்களுக்கு?" என்று கேட்டதும் தான் சிவராமனுக்குத் தனக்குப் பக்கத்தில் வேறு மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற ஞாபகம் வந்தது. கோபத்தோடு அந்த மனிதனை விழித்துப் பார்த்துவிட்டு, "ஏன்?" என்று கேட்டான்.

"இல்லீங்க; ஸினிமாவிலே மிஸ் சௌபாக்கியலக்ஷ்மி என்று ஒரு அம்மா வராங்களே, அந்த அம்மா மாதிரியே இருந்திச்சு. அதாங் கேட்டேன்" என்று சொல்லிவிட்டு அந்த ஹிட்லர் ஜேபியிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு ஸ்வாரஸ்யமாய்ப் புகை விட ஆரம்பித்தார்.

சிவராமன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"சௌபாக்யலக்ஷ்மியாமே! அது யாரது சௌபாக்யலக்ஷ்மி? நான் பார்த்ததில்லையே! ஒரு வேளை இவன் சொல்கிறது போல் இவள் அந்த ஸினிமா நடிகை தானோ என்னமோ? ஸினிமாக்காரியாய் இருந்தாலும் பரவாயில்லை. பார்த்தால் நன்றாய்ப் படித்தவள் மாதிரி இருக்கிறது. ஸினிமாக்காரி என்றால் நன்றாய்ப் பாட்டும் பாடுவாள். அடடா, அந்த முகத்திலே தான் என்ன களை! கல்யாணம் பண்ணிக் கொண்டால் இந்த மாதிரி பெண்ணைப் பண்ணிக் கொள்ள வேண்டும். சின்னக் குப்பமாம்! சரோஜாவாம்!—"

3

ரயில் வண்டி செங்கல்பட்டு ஸ்டேஷனை அடைந்து நின்றது. சிவராமன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு இன்னொரு கோடியிலிருந்த கதவைத் திறந்துகொண்டு ஒரு டிக்கட் பரிசோதகர் வண்டியில் ஏறினர். இதைப் பார்த்துவிட்டுத் தானோ என்னவோ அந்த ஹிட்லர் மீசைக்காரன் மடமடவென்று எழுந்திருந்து கதவைத் திறந்து கொண்டு இறங்கிப் போய் விட்டான். அவன் மறைந்த அரை நிமிஷத்துக்கெல்லாம் அவன் படாரென்று சாத்திவிட்டுப் போன கதவு மறுபடி திறந்து கொண்டது. எழும்பூர் ஸ்டேஷனில் வண்டியில் ஏறும்பொழுது ஒரு விநாடி சிவராமனுக்குக் காட்சி அளித்து அவனைக் கனவு லோகத்துக்கு விரட்டியடித்த அந்தப் பெண் உள்ளே வந்து, சிவராமன் எதிரில் இப்போது காலியாய் இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

"அந்தப் பொம்மனாட்டி வண்டியில் என்னைத் தவிர வேறொருத்தரும் இல்லை. எனக்குத் தனியாய் இருக்கப் பயமாய் இருந்தது" என்றாள் ஒன்றும் புரியாமல் விழித்த சிவராமனைப் பார்த்து.

சிவராமன், "ஓஹோ!" என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்தான். எப்பொழுதும் பேச்சில் சளைக்காதவனாகிய அவனுக்கு ஏன் இப்படி வாயடைத்துப் போய்விட்டது?

அவன் சங்கடத்தை உணர்ந்து கொண்டு அவள் தானே மறுபடி பேசத் தொடங்கி, "என் சாமா

னெல்லாம் அந்த வண்டியிலேயே இருக்கிறது. ஒன்றும் பயமில்லையே? யாராவது எடுத்துக் கொண்டுபோய் விடுவார்களோ?" என்று கேட்டாள்.

சிவராமனுக்கு அப்போது தான் பேசுவதற்கு தைரியம் பிறந்தது. வாயிலிருந்து வார்த்தைகளும் குளறிப்போகாமல் வெளிப்பட்டன.

"பயம் ஒன்றும் இல்லை; யார் வந்து சாமானை எடுத்துக் கொண்டு போய்விடப் போகிறார்கள்? நாம் தான் பக்கத்து வண்டியிலேயே இருக்கிறோமே பார்த்துக் கொண்டு" என்றான்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"சின்னக் குப்பத்துக்கு."

இதைக் கேட்டு அவள் கலகல என்று சிரித்தாள்.

"ஐயோ! சுத்த குப்பைக்காடுன்னு அது! அதுதான் உங்கள் ஊரா என்ன?"

சிவராமனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, "இல்லை, அது என் ஊர் இல்லை. அங்கே ஒருவரைப் பார்ப்பதற்காகப் போகிறேன்" என்றான்.

"கல்யாணத்துக்குப் பெண் பார்க்கப் போகிறீர்களாக்கும்!"

சிவராமனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அத்துடன் அந்தப் பெண்ணின் மேல் கோபமும் உண்டாயிற்று. "என்ன இது; இவள் அழகைப் பார்த்து மயங்கிப் போனேனே. என்ன இப்படிப் பேசுகிறாள் இவள்? முன்பின் தெரியாத ஒருவனிடம் இந்த மாதிரி எல்லாம் கேள்விகள் கேட்கிறாளே! சே, இவளுக்கு என்ன இவ்வளவு தைரியம்?" என்று நினைத்துக் கொண்டான்.

"பெண் பார்க்கப்போகிறேனா? யார் சொன்னது? அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று சிறிது கடுமையாகவே பதிலளித்தான்.

"ஏன் பொய் சொல்லுகிறீர்கள்? உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே. பெண்ணின் பெயர் என்ன சொல்லுங்கள்" என்றாள் அவள்.

இந்தக் கேள்விக்குச் சிவராமன் பதில் சொல்ல விரும்பவில்லையானாலும் எப்படியோ அவனையும் அறியாமல் "சரோஜனி" என்ற வார்த்தை அவன் வாயிலிருந்து வந்துவிட்டது.

"சரோஜனியா? நல்ல பெயர் வைத்தார்கள்! பட்டிக் காட்டுப் பெண்ணுக்குச் சரோஜனி என்றும், மோஹனா என்றும், சுலோசனா என்றும் பெயர் வைத்தால் பொருத்தமாய் இருக்கிறதா என்ன? பெரியவர்கள் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும் பொழுது நன்றாய் யோசனை செய்து பிறகு பெயர் வைக்க வேண்டும்" என்று அவள் சிரித்தாள்.

(தொடரும்)

குத்தகை வசூல்

ஸ. வி. சாமந்த்

'தாயீ! போர் கிராமத்து மாது விட மிருந்து ஒன்றுமே வசூல் ஆகிறதில்லை. குத்தகை பாக்கியில் இதுவரை அவன் ஒரு சல்லிக் காசு கூட கொடுத்தபாடில்லை' என்று கேசவ கார்க்கூன் தன் யஜமானியிடம் கூறினன்.

'ஏன்?'

'அவன் காரணம் ஒன்றும் சொல்வதில்லை. பணம் தர முடியாதென்ருவது சொல்கிருனு? அதுவும் இல்லை. பணத்தைத் தருவதும் இல்லை. கம்மிய தழதழத்த குரலில் பேசுகிருன். வெட்கத்தினுல் பாதி ஜீவன் போனவன் போல் இருக்கிருன்!'

'வெட்கத்தினுலா! குத்தகை பாக்கியாவது கிடக்கட்டும். கிஸ்திப் பணத்தையாவது ஒழுங்காக கட்டி வந்திருக்கானு? வெட்கத்தினுலாம்! வெட்கத்தினுல்! அவ்வளவும் வெறும் வேஷம், சுத்த பாசாங்கு, கபடு......'

'அதில்லேம்மா, என்னைப் பார்க்கிற போதே அவன் முகத்தில் களை இறங்கி விடுகிறது. அந்த முகத்தைப் பார்த்தால் கள்ளங் கபடு நிறைந்தவனுகத்தோன்றவே இல்லை. இன்னும் சொல்லப் போனுல், அவன் சுத்த அப்பாவி'.

'பார்ப்பதற்குப் பரம சாது தான். உள்ளுக்குள்ளே சூது வாது. எவ்வளவு பேர்கள் பார்ப்பதற்குச் சாதுவாக இருந்து கொண்டு செய்கையில் கசாப்புக் கடைக்காரன் மாதிரியா......'

'இல்லை தாயீ! நிஜமாக இந்தத் தடவை நிலத்தில் நல்ல விளைச்சல் இல்லைதான். ஏதோ ஒன்றிரண்டு கூடை சோளம் விளைந்தது. அவ்வளவுதான். அதுவும் நாலைந்து குஞ்சு, குட்டிகள் இருக்கிற வீட்டிலே கேட்க வேண்டுமா? ஒரு வாரத்திலேயே தீர்ந்துபோய்விட்டது.'

'இதெல்லாம் அவன் தானே உன் கிட்ட சொன்னுன்' என்று ஆத்திரத்துடன் கேட்டாள் தாயி.

'ஆமாம், தன் கழுத்து மாலை மீது ஆணை வைத்துக் கூடச் சொன்னுன்.'

'ஆணையாவது, சத்யமாவது! எல்லாம் வெறும் சப்தம்தானே. தன் காரியம் ஆக எவ்வளவு வேண்டுமானுலும் செய்வான்.'

'இதுவரை அவன் பிசகி நடந்ததே இல்லையேம்மா.'

'இதுவரை யோக்யனுக இருந்தான். இப்போது ஏன் மாறி இருக்கக் கூடாது? போகிறது. அவன் வீடு எங்கே கிராமத்தில்?'

'சிவன் கோவிலை அடுத்த திட்டின்மேல் ஒரு குடிசை.'

'சரி நானே ஒரு நடை போய் கேட்டுப் பார்க்கிறேன். கொடுத்தால் ஆச்சு. இல்லையானால் கோர்ட் தான் இருக்கவே இருக்கு. பணத்தைக் கக்க வைக்கிறேன் அவனை. நாளைக்கே போகிறேன். ' பணம் கேட்டது மாதிரியும் இருக்கும்; சங்கரர் தரிசனம் ஆனது மாதிரியும் இருக்கும்.'

தாயிபாயியின் ஊரிலிருந்து போர் கிராமம் இரண்டு மைல் தூரம். அந்த ஊர்ப் பிரசித்த சங்கரர் கோவிலுக்கு தாயிபாயி நடந்தே போய் வருவது வழக்கம். அவள் விதவை; குழந்தை குட்டிகள் கிடையாது. அவளுக்குப் பிறந்த ஒரு குழந்தையும் அறையிலேயே இறந்து விட்டது. கேசவன் அவள் தம்பியின் புதல்வன். தன் புருஷன் விட்டுப்போன சொத்துக்களை பராமரிக்க அவனை நியமித்திருந்தாள்.

மாது, அவன் பங்குக்கு விடப்பட்ட நிலத்துக்கு குத்தகையை வழக்கமாகக் கட்டிவரும் பண்ணையாள். பரம்பரையாகத் தாயீபாயி வீட்டுக்குப் பண்ணைத் தொழில் செய்யும் குடும்பத்தில் வந்தவன். முன் வருஷம் விளைச்சல் சரியில்லை என்று கொஞ்சம் தள்ளுபடி செய்து கொண்டு போனான். இவ்வருஷம் விளைச்சல் இல்லாததால் அந்த வசூலும் ஆகவில்லை.

மறுநாள் பகல் பன்னிரண்டரை மணி சுமாருக்கு ஸ்நான, பூஜைகளை முடித்துக் கொண்டு, மாதுவின் குடிசைக்குப் புறப்பட்டாள் தாயிபாயி.

அந்தக் கடும்வெய்யிலில் மாது உழுத நிலத்தைப் பரம்படித்துக் கொண்டிருந்தான். தாயிபாயியை தூரத்தில் கண்டதும், வேலையை நிறுத்தி, எருதுகளுக்கு தண்ணீர் காட்டச் சென்றான்.

தாயிபாயி குடிசைக்குள் புகுந்தாள். மாதுவின் மனைவி சுகுந்தா ஒரு பலகையை போட்டு, எஜமானியை உட்காரச் சொன்னாள்.

'சுகுந்தா' என்று உரத்து கூப்பிட்டுக்கொண்டே தாயிபாயி மணையில் உட்கார்ந்தாள். 'நீங்கள் எங்கள் பரம்பரை பண்ணையாட்கள் தானே?'

'ஆமாம்மா. உங்கள் தயவாலே தானே வயிற்றைக் கழுவி வருகிறோம். பெரிய மனது...'

'அதற்கு இதுதான் நடந்து கொள்கிற விதமாக்கும், ஒரு சல்லிகூட குத்தகை கொடுக்காமல்?'

சுகுந்தா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அப்போது அவளுடைய சின்னப்பெண் துவாரகை தேம்பி அழுதுகொண்டு 'அம்மா! ஆத்மாண்ணு 'பாகரி' (சோளம், கம்பு ரொட்டி) எல்லாத்தையும் சாப்பிட்டுட்டான். கொஞ்சம்கூட எனக்குத் தரல்லே' என்றாள்.

'அழாதேடி கண்ணு. அவன் கிடக்கிறான். அதோ, கூடையிலே எதாவது இருக்கும். போய் எடுத்துச் சாப்பிடும்மா.'

துவாரகை கண்களை கசக்கிக் கொண்டு பெட்டியைப் போய்ப் பார்த்தாள். அங்கிருந்தே அவள் பரிதாபமாகச் சொன்னாள். 'அம்மா அதிலேயும் ஒண்ணும் இல்லேம்மா!'

சுகுந்தா அவளை அருகில் அழைத்து, இடுப்பில் எடுத்துக் கொண்டாள். தாயின் அன்பு

மிருந்த ஸ்பரிசம் பட்டதும், குழந்தையின் அழுகை குறைந்து நின்றது.

'தாயிசாப், இந்தத் தடவை ஒண்ணும் விளையலே இல்லே' என்றாள் சுருந்தா யஜமானியிடம்.

'பின்னே, அந்த அடுக்குப் பானைகள் எல்லாம் காலிதானு என்ன?' என்று கேட்டாள் யஜமானி.

'அம்மா, மூன்று தலைமுறையாக இந்த அடுக்குப் பானைகள் இங்கே இருக்கு. என் மாமியார் சொல்வாள். அவர்கள் நாளிலே இதுகள் நிறைய நகையும், நட்டும், பணமும், காசும் நிறைந்து கிடக்குமாம். இப்போ ஆமணக்குக் கொட்டைகூட அதுகளிலே இல்லே. ஹூம்...'

இதற்குள் எருதுகளுக்கு தண்ணீர் காட்டி, வைக்கோல் செத்தைகளைப் போட்டுக் கட்டிவிட்டு மாது உள்ளே நுழைந்தான். யஜமானியம்மாளை நமஸ்கரித்தான். உடனே, 'தாயிசாப், கொஞ்சம் இருங்கள். ஊருக்குள் போய்விட்டு இதோ வந்து விடுகிறேன்' என்றான்.

'இப்போ எதற்கு?'

'வெறுமனேதான்!'

'அப்படியானல் இங்கேயே உட்காரேன் வெறுமனே' என்று தாயிபாயி சிரித்துக்கொண்டே சொன்னாள்.

'இல்லே! உங்களுக்கு ஏதாவது பலகாரத்துக்கு வாங்கி...'

'அதெல்லாம் வேண்டாம் எனக்கு. பேசாமே...'

"ஏழை குடிசைக்கு வாராதவர்கள் வந்திருக்க, வெறும் கையோடேயே திரும்பிப்போகிறது எனக்கு மரியாதை ஆகாதே அது!"

'மாது, பேசாமல் இரு. இன்று எனக்கு சோமவார உபவாசம். வீடு போய்த்தான் பலகாரம் பண்ணுவேன். பலகாரப் பேச்சு இருக்கட்டும். ஆமாம், குத்தகைப் பணத்தில் நீ எவ்வளவு தரப் போகிறாய்? அதைக் கொடுத்தாலே எல்லா உபசாரமும் செய்த மாதிரிதான் எனக்கு,' என்றாள் தாயிபாயி.

மாது அதைக் கேட்டதும், கலவரமடைந்த குரலில் சொன்னான்: 'தாயி! என்னிடம் இப்போ செம்பாலே அடித்த காசுகூட இல்லேயே. ஏழைக்கு யார் கடன் கொடுப்பார்கள்? கடன் வாங்கலாம் என்றால் வீடா, வாசலா? எல்லாம் இந்த தடவை சாவியாகப் போச்சு. சொல்பம் வந்ததும் ஆகிப்போச்சு. ஏதோ கூலிவேலை செய்து, வருகிற இரண்டு காசுகளை வைத்துக் கொண்டு காலம் கடத்திக் கொண்டு வருகிறோம். அதுவும் சரியாகக் கிடைத்தால்தானே அம்மா? பொன்னுக விளைகிற நிலம்தான் நம்முடையது. இந்த வருஷம் நல்ல சமயத்திலே மானம் திறக்கவில்லேயே! நான் செய்த பாவம்......'

மாது இன்னும் பேசி இருப்பான். தாயி அவனை இடைமறித்து, 'ஆமாம், குத்தகைப் பணம் கொடுக்கிறது என்றால் வேம்பாகத்தான் கசக்கும். அடுக்குப் பானைகளிலே வைத்து பத்திரப் படுத்துகிறது என்றால் அது வேறே மாதிரிதான்.'

மாது கண்களில் நீர் துளிர்த்தது. 'அம்மா, பொய்யும் பித்தலாட்டமுமாக நான் உங்ககிட்ட சொல்வேனு' என்று கொண்டே சுகுந்தாவைப் பார்த்து, 'அடுக்குப் பானையிலே இருந்து இரண்டு நிலக்கடலையாவது எடுத்துக் கொடேன், யஜமானி அம்மாளுக்கு. ஏழை வீட்டிலே அதை



யாவது'... என்று முடிக்காமல் நிறுத்தினான்.

சுகுந்தா உடனே அடுக்குப் பானைகளை ஒவ்வொன்றாக கீழே இறக்கினாள். முதல் மூன்று பானைகள் சூன்யமாக இருந்தன. நான்காவதில் கைவிட்டுத் துளாவும்போது ஏதோ கையில் தடுக்கினது. வெளியில் எடுத்துப் பார்த்தபொழுது, எப்போதோ தாங்கி இருந்த மாட்டுக் கழுத்துச் சங்கிலியும், சில சோழிகளும் இருந்தன. நிலக்கடலை எதிலாவது இருந்தால்தானே!

'நிலக்கடலை இல்லையே' என்று கைவிரித்து கம்மியகுரலில் வருத்தத்தோடு கூறினாள் சுகுந்தா.

'போனால் போகிறது கொஞ்சம் சோளத்தையாவது பொரித்துக்கொடேன், சுடச்சுட.'

சூன்ய அடுக்குப்பானைகளின் தோற்றம் தாயிபாயின் மனதில் ஆழப்பதிந்தது. 'மாது அதெல்லாம் எனக்கு ஒன்றும் வேண்டாமப்பா.'

'இல்லேம்மா...'

மாது தானே எழுந்து சோளப் பானையை கீழே இறக்கி கையை விட்டுப் பார்த்தான். இரண்டு கைச் சோளம்தான் இருந்தது.

'சோளம் ஆகியா போச்சு?' என்று ஆச்சர்யத்துடன் கேட்டான் மாது.

'காலமேதான் ஆகிப் போச்சு. கொஞ்சம் எடுத்துக்கொண்டு

பாக்கியை வைத்திருக்கிறேன்' என்றாள் சுகுந்தா.

அப்போது சுகுந்தா இடுப்பில் இருந்த துவாரகை, 'அம்மா, பசிக்கிறது' என்று மறுபடியும் அழ ஆரம்பித்தாள். 'பெட்டியில் பாகரி இல்லையா' என்று கேட்டான் மாது.

சுகுந்தா உதட்டை பிதுக்கிக் கொண்டே ஒரு பெருமூச்சு விட்டாள்.

மாது ஒரு விநாடி தயங்கினன். 'சரி, சீக்கிரம் அதைப் பொறித்துவை. நான் போய் கொஞ்சம் நிலக்கடலை வாங்கி வறேன்' என்று கொண்டே மாது கிளம்பினன்.

'மாது, கொஞ்சம் இரு.'

தாயிபாயின் குரல் உச்சஸ்தாயியில் கிளம்பினது.

'என், தாயி அம்மா?'

'நீ போய்விட்டுத் திரும்புகிற போது ஒரு மணங்கு சோளம் வாங்கிவா கையோடு.'

மாது பிரமித்து நின்றான். தாயிபாயி சொன்னது அவனுக்கு விளங்கவில்லை. ஒரு மணங்கு சோளம் வாங்க அவனிடம் பணம் ஏது? யஜமானி அம்மாளையே பார்த்து நின்றான்.

தன் தலைப்பு முடிச்சிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து துவாரகை கையில் கொடுத்தாள் தாயிபாயி. 'துவாரகி, உனக்கு பாகரி நிறைய சாப்பிட ஆசையாக இருக்கு இல்லையா? இந்தா, இதை அப்பா கிட்ட தந்து நிறைய சோளம் வாங்கி, வரச்சொல்லு.'

'தாயி! தாயி!'—சுகுந்தா உணர்ச்சி வசமாகிக் கூவினள்.

மாதுவின் கண்களில் தண்ணீர் துளிர்த்தது. 'தாயீசாப் இந்த உபகாரத்துக்கு எப்படி நான் ஈடுகட்டப் போகிறேன்.'

'இது உபகாரம் இல்லையே, மாது.'

'பின் வேறு என்னம்மா?'

'அது எனக்குத் தெரியாது.'

கொஞ்ச நேரத்திற் கெல்லாம் மாது தன் யஜமானி அம்மாளைப் பின் தொடர்ந்து ஊருக்குப்போய் விட்டுத் திரும்பி விட்டான்.

தாயிபாயி வீட்டிற்குள் நுழைந்ததும், 'என்ன, ஏதாவது வசூல் ஆயிற்று? போனகாரியம்' என்று விசாரித்தான் கேசவன்.

'இல்லை.'

'அப்படியானல் மேற்கொண்டு கோர்ட்டில் வியவகாரம் நடக்க வேண்டியதுதானே.'

'ஒன்றும் வேண்டாம்.'

'வேண்டாமா? ஏன்?'

'நானே அதற்கு தக்க நடவடிக்கை நடத்திவிட்டுத்தான் வந்திருக்கிறேன்' என்று உறுதியாக பதில் கொடுத்தாள் தாயிபாயி.

கேசவன் வியப்புடன் தாயிபாயின் பிரகாசமான முகத்தையே, தன் தீக்ஷண்யமான கண்களால் பார்த்துக் கொண்டு நின்றான். அவனுக்கு தாயிபாயி கூறின அந்த வார்த்தைகள் புரியவில்லை.

(மராத்தியிலிருந்து வி. ராமராவ் மொழி பெயர்த்தது.)

நட்சத்திர குணாதிசயங்கள்

(24) சதயம்.

ஜென்ம நட்சத்திரம் :	சதயம்.
இதற்கதிபதி :	சுக்கிரன்.
இஷ்ட தேவதை :	யமன்.
பகை :	அஸ்தத்தில் பிறந்தவர்கள்.
உருவம் :	அலி.
குணம் :	சாத்மீகம்.
சுபப்பலன் தரும் வாரம் :	புதன்.
திசாதிபன் :	இராகு.

குணாதிசயங்கள் :—சினந்தரத்தக்க சொற்களைப் பொறுக்காதவன். எப்பொழுதும் பிணியுள்ளவன். இனிய வசனமுள்ளவ்ன். புத்திமான். வலுவுற்ற நீண்ட கை, கால்களுள்ளவன். அழகன். பொய் பேச மனமில்லாதவன். அரசர்க்கினியன். வித்வான், சூரன், சத்துருவை ஜெயிப்பவன், ஆதி, மத்திய, அந்தங்களில் திரண்ட ஐச்வரியங்களை அடைபவன், ஜலத்தில் வசிக்கும் வஸ்துக்களின்மீது பிரியப்படுபவன், அல்லது ஜலப் பிரயாணம் செய்பவனுமாவான்.

பின்னும் முதற் பாகத்தில் பிறக்கின் நற்குணமுள்ளவன், எதற்கும் உதாரணம் சொல்லுபவன், ஊக்கமுள்ளவன், பெரியோர்களிடத்தும் பசுக்களிடத்தும் பிரீதியுள்ளவன், கால்களில் சிறு பின்னமுள்ளவன், இடை வயதில் குடும்ப சஞ்சலமுள்ளவன், தக்க மைந்தரைப் பெறாது சஞ்சலப்படுபவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின், முன்கோபி, கிலேசமுள்ளவன், வஞ்சகம் தீர்த்துக்கொள்ளப் பிரியப்படுபவன், ஆசாரமற்றவன், குலபேதம் சொல்லித் திரிபவனுமாவான்.

மூன்றாம் பாகத்தில் பிறக்கின் நல்ல காரியங்களை யெல்லாம் செய்து முடிப்பவன், பசியுள்ளவன், சிறு வயிற்று வலியும் பித்த தேகமும் உள்ளவன், சேவகா விருத்தி செய்பவன், பந்து மித்ரரைப் பிரிந்து இருப்பவனும் ஆவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் வருமானமறிந்து செலவு செய்பவன், எதையும் யோசிப்பவனும், மானியும், நினைத்த காரியங்களை முடிப்பவனும் நல்லோர் உறவு கொள்ளுபவனுமாவான்.

(25) பூரட்டாதி.

ஜென்ம நட்சத்திரம் :	பூரட்டாதி.
இதற்கதிபதி :	சனி.
இஷ்ட தேவதை :	குபேரன்.
பகை :	உத்திரத்தில் பிறந்தவர்கள்.
உருவம் :	ஆண்.
சுபப்பலன் தரும் வாரம் :	புதன்.
திசாதிபன் :	குரு.

குணாதிசயங்கள் :—பிறர் சொற் கேட்காதவன். பால் நெய் முதலிய உணவிற் பிரியமுள்ளவன், தக்க கல்வியைப் படித்தும் பலன் பெறாதவன், நூதன பெருங் காரியங்களை செய்து அதனால் வரும் கீர்த்தியை தான் அடையாதவன், அன்போடு நேசித்த நேசர்களால் பின் அதிக துன்பமடைபவனுமாவான்.

பின்னும் முதற் பாகத்தில் பிறக்கின் அகன்ற வசீகரமான முகமுடையவன், பலவான், தன் இனத்தாரின்மீது பிரியமுடையவன், யுத்தம் செய்யப் பிரியப்படுபவன், நல்லுணர்ச்சியுள்ளவன், விசுவாசமுள்ளவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் கடவுள் பக்தியுள்ளவன், எத்தொழிலையும் நிதானித்துச் செய்பவன், பதுங்கி நின்று தன் காரியத்தை முடித்துக்கொள்ளுபவன், பிறர் சொல்லும் குறைச்சொற்களை மதியாதவன், சுதந்திரமாய் வாழப் பிரியப்படுபவன், சுய கட்டடங்கள் உள்ளவன், மாதா பிதாக்களுக்கு இன்பன்.

மூன்றாம் பாகத்தில் பிறக்கின், எப்போதும் சந்தோஷமுள்ளவன், பெருமை பேசுபவன், சாய்ந்த நடையுடையவன், பிறரிடத்திருந்து தன் காரியத்தை முடித்துக்கொள்ளும் சாதுரியன், மாமிச போஜனத்தில் பிரியமுள்ளவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின், வாத பித்த ரோகமுள்ளவன், கருத்தறிவுள்ளவன், சிறந்த சாந்தாஙபவமுள்ளவன், அழகுள்ளவன், நற்சிநேக முள்ளவன், நல்ல தொழிலுள்ளவனுமாவான்.

(26) உத்திரட்டாதி.

ஜென்ம நட்சத்திரம் :	உத்திரட்டாதி.
இதற்கதிபதி :	இராகு.
இஷ்டதேவதை :	காம்தேனு.
பகை :	பூரத்தில் பிறந்தவர்கள்.
உருவம் :	பெண்.
குணம் :	தாமதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	வியாழன்.
திசாதிபன் :	சனி.

குணாதிசயங்கள் :—தாகமுள்ளவன், உஷ்ண தேகி, அநேக சுற்றத்தாரை ரட்சிப்பவன், கோள் சொல்பவன், பிறருக்கும் குணம் செய்யும் குணமுடையவன், வேத சாஸ்திரங்களை கேட்கப் பிரியப்படுபவன், தாம்பூலப் பிரியன், உலகசஞ்சாரம் செய்பவன், அழகிய செவிகளை யுடையவன், விசாலமான மார்பைப் படைத்தவன், சாதுர்யமாய்ப் பொய் சொல்லுபவன், அன்னியர்களுடைய தொழிலைத் தான் செய்து பலனடைய விரும்புவன். வழக்குத் தொடுப்பதிலும் பேசுவதிலும் சாதுர்யமுள்ளவன்.

இத்துடன் முதற் பாகத்தில் பிறக்கின் சஞ்சலமுள்ளவன், ரோமம் நிறைந்த அழகிய தேகமுள்ளவன், கணிதம் முதலிய சாஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளவன். பின்புறங்களில் மரு மச்ச வடுவுள்ளவன்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின், முன் கரும தோஷப் பிணியுள்ளவன், சாது, சில நாள் தரித்திரனாக இருப்பவன், நல்ல குணங்களை யுடையவன், நன் நடக்கையுடன் அறிவுள்ளவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின், பகுத்தறியும் தன்மையில்லாதவன், முன் கோபி, சிறு காரியங்களைச் செய்து சந்தோஷிப்பவன், சாதுக்களை நிந்திப்பவன், பீதியுள்ளவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின், ஜீரண சக்தியற்றவன், தக்க ஆடையாபரண மிருக்கினும் அனுபவிக்காதவன், பொருளைத்தான் சேகரித்து, பின் பிறர் அனுபவிக்க, வருந்துபவன். அங்கியரால் தூஷிக்கப்படுபவனுமாவான்.

(27) ரேவதி.

ஜென்ம நட்சத்திரம் :	ரேவதி.
இதற்கதிபதி :	கேது.
இஷ்டதேவதை :	சனி.

பகை :	மகத்தில் பிறந்தவர்கள்.
உருவம் :	பெண்.
குணம் :	சாத்மீகம்.
சுபப்பலன் தரும் வாரம் :	சனி.
திசாதிபன் :	புதன்.

குணாதிசயங்கள் :—பெண்களிடத்து மிகவும் பிரியமுள்ளவன், பாதி நாள் மிகுந்த செல்வமுடனிருப்பவன், நல்லவன், பிறர் சொல் கேட்டு காரியங்களைச் செய்து பின் வருந்துபவன், நல்ல குணமுடையவன், கண்கள் அழகுடையவன், வாக்குச்சாதுரியன், பெரியோர்களை வணங்கும் பக்தியுள்ள புத்தியுடையவன், இரப்போர்க்கு இல்லையென்னாது கொடுப்பவன், பழி பாவத்திற்கு அஞ்சுபவன், அந்நிய ஊர்களில் தொழில் செய்து ஜீவிப்பவன். நேசரை நம்பி காரியமழிந்து கவலைப்படுபவனுமாவான்.

முதற் பாகத்தில் பிறக்கின் கலகப்பிரியன், நிபுணன், வித்வான், கிலேசி, சந்தோஷமுள்ளவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின், சோரன், தீரன், சௌக்கியமனுபவிப்பவன், கோபியும் சஞ்சல மனதினனும், மெல்லிய சரீரமுள்ளவனுமாவான்.

மூன்றாம் பாகத்தில் பிறக்கின், ஆய்ந்தோய்ந்து பாராமல் காரியங்களைச் செய்து பின் வருந்துபவன், சில நாள் தரித்திரத்தால் பீடிக்கப்படுபவனுமாவான், சஞ்சலமுள்ள நேசரைக்கூடி சஞ்சலப்படுபவன், நற்செயலில்லாதவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின், சத்தியவான், தாழ்த்தப்பட்டவர்கள் மீது பிரியப்பட்டு நன்மை செய்பவன், சுகவானும், சத்ருவை ஜயிக்கும் சக்தியுடையவனுமாவான்.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென்னிந்தியா வெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	60,00,000—0—0
ழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	18,60,147—0—0

செக்ரடரி : N. கோபால அய்யர்



மார்க்கோனி

1898-ஜூலையில் மார்க்கோனி ஒரு விநோதத்தை நடத்திக் காட்டினார். புகைப் படகுகளுக்குள் ஒரு பெரிய போட்டி நடைபெற்றது. 'டப்ளின் எக்ஸ்பிரஸ்' என்ற ஒரு ஐரிஷ் பத்திரிகை, மார்க்கோனியிடம், 'பறக்கும் வேடச்சி' என்ற ஒரு படகை வாடகைக்கு வாங்கிக் கொடுத்து, அதில் ரேடியோவை அமைத்து, அந்தப் படகுப் பந்தயத்தில் நடக்கும் வைபவங்களை யெல்லாம் அப்போதைக் கப்போது பத்திரிகையாபீசுக்கு அனுப்பும்படி நியமித்தது.

மார்க்கோனி அந்த வேலையை அற்புதமான திறமையுடன் செய்தார். கம்பியில்லாத் தந்தியினால் வியாபாரத் துறையில் எவ்வளவோ செய்யலாம், என்பதை முதன் முதலாக வியாபார நோக்கமுடையவர்கள் கண்டு கொண்டார்கள். இதற்கு முந்தி, சாஸ்திர நிபுணர்கள்தான் இதில் அக்கரை யெடுத்துக் கொண்டார்கள். இப்போது, மனுஷனுக்கும் ருசி ஏற்பட்டு, அவனும் அக்கரை கொள்ள ஆரம்பித்தான்.

அந்த 1898-லேயே மைதானத்தில் 120 அடி உயரத்தில் ஒரு ஸ்தம்பத்தை நாட்டி, மார்க்கோனி, தான் கண்டுபிடித்ததைப் பிரதரிசனம் செய்து வந்தார். ஒவ்வொரு தினமும் கூட்டங்கள் இந்தக் கம்பத்தைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்த வண்ணம்தான். இதைப்பற்றி வெகு பேச்சு நடந்தது. கதைகள், கட்டுக் கதைகள் கூடப் பறந்து சென்றன. "ரகஸ்யத்திற்கு உடந்தையாயிருப்பவர்கள், இந்த டோராக்களுக்குள் மந்திரவாத வேலைகள் எவ்வளவையோ கண்டு களிக்கிறார்கள்" என்ற கதைகூட கொஞ்ச காலம் உலாவிற்று.

மழையும் பனியும் கம்பியில்லாத் தந்தியின் வழியாக செய்திகள் போவதைத் தடுக்கமுடியாது, என்று ஜனங்களை நம்பும்படி செய்வது வெகு சிரமமாக இருந்தது. பலமுறை பல கோஷ்டிகளுக்கு பிரத்தியட்சமாகச் செய்து காட்டிய பிற்பாடுதான், நம்பிக்கை பிறந்தது. இப்போது போல அப்போது வாழ்க்கை நடைபெறவில்லை. இப்போதுதான் வேகயுகம். அப்போது எல்லாம் சாவகாசமாக நடைபெறும். மெள்ள மெள்ள, நாளடைவில்தான் ஜனங்கள் கவனிக்கப் புறப்படுவார்கள். அவர்களுடைய மனதின் சோம்பலை உடைத்து, சுறுசுறுப்பை ஏற்றி, கிளர்ச்சியைக் கிளப்பி, கவனிக்கச் செய்து, காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டியிருந்தது.

ஸ்தம்ப தரிசனமாவது அதனால் ஏற்பட்ட வியப்பாவது ஓயவே

யில்லை. அதிலிருந்து சீறி விழும் மின்சார தீப்பொறிகளை—ஜனங்கள்—சீறி விழும் சர்ப்பங்களுக்கு ஒப்பிட்டுக் கொண்டாடினர்கள்.

அப்போதைய இளவரசராகிய எட்வர்டுக்கு (பின்னிட்டு ஏழாவது எட்வர்டு) படகில் தற்செயலாக விபத்து ஏற்பட்டு, முழங்காலில் படுகாயம் ஏற்பட்டுவிட்டது. சிகிச்சை செய்வதற்கு, அரண்மனைக்குக் கொண்டுபோவதைக் காட்டிலும், படகிலேயே வைத்துக்கொண்டு சிகிச்சை செய்வதுதான் சிலாக்கியம் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். எட்வர்டின் குடும்பத்தார் படகுவாசம் செய்வதென்பது, இயலாத காரியம். ஆகையினால் படகில் இருந்தவர் படகிலேயே இருக்க வேண்டியதுதான்.

அரண்மனையில் உள்ளவர்கள் அரண்மனையிலேயே இருக்க வேண்டியது—ஆயினும் அடிக்கடி தகவல் இரண்டு கோஷ்டிகளுக்குள்ளும் போய்வர வேண்டும். இதற்கு என்ன ஏற்பாடு, என்று யோசிக்கையில், மாயாவி மார்க்கோனி வரவழைக்கப்பட்டார். அவர் கம்பியில்லாத் தந்தியை ஏற்படுத்தித் தந்தார். அவரே இருந்து காரியங்களைச் செய்து தந்தார்! செய்திகள் நடமாடும்படிச் செய்தார். இளவரசருக்கும் அவரது தாயாரான விக்டோரியா மஹாராணிக்கும் சராசரி 150 வார்த்தைகள் விதம் 150 செய்திகளை அனுப்பி வைத்தார்.

பத்திரிகைகளுள் உலகத்திலேயே ஓங்கிய பெயர் பெற்ற டைம்ஸ் பத்திரிகை அங்கம் அங்கமாக இந்தச் செய்திகளையும், இந்த அற்புதத்தை இயற்றிய மார்க்கோனியின் பிரபாவத்தையும் பிரசுரித்து விளம்பரம் செய்துகொண்டே வந்தது. இளவரசர், இந்தப் புதிய சாதனத்திற்கு வருங்காலத்தில் மிகப் பெரிய தசையை எதிர்பார்த்தார். விக்டோரியா மஹாராணி, இந்த அற்புதத்தின் மீது பரமப் பிரேமை கொண்டார்.

3-8-1899-ல் உயிர்களும் சொத்துக்களும் கம்பியில்லாத் தந்தியினால் காப்பாற்றப்பட்டன. ஒரு புகைக் கப்பல் குட்வின் என்ற புதை மணல்களில் சிக்கிக்கொண்டது. பக்கத்திலே சென்ற ஒரு சிறிய கப்பலில் இந்தக் கம்பியில்லாத் தந்தி அமைக்கப்பட்டிருந்தது. அது உடனே தகவலைக் கொடுத்தது. பரிகாரம் உடனே அனுப்பப்பட்டது. ஒரு உயிர் கூடப் போகாமல், அனைவரும் காப்பாற்றப்பட்டார்கள். 52,000 பவுன் பெருமானமுள்ள சொத்துக்களும் காப்பாற்றப் பட்டன. கம்பியில்லாத் தந்தி இவ்விதமாக வெல்லாம் உபகாரம் செய்யும் ஒரு சமய சஞ்சீவி யென்று பத்திரிகைகளில் கொண்டாடப்பட்டது.

1899-ல் மேன்மேலும் பல கப்பல்களில் இதை ஏற்படுத்தி—கப்பலுக்குக் கப்பல் சம்பாஷணைகள் நடைபெற்றன.

சீதோஷ்ண நிலைமையில் எவ்வித மாறுபாடுகள் நிகழ்ந்தாலும், இதன் வேலைகள் மாறுபாடுகளில்லாமல் நடைபெறும் என்று 1899-ல் பல முறைகளில் ருஜு செய்யப்பட்டது.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையேயுள்ள சமுத்திரத்தைச் செய்திகள் தாண்டும்படி செய்து காட்ட வேண்டும், என்பதுதான் அடுத்த முயற்சி.

பிரான்சில் உள்ள புலாயின் என்ற துறைமுகத்திற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மார்க்கோனி அங்கு சென்று—மூன்று இஞ்சினீயர்களை உதவிக்கு வைத்துக் கொண்டு—கருவிகளையெல்லாம் ஸ்தாபித்துக் கொண்டார். பெரிய வேலையானாலும் சரி, சிறிய விவரங்கள் ஆனாலும் சரி—மார்க்கோனி தானே கவனித்து வந்தார்.

பிரேஞ்சுக்காரர்களுக் கெல்லாம் பெரிய ஆச்சரியம். இஞ்சினீயர் வேலை, கைவினைஞன் வேலை, மின்சார வேலை, கொத்தன் வேலை, சமயத்திற்குத் தேவையான எந்த விதமான வேலையானாலும் சரி—சகலத்திற்கும் தயாராக நின்ற இந்த மார்க்கோனியைக் கண்டு வியப்புற்றார்கள். பெரு முயற்சிகளில் ஜயம் வேண்டுமானால்—ஒரே ஒரு உபாயம், நேர்முகமான கவனம் தான்—என்பது மார்க்கோனியின் கொள்கை.

1899-மார்ச் மாதத்தில் அந்த இங்கிலீஷ் சமுத்திரத்தைக் கடந்து முதல் செய்தி அனுப்பப்பட்டது. 28-3-1899-ல் அந்த முதல் செய்தி டைம்ஸ் பத்திரிகையில் பிரசுரமாயிற்று. பிரேஞ்சு உத்தியோகஸ்தர்களில் பலர் அப்போது அந்த கிராமத்திற்கு விஜயம் செய்திருந்தனர். இங்கிலீஷ் கரையில் இருந்து பிரேஞ்சு கரைக்குச் செய்திகள் வருவதை அவர்களுக்குக் காட்ட வேண்டும் என்று மார்க்கோனிக்கு விருப்பம் உண்டாகி, அன்றைய இரவில் போகும் படகிலேயே அவர்களைக் கூட்டிக் கொண்டுபோய் இங்கிலாந்தில் இறக்கி, அங்கிருந்து பிரான்சுக்குச் செய்திகளை அனுப்பி, அவர்களைச் சந்தோஷிக்கச் செய்தார்.

சாரணப் படையில் இப்போது பிரசித்திபெற்ற பேடன் பவல் என்பவர் அக்காலத்தில் போயர் யுத்தத்தில் மிகப்பிரசித்தி பெற்ற தளகர்த்தராக இருந்தார். அவர் மார்க்கோனியிடம் சென்று நான்கு நாள் தங்கியிருந்தார். அவர் மிகவும் கியாதி பெற்றவராக இருந்தபடியினால், அவருக்குத் தனது பராக்கிரமத்தைக் காட்டுவதில் மார்க்கோனி மிகுந்த கர்வம் கொண்டார்.

இரவு 10 மணிக்கு இங்கிலாந்திலுள்ள 'தேற்கு போர்லண்டு'க்கு மார்க்கோனி ஒரு செய்தியை அனுப்பினர். செய்தி வந்து சேர்ந்ததென்ற தகவல் அங்கிருந்து வரவில்லை. கொஞ்சநேரம் கழித்து, திரும்பவும் செய்தி கொடுக்கப்பட்டது. கேள்வி கேட்பாடு இல்லை. மார்க்கோனி மிகுந்த ஜாக்கிரதையுடன் யந்திரங்களைப் பரிசோதித்தார். முழு ஏற்பாட்டையும் அங்கம் அங்கமாக ஜடுதி பார்த்தார்.

பின்னிட்டு, மறுபடியும் ஸிக்னல்களை அனுப்பினர். யாதொரு தகவலும் இல்லை. கடைசியாக, பதிலை வாங்கிக்கொள்வதற்கு, புதிய ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தி நிறுத்தினர். குளிர்ந்த

இரவு, சமுத்திரக்கரை யோரம். புயலடித்த வண்ணமாக இருந்தது. வீட்டிற்கு வெளியே தங்கும்படியான இரவே அல்ல அது. ஆயினும் மார்க்கோனியும் தளபதியும் வெகு தீரமாக வெளியே தங்கினர்கள். இரவின் இருளில் ஸதம்பத்தின் உச்சியை அவர்கள் காணமுடியவில்லை.

இந்த திட்டமே முறிந்து விட்டதா என்ன? உடைந்து விட்டதா என்ன? அடியோடு தவறி விட்டதா? கண்டதெல்லாம் கனவா என்ன? நடைபெற்றதாகத் தோன்றியதெல்லாம் வெறும் தற்செயலா என்ன? அதிர்ச்சி கொடுக்கக்கூடிய சம்பவம் — மார்க்கோனியை தலை கிழாகக் கவிழ்த்து அடிக்கும் சம்பவம்!

திடீரென பின்புறமிருந்த டேராவிலிருந்து மின்சார மணி அடித்த சத்தம் காதில் விழுந்து, அலறிக்கொண்டே இருந்தது. மார்க்கோனி நெருப்புப்பட்ட பூனைபோல், தாவிக் குதித்து ஓடினர். இங்கிலீஷ் கரையிலிருந்து ஒரு கைவினைஞன், "தெற்கு போர்லண்டு" என்று கத்தினன். செய்தி வரப் புறப்பட்டு விட்டது. விளக்கை அருகில் வைத்துக்கொண்டு தளபதி, மார்க்கோனியின் தோள் பக்கம் நின்றுகொண்டு படிக்கலானர். "இப்போதுதான் சாப்பாட்டிலிருந்து வந்தோம். உங்கள் முனையில் ஏதேனும் விசேஷம் உண்டா?" என்று அந்த ஆள் இங்கிலீஷ் கரையிலிருந்து வினவினன்! மயக்கம் தெளிந்தது.

இருவரும் மகிழ்ச்சி யடைந்தார்கள்.

சகல தேசங்களிலிருந்தும் இந்த கிராமத்திற்கு விருந்தினர்கள் வந்துபோன வண்ணமாக இருந்தார்கள். அற்புத தரிசனத்திற்காக வந்தார்கள். இவர்களையெல்லாம் வரவேற்பதற்கு யாதொரு வசதியான மண்டபமும் அங்கு கிடையாது.

மண்டபம்தான் இல்லையென்றல், விருந்தினர் வந்தபோதெல்லாம் மழையையும் புயலையும் கூடவே கொண்டு வந்தார்கள்.

சீன மந்திரி வந்தார், அன்றைக்கும் மழை. ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு பிரமுகர் வந்தார். தொப்பிகள் பறந்து சென்றன. குடைகள் தலைகீழாகக் கவிழ்ந்து பிய்த்துக்கொண்டு ஓடின. தென் அமெரிக்காவிலிருந்து தந்திக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் வந்தார்கள். இவர்களுடன் பேசுவதில் பாஷைச் சங்கடம் வேறு. இதில் செவிடாக்கும் மழையும் புயலும் வேறு. இந்தக் கூட்டத்தில் ஸ்திரீகள் வேறு; இவர்களுடைய ஆடைகளுக்கு நேர்ந்த அலங்கோலங்களைச் சொல்ல இயலாது. இவர்களுடைய பட்டுத் தொப்பிகள் பறந்து சென்றன. முதலில் தொப்பிகளைத் துரத்திப் பிடிக்கப் பார்த்தார்கள்; பின்பு இது முடியாத காரியம் என்று கைவிட்டு விட்டார்கள்.

இப்பேர்ப்பட்ட புயல்களிலும் கம்பியில்லாத் தந்தி நன்ருக வேலை செய்தபடியினலும் — அஷ்ட திக்குகளிலிருந்து வந்தவர்கள், என்றைக்கும் மறவாத வண்ணம்

கண்டு களித்துச் சென்றபடியினாலும்—அவர்கள் சென்ற விடங்களிலெல்லாம் இந்த பராக்கிரமங்களைப் பிரஸ்தாபித்ததினாலும், கம்பியில்லாத் தந்திக்குப் பெருத்த மோஹனமான விளம்பரம் ஏற்பட்டு விட்டது.

கூலிக்கு நியமித்துக்கொண்ட பிரெஞ்சு ஆட்களில் ஒருவன், "என் யஜமானன் ஒரு மாதிரி 'கிறுக்கு' போலிருக்கிறது" என்று சொல்லிவிட்டான். கெம்ப் முதலிய மார்க்கோனி பக்தர்களுக்கு மிகுந்த ரோஷம் ஏற்பட்டுவிட்டது. இந்த அபிப்ராயத்தை, தங்களுடைய சூரரைப் பற்றி, மற்ற பெரிய மனிதர்களும் பிரான்சில் பிரஸ்தாபித்திருக்க வேண்டும்—இல்லாவிட்டால், இந்தக் கூலிக்கு அப்படிப் பேசுவதற்குத் தைரியம் வந்திராது.

பக்தர்களுடைய மனதில் இந்த வியாக்கியானம் உதயமாகவே, அடங்காத கோபம் பொங்கி விட்டது. அடிதடியாகிவிடும்போல், பேச்சு வார்த்தை தடித்துவிட்டது. எங்கேயோ இருந்த மார்க்கோனியினுடைய காதில் சச்சரவாகும் சத்தம் போய் பட்டது. அவர் வந்தார். விஷயம் என்னவென்று வினவினார். பக்தர்கள் பதில் சொல்லத் தயங்கினார்கள். "உம்மை கிறுக்கு" என்று சொன்னான் என்று சொல்ல நா எழவில்லை.

கடைசியாக கூலிக்கு வந்தவர்களில் இன்னும் ஒருவன், "சச்சரவு இவ்விதம் தான் நேர்ந்தது, சார். இந்த ஆள் சொல்லுகிறான்: கூலியாள் நியமித்த வேலையைச் செய்வதற்குத் தயாராக நிற்கிறான். கருவிகளையெல்லாம் வைத்துக்கொண்டு நிற்கிறான். ஆளுக்குக் கோளாறு சொல்லித் தருவதற்காக நீர் கொஞ்சம் செய்து காட்டப் புறப்படுகிறீர்! ஆனால் வேலை செய்யச் செய்ய, உமக்கே உற்சாகம் ஏற்பட்டுவிடுகிறதாம். வேலை முழுவதையும் நீரே செய்து முடித்து விடுகிறீராம். ஆளுக்குக் கொடுக்கும் கூலியில் மாத்திரம் ஒரு தம்பிடியைக் கூட குறைப்பது கிடையாதாம்" என்று சொல்லித் தன் கதையை நிறுத்திக் கொண்டான்!

இதில் கலகத்திற்கு யாதொரு காரணத்தையும் காணாதவராய், மார்க்கோனி திகைத்து நின்றார். கலகத்திற்குக் காரணமாக இருந்த வார்த்தையை, அந்த ஆளும் சொல்லத் தயங்கினான். கடைசியாக தைரியத்தைத் திரட்டிக் கொண்டு, அவன் மேலும் சொன்னான். "மழை பெய்தால், அதையும் சட்டை பண்ணாமல் நனைந்து கொண்டே நீர் வேலை செய்கிறீராம். இதெல்லாவற்றையும் பார்த்தால், நீர் ஒருவிதமான 'கிறுக்கு' போலிருக்கிறதென்று இந்த ஆள் உளறினான்" என்று சொல்லி முடித்தான்.

மார்க்கோனி ஒரு நிமிஷம் யோசித்துக் கொண்டே நின்றார். பின்பு ஒரு புன்சிரிப்பு சிரித்தார். அவருடைய புன்சிரிப்பு என்றால்—எந்தச் சங்கடமும் நிவர்த்தியாகிவிடும். அந்தக் குறும்புப் பேச்சு பேசின ஆளை சாச்வத வேலையாளாக அமர்த்திக் கொண்டார். மார்க்கோனியின் மரண பரியந்தம் அவன் அவருடைய சேவையிலேயே இருந்து வந்தான்.

நட்சத்திர பலா பலன்கள்

(1) அசுவனி-மகம்-மூலம்.

27-8-39 காலை 9-26 முதல்
28-8-39 பகல் 12-19 வரை.

மனோ உல்லாசம், நல்லோர் பேட்டி, சம சௌக்கியம், தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெறுதற்கான எத்தனஞ் செய்யின், பின் தக்கபலன் தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயந்தரும், சுகப் பலன் தரும் தினம்.

28-8-39 பகல் 12-19 முதல்
29-8-39 பகல் 3-16 வரை.

காரியத் தவக்கம், தொழில்களில் சாதாரணப் பலன், களத்திர புத்திரர்களால் மனக் கவலை, அன்னியருக்காக அலைச்சல், பிரயாண சேதி, ஆதிமத்யங்களில் எதிர்பாராத நேசர் பேட்டி, அவரால் மன உல்லாசம், பின் பலன் தரும் காரியம் முடிக்கின் நலம்.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலை 6-13 வரை.

நல்லோரிணக்கம், காரிய ஜெயம், வியாபாரத்தில் தக்க லாபம், நூதன தொழில் புரியின் மிகப்பலன், அனுமத்து லாபம்பெற எத்தனிக்கின் பலிதந்தரும், நூதன காரியம் எதைத் தொடரினும் பின் மிக்க நலன் தரும், இடையில் சிறு பகை தாபமுற்றகலும், வீண் சிந்தனையாயினும் இந்நாள் மிக நன்மையானதாம்.

30-8-39 மாலை 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

சங்கடம், அலைச்சல், எத்தொழிலிலும் பிசகுறுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் கவலை, பிறரிடம் காரியார்த்தமாகச் சென்றாலும் பகையுறும், தொழிலில் சோம்பல் உண்டாகும், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாக நடக்கின் நலம்.

31-8-39 இரவு 9-7 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

இந்நாளில் தொழில் எக்கவலையுமில்லாமல் நடைபெறும், மன உற்சாகம், காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்து முடித்தல், தொழிலில் லாபம் சேர்த்தி, புதிய நேசரால் காரியானுகூலம், குடும்ப மகிழ்ச்சி, சுகம், நற்காரிய ஆலோசனை, அதனால் பின்நலம், உத்தம நாள்.

1-9-39 இரவு 11-50 முதல்
2-9-39 இரவு 2-18 வரை.

நற்சிந்தனை, சிலநாளெண்ணம் முடிதல், கணக்குக் காரிய சீர்திருத்தம், பகைவரிடமிருந்து தன் காரியத்தில் வெற்றி பெறுதல், சாது பிரசங்க

சாஸ்திரக் கேள்வி, இஷ்ட காரியசித்தி, ஆதிமத்தியங்களில் சிறிது கலக்க மேற்பட்டாலும் பின் நலமாம்.

2-9-39 இரவு 2-18 முதல்
3-9-39 இரவு 4-20 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய்க் காரியம் முடிதல், முன் நடந்ததைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனத்தாங்கல், சேதியால் மனச் சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸதாபம், பொதுவில் சமப் பலனுண்டு, நூதன நல்ல காரியந் தொடரின் பலன் தாராது.

(2) பரணி-பூரம்-பூராடம்

27-8-39 காலை 9-26 முதல்
28-8-39 பகல் 12-19 வரை.

மனேபீதி, குடும்ப சஞ்சலம், தெரியாது தொழில்களில் பிசகியற்றிப் பின் வருந்துதல், போஜனக்குறை, அஜீரண சங்கடம், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், நூதனமாய்ப் பலன் தரத்தக்க காரியங்களைச் செய்தாலும் அல்லது காரியசித்தி பெறுவதற்கு முதன்மை யானவர்களைப் பேட்டி காணினும் பலன் தராது.

28-8-39 பகல் 12-19 முதல்
29-8-39 பகல் 3-16 வரை.

மனே உல்லாசம், நல்லோர் பேட்டி, சமசௌக்கியம், தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெறுவதற்கான எத்தனஞ் செய்யின் பின் தக்க பலன் தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப் பலன் தரும் தினமாம்.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலை 6-13 வரை.

காரியக் தவக்கம், தொழில்களில் சாதாரணப்பலன், களத்திர புத்திரர்களால் மனக்கவலை, அன்னியருக்காக அலைச்சல், பிரயாணச்சேதி, ஆயினும் ஆதி மத்தியங்களில் எதர்பாராத நேசர் பேட்டி, அவரால் மன மகிழ்ச்சி, பின் பலன் தரும் காரியம் முடிக்கின் நலம்.

30-8-39 மாலை 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

நல்லோரிணக்கம், காரிய ஜெயம், வியாபாரத்தில் தக்கலாபம், நூதன தொழில் ஆரம்பம் செய்யின் பின் பலன் தரும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் பலிதந்தரும். நூதன காரியம் எதைத் தொடரினும் ஜெயந் தரும், இடையில் சிறு பகை தாபமுற்றகலும், வீண் சிந்தனே, ஆயினும் இந்நாள் மிக நன்மை யானதாம்.

31-8-39 இரவு 9-7 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

சங்கடம், அலைச்சல், எத்தொழிலிலும் பிசகுறுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் கவலை, பிறரிடம் காரியார்த்தமாகச் சென்றுலும் பகையுறும், தொழிலில் சோம்பலுண்டாகும், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலமாம்.

1-9-39 இரவு 11-50 முதல்
2-9-39 இரவு 2-18 வரை.

இந்நாள் எக்கவலையுமில்லாமல் தொழில் நடக்கும், மனோ உற்சாகம், காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்து முடித்தல், தொழிலில் லாபம், கீர்த்தி, புதிய நேசரால் காரியானுகூலம், குடும்ப மகிழ்ச்சி, சுகம், நற்காரிய ஆலோசனை, அதனால் பின் நலம், உத்தம நாள்.

2-9-39 இரவு 2-18 முதல்
3-9-39 இரவு 4-20 வரை.

நற்சிந்தனை, சிலநாளெண்ணம் கைகூடுதல், கணக்குக் காரிய சீர் திருத்தம், பகைவரிடமிருந்து தன் காரியத்தை ஜெயித்தல், சாது பிரசங்க சாஸ்திரக் கேள்வி, இஷ்ட காரியசித்தி, ஆதி மத்தியங்களில் சிறிது கலக்க முறினும் பின் நலமாம்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

27-8-39 காலை 6-23 முதல்
28-8-39 பகல் 12-19 வரை.

பொருள் வருத்து, மன மகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப சுகம், நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் தக்க பலன் தரும், பிறர் பால் சிக்கிய தனத்தை மீண்டும் பெற எத்தனிக்கின் பலிதந்தரும், இந்நாள் சுகமே நடக்கும், இடையில் அடுத்தவரால் வருத்தங் காட்டி நீங்கும், மனோதாபமு முற்றகலும்.

28-8-39 பகல் 12-19 முதல்
29-8-39 பகல் 3-16 வரை.

மனோபீதி, குடும்ப சஞ்சலம், தெரியாது தொழிலில் பிசகியற்றிப் பின் வருந்தல், போஜனக் குறை, அஜீரண சங்கடம், இந்நாளில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், நூதன பலன் தரத்தக்க காரியங்களைச் செய்தாலும் அல்லது காரியசித்தி பெறுவதற்கு முதன்மையானவர்களையோ காணின் பலன் தராது.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலை 6-13 வரை.

மனோ உல்லாசம், நல்லோர் பேட்டி, சம சௌக்கியம், தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெருவதற்கான எத்தனஞ் செய்யின் பின் தக்க பலிதந் தரும், காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப்பலன் தரும் தினம்.

30-8-39 மாலை 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

காரியத்தவக்கம், தொழில்களில் சாதாரணப் பலன், களத்திர புத்திரர்களால் மனக்கவலை, அன்னியருக்காக அலைச்சல், பிரயாணச்சேதி, ஆயினும் ஆதி மத்தியங்களில் எதிர்பாராத நேசர் பேட்டி, அவரால் மனோ உல்லாசம், பின் பலன் தரும் காரியம் முடிக்கின் நலம்.

31-8-39 இரவு 9-7 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

நல்லோரிணக்கம், காரிய ஜெயம், வியாபாரத்தில் தக்க லாபம், நூதன தொழில் தொடங்கின் ஜெயம் உண்டாகும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் பலன் தரும், இடையில் சிறு பகை தாபமுற்றகலும், வீண் சிந்தனை யெனினும் இந்நாள் மிக நன்மை தருவதாம்.

1-9-39 இரவு 11-50 முதல்
2-9-39 இரவு 2-18 வரை.

சங்கடம், அலைச்சல், எத் தொழிலிலும் பிசகு ஏற்படுதல், தேக அசௌக்கியம் இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் கவலை, பிறரிடம் காரியார்த்தமாகச் சென்றாலும் பகையுறும், தொழிலில் சோம்பலுண்டாகும், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

2-9-39 இரவு 2-18 முதல்
3-9-39 இரவு 4-20 வரை.

இந்நாளில் தொழில் எக்கவலையுமின்றி நடக்கும், மன உற்சாகம், காரியங்களைச் சாதுர்யமாய் செய்து முடித்தல், தொழிலில் லாபம் சேர்த்தி, புதிய நேசரால் காரியானுகூலம், குடும்ப மகிழ்ச்சி, சுகம், நற்காரிய ஆலோசனை, அதனால் பின் நலம் உத்தமம்.

(4) ரோகிணி-அஸ்தம்-திருவோணம்.

27-8-39 காலை 9-26 முதல்
28-8-39 பகல் 12-19 வரை.

தொழிலில் தாமதமாய்க் காரியங்கள் முடிதல், முன் நடந்ததைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனத்தாங்கல், அல்லது சேதியால் மனச் சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப் பலனுண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன் தராது.

28-8-39 பகல் 12-19 முதல்
29-8-39 மாலை 3-16 வரை.

பொருள் வரத்து, மன மகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப சுகம், நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் தக்க பலன் தரும், பிறர்பால் சிக்கிய தனத்தை மீண்டும் பெற எத்தனிக்கின் பலன் தரும், இந்நாள் சுகமாய் நடக்குமெனினும் இடையில் அடுத்தவரால் வருத்தந் காட்டி நீங்கும், மனோதாபமும் அகலும்.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலை 6-13 வரை.

மனோபீதி, குடும்ப சஞ்சலம், தெரியாத தொழில்களில் பிசகியற்றிப் பின் வருந்தல், போஜனக் குறை, அஜீரண சங்கடம், இந்நாளில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாக நடக்கின் நலம், நூதனமாகப் பலன் தரும் காரியங்களைச் செய்தாலும் காரியசித்தி பெறுவதற்கு முதன்மையானவர்களைப் பேட்டி காணினும் பலனுறாது.

30-8-39 மாலே 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

மனோ உல்லாசம், நல்லோர் பேட்டி, சம சௌக்கியம், தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெறுதற்கான எத்தனஞ் செய்யின் பின் தக்க பலிதந் தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப்பலன் தரும் தினம்.

31-8-39 இரவு 9-7 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

காரியத் தவக்கம், தொழில்களில் சாதாரணப் பலன், களத்திர புத்திரர்களால் மனக் கவலே, அன்னியருக்காக அலேச்சல், பிரயாணச் சேதி, ஆயினும் ஆதிமத்தியங்களில் எதிர்பாராத நேசர் பேட்டி, அவரால் மனோ உற்சாகம், பின் பலன் தரும் காரியங்கள் முடிக்கின் நலம்.

1-9-39 இரவு 11-50 முதல்
2-8-39 இரவு 2-18 வரை.

நல்லோரிணக்கம், காரிய ஜெயம், வியாபாரத்தில் தக்க லாபம், நூதன காரியம் எதைத் தொடரினும், பின் மிக்க பலன் தரும், அனுமத்து லாபம் பெற முயற்சிக்கின் ஜெயமுண்டாகும், சிறுபகை தாபமுற்றாலும், வீண் சிந்தனையாயினும் இந்நாள் மிக நன்மையானதாம்.

2-9-39 இரவு 2-18 முதல்
3-9-39 இரவு 4-20 வரை.

சங்கடம், அலேச்சல், எத்தொழிலிலும் பிசகு நேருதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் கவலே, பிறரிடம் காரியார்த்தமாகச் சென்றால் பகையுறும், தொழிலில் சோம்பல், எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

(5) மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம்.

27-8-39 காலே 9-26 முதல்
28-8-39 பகல் 12-19 வரை.

நற்சிந்தனே, சிலநாளெண்ணம் கைகூடுதல், கணக்குக் காரிய சீர்திருத்தம், பகைவரிடமிருந்து காரியத்தைச் ஜெயித்தல், சாது பிரசங்க சாஸ்திரக்கேள்வி, இஷ்ட காரியசித்தி, ஆதி மத்தியங்களில் சிறிது கலக்க முறினும் பின் நலமாம்.

28-8-39 பகல் 12-19 முதல்
29-8-39 பகல் 3-16 வரை.

தொழிலில் தாமதம், முன் நடந்ததைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனத்தாங்கல், அல்லது சேதியால் மனச் சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப்பலனுண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன் தராது.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலே 6-13 வரை.

பொருள் வரத்து, மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப சுகம், நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் தக்க பலன் தரும்,

பிறர்பால் சிக்கிய தனத்தை மீண்டும் பெற எத்தனிக்கின் ஜெயமுண்டாகும். இத்தினம் சுகமாய் நடந்தாலும் இடையில் அடுத்தவரால் வருத்தங் காட்டி நீங்கும், மனோதாபமு முற்றகலும்.

30-8-39 மாலை 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

மனோபீதி, குடும்பசஞ்சலம், தெரியாது தொழில்களில் பிரகியற்றிப் பின் வருந்துதல், போஜனக்குறை, அஜீரண சங்கடம், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையோடு நடக்கின் நலம், நூதனமாய்ப் பலன் தரத்தக்க காரியங்களைச் செய்யினும் அல்லது காரியசித்தி பெறுவதற்கு முதன்மையானவர்களைக் காணினும் பயன் தராது.

31-8-39 இரவு 9-7 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

மனோ உல்லாசம், நல்லோர் பேட்டி, சம சௌக்கியம், தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெறுவதற்கான எத்தனம் செய்யின் பின் தக்கபலன் தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயந்தரும், சுகப்பலன் தரும் நாள்.

1-9-39 இரவு 11-50 முதல்
2-9-39 இரவு 2-18 வரை.

காரியத் தவக்கம், தொழில்களில் சாதாரணப்பலன், களத்திர புத்திரர்களால் மனக்கவலை, அன்னியருக்காக அலைச்சல், பிரயாணச்சேதி, ஆயினும் ஆதிமத்தியங்களில் எதிர்பாராத நேசர் பேட்டி, அவரால் மனோ உல்லாசம், பின் பலன் தரும், காரியங்கள் முடிக்கின் நலம்.

2-9-39 இரவு 2-18 முதல்
3-9-39 இரவு 4-20 வரை.

நல்லோரிணக்கம், காரியஜெயம், வியாபாரத்தில் தக்க லாபம், நூதன காரியம் எதைத் தொடரினும் பின் மிக்க பலன்தரும், இடையில் சிறு பகை தாபமுற்றகலும், வீண் சிந்தனையாயினும் இந்நாள் மிக நன்மையானதாம்.

(6) திருவாதிரை-சுவாதி சதயம்.

27-8-39 காலை 9-26 முதல்
28-8-39 இரவு 12-19 வரை.

இந்நாளில் எக்கவலையுமில்லாமல் தொழில் நடக்கும், மன உற்சாகம், காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்து முடித்தல், தொழிலில் லாபம், கீர்த்தி, புதிய நேசரால் காரியானுகூலம், குடும்ப மகிழ்ச்சி, சுகம், நற்காரிய ஆலோசனை, அதனால் பின் நலம், உத்தம நாள்.

28-8-39 இரவு 12-19 முதல்
29-8-39 காலை 3-16 வரை.

நற்சிந்தனை, சில நாளெண்ணம் கை கூடுதல், கணக்குக் காரிய சீர்திருத்தம், பகைவரிடமிருந்து தன் காரியத்தை ஜெயித்தல். சாது பிரசங்க சாஸ்திரக் கேள்வி, இஷ்ட காரிய சித்தி, ஆதி மத்தியங்களில் சிறிது கலக்க முறினும் பின் நலமாம்.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலை 6-13 வரை.

தொழிலில் தாமதமாய்க் காரியம் முடிதல், முன் நடந்ததைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனத் தாங்கல், அல்லது சேதியால் மனச்சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகளால் மனஸ்தாபம், பொதுவில் சமபலனுண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன் தராது.

30-8-39 மாலை 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

பொருள் வரத்து, மனமகிழ்ச்சி இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப சுகம், நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் தக்க பலன் தரும். பிறர் பால் சிக்கிய தனத்தை மீண்டும் பெற எத்தனிக்கின் பலன் தரும். இந்நாள் சுகமாய் நடக்கும், இடையில் அடுத்தவரால் வருத்தங்காட்டி நீங்கும், மனோதாபமு முற்றகலும்.

31-8-39 இரவு 7-9 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

மனோ பீதி, குடும்ப சஞ்சலம், தெரியாத தொழில்களில் பிசகியற்றிப் பின் வருந்துதல், போஜன சுகங் குறைதல், அஜீரண சங்கடம், இந்நாளில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாக நடக்கின் நலம், நூதனமாய்ப் பலன் தரும் காரியங்களைச் செய்யினும் அல்லது காரியசித்தி பெருவதற்கு முதன்மையானவர்களையோ காணினும் பலன் தராது.

1-9-39 இரவு 11-50 முதல்
2-9-39 இரவு 2-18 வரை.

மனோ உல்லாசம், நல்லோர் பேட்டி, சம சௌக்கியம், தொழிலில் உற்சாகம், லாபம் பெறுவதற்கான எத்தனஞ் செய்யின் பின் தக்க பலன் தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப்பலன் தரும் தினம்.

2-9-39 இரவு 2-18 முதல்
3-9-39 இரவு 4-20 வரை.

காரியத் தவக்கம், தொழில்களில் சாதாரணப்பலன், களத்திர புத்திரர்களால் மனக்கவலை, அன்னியருக்காக அலைச்சல், பிரயாணச்சேதி, ஆயினும் ஆதிமத்தியங்களில் எதிர் பாராத நேசர் பேட்டி, அவரால் மனோ உல்லாசம், பின் பலன் தரும், காரியம் முடிக்கின் நலம்.

(7) புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

27-8-39 காலை 9-26 முதல்
28-8-39 பகல் 12-19 வரை.

சங்கடம், அலைச்சல், எத்தொழிலிலும் பிசகுண்டாகுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் கவலை, பிறரிடம் காரியார்த்தமாகச் சென்றாலும் பகை உண்டாகும், தொழிலில் சோம்பல், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையோடு நடக்கின் நலம்.

28-8-39 காலை 12-19 முதல்
29-8-39 பகல் 3-16 வரை.

இந்நாளில் எக்கவலையுமில்லாமல் தொழில் நடக்கும், மன உற்சாகம், காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்துமுடித்தல், தொழிலில் லாபம், கீர்த்தி, புதிய நேசரால் காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, நற்காரிய ஆலோசனை, அதனால் பின் நலம், உத்தம நாள்.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலை 6-13 வரை.

நற்சிந்தனை, சிலநாளெண்ணம் கைகூடுதல், கணக்குக் காரிய சீர்திருத்தம், பகைவரிடமிருந்து காரியத்தை வெற்றி பெறுதல், சாது பிரசங்க சாஸ்திரக் கேள்வி, இஷ்டகாரிய சித்தி, ஆதிமத்தியங்களில் சிறிது கலக்க முறினும் பின் நலமாம்.

30-8-39 இரவு 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய்க் காரியம் முடிதல், முன் நடந்ததைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனஸ்தாபம், அல்லது சேதியால் மனச் சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனத்திருப்பம், பொதுவில் சமப் பலனுண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன்தாராது.

31-8-39 இரவு 9-7 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

பொருள் வரத்து, மன மகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப சுகம், நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் தக்க பலன் தரும், பிறர்பால் சிக்கிய தனத்தை மீண்டும் பெற எத்தனிக்கின் பலிதந் தரும், இந்நாள் சுகமே நடக்கும், இடையில் அடுத்தவரால் வருத்தங்காட்டி நீங்கும், மனோதாபமு முற்றகலும்.

1-9-39 இரவு 11-50 முதல்
2-9-39 இரவு 2-18 வரை.

மனோபீதி, குடும்ப சஞ்சலம், தெரியாது தொழில்களில் பிசகியுற்றிப் பின் வருந்தல், போஜனக் குறை, அஜீரண சங்கடம், இந்நாளில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாக நடக்கின் நலம், நூதன பலன் தாத்தக்க காரியங்களைச் செய்யினும் அல்லது காரியசித்தி பெறுவதற்கு முதன்மையானவர்களையோ காணின் பலன் தாராது.

2-9-39 இரவு 2-18 முதல்
3-8-39 இரவு 4-20 வரை.

மனோ உல்லாசம், நல்லோர் பேட்டி, சம சௌக்கியம், தொழிலில் மகிழ்ச்சி, லாபம் பெருதற்கான எத்தனம் செய்யின் பின் தக்க பலிதம் தரும், தன் காரியத்திற்காக ஒருவரைக் காணினும் ஜெயம், சுகப்பலன் தரும் தினம்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

27-8-39 காலை 9-26 முதல்
28-8-39 பகல் 12-19 வரை.

நல்லோரிணக்கம், காரிய ஜெயம், வியாபாரத்தில் தக்க லாபம், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் பலிதந்தரும், நூதன காரிய மெதைத்

தொடரினும் பின் மிக்க பலன் தரும், இடையில் சிறு பகை தாபமுற்ற கலும், வீண் சிந்தனை ஆயினும் இந்நாள் மிக நன்மையானதாம்.

28-8-39 பகல் 12-19 முதல்
29-8-39 பகல் 3-16 வரை.

சங்கடம் அலைச்சல், எத்தொழிலிலும் பிசகுறுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது, மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் கவலை, பிறரிடம் காரிய எண்ணமாய்ச் சென்றால் பகையுறும், தொழிலில் சோம்பலுண்டாகும், இந்நாளில் எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலை 6-13 வரை.

இந்நாளில் எக்கவலையுமில்லாமல் விதிப்படி தொழில் நடக்கும், மன உற்சாகம், காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்து முடித்தல், தொழிலில் லாபம், கீர்த்தி, புதிய நேசரால் காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, சுகம் நற்காரிய ஆலோசனை, அதனால் பின் நலம், உத்தம நாள்.

30-8-39 மாலை 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

நற்சிந்தனை சிலநாளெண்ணம் கைகூடுதல், கணக்குக் காரிய சீர்திருத்தம், பகைவரிடமிருந்து காரியத்தில் வெற்றி பெறுதல், சாது பிரசங்க சாஸ்திரக்கேள்வி, இஷ்டகாரிய சித்தி, ஆதி மத்தியங்களில் சிறிது கலக்க முறினும் பின் நலமாம்.

31-8-39 இரவு 9-7 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய்க் காரியம் முடிதல், முன் நடந்ததைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் மனத்தாங்கல், அல்லது சேதியால் மனச்சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகளால், மனத்திருப்பம், பொதுவில் சமப்பலனுண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன் தராது.

1-9-39 இரவு 11-50 முதல்
2-9-39 இரவு 2-18 வரை.

பொருள் வரத்து, மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப ஜெயம், நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் தக்க பலன் தரும், பிறர்பால் சிக்கிய தனத்தை மீண்டும் பெற எத்தனிக்கின் பலிதந்தரும், இந்நாள் சுகமே நடக்கும் இடையில் அடுத்தவரால் வருத்தங்காட்டி நீங்கும், மனோதாபமு முற்றகலும்.

2-9-39 இரவு 2-18 முதல்
3-9-39 இரவு 4-20 வரை.

மனோபீதி, குடும்ப சஞ்சலம், தெரியாது தொழில்களில் பிசகியற்றிப் பின் வருந்தல், போஜனக்குறை, அஜீரண சங்கடம், இந்நாளில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாகக் நடத்தல் வேண்டும், நூதன பலன் தாத்தக்க காரியங்களைச் செய்யினும் அல்லது காரியசித்தி பெறுவதற்கு முதன்மையானவர்களையோ காணின் பலன் தராது.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

27-8-39 காலை 9-26 முதல்
28-8-39 பகல் 12-19 வரை.

காரியத்தங்கம், தொழில்களில் சாதாரணப் பலன், களத்திர புத்திரர்களால் மனக்கவலை, அன்னியருக்காக அலைச்சல், பிரயாணச்சேதி ஆயினும் ஆதிமத்தியில் எதிர் பாராத் நேசர் பேட்டி, அவரால் மனோ உல்லாசம், பின் பலன் தரும் காரியம் முடிக்கின் நலம்.

28-8-39 பகல் 12-19 முதல்
29-8-39 பகல் 3-16 வரை.

நல்லோரிணக்கம், காரிய ஜெயம், வியாபாரத்தில் தக்க லாபம், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் பலிதந்தரும், நூதன காரிய மெதைத் தொடரினும் பின் மிக்க பலன் தரும், இடையில் சிறுபகை தாபமுற்றகலும், வீண் சிந்தனையாயினும் இந்நாள் மிக நன்மையானதாம்.

29-8-39 பகல் 3-16 முதல்
30-8-39 மாலை 6-13 வரை.

சங்கடம், அலைச்சல், எத்தொழிலும் பிசகுறுதல், தேக அசௌக்கியம், இஷ்டர் அல்லது மேலதிகாரிகளால் மனஸ்தாபம், உறவினரால் கவலை, பிறரிடம் காரிய எண்ணமாய்ச் சென்றால் பகை நேரும்.

30-8-39 மாலை 6-13 முதல்
31-8-39 இரவு 9-7 வரை.

இந்நாளில் எக்கவலையுமில்லாமல் தொழில் நடக்கும், மன உற்சாகம், காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்து முடித்தல், தொழிலில் லாபம், கீர்த்தி, புதிய நேசரால் காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, சுகம், நற்காரிய ஆலோசனை, அதனால் பின் நலம்.

31-8-39 இரவு 9-7 முதல்
1-9-39 இரவு 11-50 வரை.

நற்சிந்தனை, சில நாளெண்ணம் கை கூடுதல், கணக்குக் காரிய சீர்திருத்தம், பகைவரைத் தன் காரியத்தில் ஜெயித்தல், சாது பிரசங்க சாஸ்திரக் கேள்வி, இஷ்ட காரிய சித்தி, ஆதி மத்தியங்களில் சிறிது கலக்க முறினும் பின் நலமாம்.

1-9-39 இரவு 11-50 முதல்
2-9-39 இரவு 2-18 வரை.

தொழிலில் தாமதமாய்க் காரியம் முடிதல், முன் நடந்ததைக் குறித்து சிந்தித்ததில், கொடுக்கல் வாங்கலில் மனத்தாங்கல், அல்லது சேதியால் மனச்சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப்பலனுண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன் தராது.

2-9-39 இரவு 2-18 முதல்
3-9-39 இரவு 4-20 வரை.

பொருள் வரத்து, மனமகிழ்ச்சி, இஷ்டார்த்த காரிய ஜெயம், குடும்ப சுகம், நல்லோரிணக்கம், எக்காரியம் தொடரினும் பின் தக்கபலன் தரும், பிறர்பால் சிக்கிய தனத்தை மீண்டும் பெற எத்தனிக்கின் வெற்றிதரும், இந்நாள் சுகமே நடக்கும், இடையில் அடுத்தவரால் வருத்தங்காட்டி நீங்கும், மனோதாபமு முற்றகலும்.

காற்றடித்ததிலே!



கணக்கிடத்தகுமோ?

தாயார், "அய்யோ! உங்க அப்பா எங்கேடா?" என்று அலறினள். அவசரமில்லே அம்மா. மிச்சம் கோலி இருக்கு. இப்போ விளையாடுவதற்குப் போதும்", என்றான் அந்த சமத்துப் பையன்.

* * *

அய்யோ பாவம்!

ஒரு டவுனில் ஒரு தெருவைக் கடந்து செல்லும்போது, ஒரு நாட்டுப்புறத்தான் ஒரு அணுக்காசை நழுவவிட்டு விட்டான். அப்போது தெருவில் வண்டி வகையறா போக்குவரத்து சந்தடி அதிகமா இருந்ததால், சரிவரத்தேடி அதைக் கண்டுபிடிக்க முடியவில்லே. அங்கு நின்ற போலீஸ் சேகவனைப் பார்த்து, "போலீசுகாரரே, நான் நாளே காலே 10 மணிக்கு வருகிறேன். அதற்குள் உமது கைக்குக் கிடைத்தால், வைத்துக்கொண்டிரும். நான் வந்து வாங்கிப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, அவன் போய் விட்டான்.

மறுதினம் 11 மணிக்கு அந்த வீதிக்கு அவன் வந்து பார்த்தபோது, ரோட்டெல்லாம் அலங்கோலமாகக் கிடந்தது. தரையையே புரட்டிப் போட்டிருந்தார்கள். பட்டிக் காட்டான் போலீசுகாரனிடம் சென்று, "எனது ஒரு அணுவிற்காக, முனிசிபாலிடியார் என்ன பாடு படுகிறார்கள், அய்யோ பாவம்!" என்று பரிதபித்து விட்டுச் சொன்னான்.

தனது ஊருக்குப்போய், அந்த கிராமத்திற்கும் முனிசிபாலிடி வேண்டும் என்று பிரசாரம் செய்தான்.

களிமண்—பஞ்சம்

ஒரு ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாளானதினால், ஒரு மாணவன், பொழுது போக்குக்காக, மண்ணைக்கொண்டு சிலேகளைச் செய்து கொண்டிருந்தான். அப்போது உபாத்தியாயர் அந்த வழியே சென்றார். அவன் செய்து வைத்திருந்த சிலேகளேக் குறித்து, ஒவ்வொன்றாக வினவினர். கோழியும், வான்கோழியும், நெருப்புக் கோழியும்செய்திருந்தான். நாயும், ஓநாயும், ஆ-நாயும் (யானை) பூ—னையும் (பூனே) செய்துவைத்திருந்தான்.

"ஏண்டா, என் சிலே ஒன்றும்செய்யவில்லே?" என்றார் வாத்தியார்.

அதற்கு மாணவன்: மண்டை செய்யாமல், முண்டமாகத் தங்கள் சிலேயைச் செய்யக்கூடாது. அது மரியாதையாக இராது. தங்களுடைய மண்டையைச் செய்வதற்கு என்னிடம் களிமண் கிடையாது" என்று பையன் மரியாதையுடன் பதில் சொன்னான்.

———

சந்திரிகா

[ஒரு தமிழ் நாவல். 'குகப்ரியை' எழுதினது. பக்கங்கள் 164. கிடைக்குமிடம்:—கெ. 6, வீரபத்திரன் தெரு, மைலாப்பூர், சென்னை, விலை அணா 12.]

'சந்திரிகா' ஆனந்த விகடனில் பகுதி பகுதியாக வெளிவந்த பொழுது, நான் படிக்கவில்லை. ஆகவே, புஸ்தக ரூபமாக, அது வெளி வராவிடில், நான் படித்திருக்க முடியாது. படிக்காவிட்டால் எவ்வளவு நஷ்டம் என்பது படித்த பிறகுதான் தெரிகிறது.

இந்த நாவலுக்கு ஸ்ரீ ரா. கி. முகவுரை ஒன்றை எழுதி யிருக்கிறார். அவர் இதைப் பற்றி எழுதியிருப்பதை, பூரணமாக, ஆதரிக்கிறேன். இவ்வளவோடு நிறுத்தி விட்டால், புஸ்தகத்துக்கு விமரிசனம் ஆகி விடுமா?

"சந்திரிகா" மாதிரி, வேறு புஸ்தகங்கள் உண்டா என்றால் இங்கிலீஷில் ஒன்றும் தமிழில் ஒன்றும் இருக்கின்றன. இங்கிலீஷில் "விகார் ஆப் வேக்பீல்ட்". தமிழில், 'கமலாம்பாள்.' சந்திரிகாவின் பாணி, இந்த இரண்டு புஸ்தகங்களைப் போலவே. ஆனால், சந்திரிகா அவைகளைத் தழுவி எழுதப்பட்ட புஸ்தகம் அல்ல. சந்திரிகாவின் கதைப்போக்கும் நடையும் பிரத்தியேகமானவை.

பதஞ்சலி சாஸ்திரியின் குடும்பத்தில், 'இடி மேல் இடி', "இடு இடு" என்று வேகமாய் விழுந்தாலும், அந்த அடிகள் இயற்கையானவை என்பதைப்போல, மனதில் படுகின்றன. ஏக காலத்தில், இத்தனை இடுக்கண்களும் ஒரு குடும்பத்துக்கு நேருவது சிரமம். அப்படி நேராவிட்டால், அந்தக் குடும்பம் எவ்வாறு கதைக்கு வரத் தகுதி பெற்றதாகும்?

"சந்திரிகா" தமிழ் நாட்டுப் பிராமணர் வீட்டுச் சம்பவங்களை விஸ்தரிக்கும் கதை. ஆனால், "குகப்ரியை" கதை சொல்லும் நேர்த்தியிலே, அது பிராமணர் குடும்பம் என்பதே மறந்து போய் விடுகிறது. ஒரு கூட்டமாகக் கூடிக்கொண்டிருக்கும் நல்லவர்களின் கதை என்று தோன்றுகிறதே யல்லாமல், தமிழ் நாட்டுக்குச் சிறப்பானது, அல்லது பிராமணர்களைச் சிறப்பாக குறிப்பிடுவது, அல்லது சில கருத்துக்களை வற்புறுத்திப் பிரசாரம் செய்வது போன்றவைகள் கண்ணில் படவே இல்லை.

தியாகய்யரின் "க்ஷீர ஸாகர சயன" என்ற கீர்த்தனத்தில் எவ்வளவு சாந்தமும் அழகும் குடிகொண்டிருக்கின்றனவோ, அதே மாதிரி அமைதியும் அழகும் 'குகப்பிரியை'யின் நடையில் குடிகொண்

டிருக்கின்றன; அதோடுகூட, புன்முறுவலைப் பூக்கச் செய்யும் நகைச் சுவையும். அழகான "புள் கோலம்" போடுவதைப்போல ஒரு வர்ணனை. வர்ணனைக்கு மாதிரியைப் பாருங்கள்.

"அழகிய தோப்பு. அதன் நடுவே தெள்ளிய தாமரைக் குளம். காண்போர் கண்களைக் கவரும் பூஞ்செடிகள். அதை யடுத்து ஒரு சிறு குடில். சுற்றுப் புறங்களில் ஒட்டுமா, கொய்யா, முந்திரி முதலிய பழ மரங்கள். அவைகளில் கூட்டங் கூட்டமாய் உட்கார்ந்தும், ஆடியும் பாடியும், களிக்கும் புள்ளினங் கள். அருகிலுள்ள மலைச் சரிவுகளிலிருந்து பளிங்குபோல பாய்ந்து ஓடிவரும் சிற்றருவியின் சல சல வென்னும் சப்தம். இவைகளுக் கிடையில் ஒட்டுமாமரத்தின் தாழ்ந்த கிளை யொன் றில் உட்கார்ந்து, கால்களை ஊன்றி, ஊஞ்சலாடிக் கொண்டிருக் கிறாள் சியாமளி."

இப்பேர்ப்பட்ட தோப்பில், தனித்தோ அல்லது கற்பனைசியாமளி யுடனோ உட்கார்ந்து, நிம்மதியுடனிருக்க வேண்டும் என்று யாருக்குத் தான் ஆவல் உண்டாகாது?

"சந்திரிகா" முழுதும் நிரம்பிக் கிடப்பவர் சேஷியம்மாள். சேஷியம்மாள் என்றால் போதாது. திவான் சேஷய்யா சாஸ்திரிகள் என்று அந்தப் பெரிய மனுஷியை அழைத்தாலும் பொருந்தும். கூர்மையான புத்தி, மங்காத பக்தி, படாடோபமில்லாத புத்திர வாஞ்சை, சமயசஞ்சீவியான யோசனை, குடும்பப் பற்று, "புது நாட கத்தை" வெறுக்காத கர்னாடகப் பேர்வழி, அனுபவ வேதாந்தி. இவ் வளவும் சேர்ந்தது சேஷியம்மாள்.

"குடிகாரச் சாமியார்" போன்ற உத்தம மகான்களை, நம்மால், கண் இருந்தால், இப்பவும் பார்க்க முடியும். இந்த நாவலில், சாமியார், அபூர்வமான சிருஷ்டி. அவர் வரும்போதெல்லாம், ஒரு குதூகலம்; ஒரு நிம்மதி; ஒருவகை இன்பம்.

சியாமளாவும் ஜகதீசனும் அழகான ஜோடி. பரஸ்பரம் கண்வழி நுழைந்த கள்வர்களல்லவா? தெய்வ பக்தியும் மனிதனுடைய கடமை யும் ஒன்றாய்ச் சேர்ந்தால் எப்படியிருக்கும்? அப்பேர்ப்பட்ட சேர்க்கை ஜோடி சியாமளாவும் ஜகதீசனும்.

பதஞ்சலி சாஸ்திரி நல்ல, முன் கோபம் கொண்ட, குடும்பஸ்தர். அவர் மனைவி லட்சுமி அம்மாள், தன் குழந்தைகளைக் கொண்டாடும் அன்பு மிக்க தாய். ஏறக்குறைய, எல்லா பாத்திரங்களும் நன்றாக அமைந்திருக்கின்றன.

இந்தப் புஸ்தகத்தை, எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்பது என் மனப்பூர்வமான வேண்டுகோள்.

'போன்னி'.

திரை உலகம்

தென் இந்தியா யுனைடெட் ஆர்ட்டிஸ் கார்பொரேஷனின் ஜயக் கோடி சீக்கிரம் திரைக்கு வந்து விடும். இதில் ஸ்ரீமதி கே. டி. ருக்மணி நடிக்கிறாள்.

*　　　*　　　*

மாடர்ன் தியேட்டர்ஸாரின் மாணிக்க வாசகர் சீக்கிரம் திரைக்கு வர ஏற்பாடுகள் நடக்கின்றன. இதில் ஸ்ரீ தண்டபாணி தேசிகரும், ஸ்ரீமதி தேவஸேனுவும் நடித்திருக்கின்றனர்.

*　　　*　　　*

கோவை பிரிமியர் சினிடோன் திருவள்ளுவர் என்று படம் எடுக்க யோசித்திருக்கின்றனர். திருவள்ளுவராக நடிப்பவர் யாரோ தெரியவில்லை. ஒருக்கால் சிருகளத்தூர் சாமாவாக இருந்தாலும் இருக்கும் என்று தெரிகிறது.

*　　　*　　　*

மாயா மசீந்திராவிற்குப் பிறகு டைரக்டர், ராஜா சந்திரசேகர் சும்மா இருக்கவில்லை. சித்ராங்கதா என்ற படத்தை எடுக்கப் போகிறார். இதில் டி. ஏ. மதுரம், என். எஸ். கிருஷ்ணன், பி. ஜி. வெங்கடேசன், முதலியவர்கள் நடிப்பார்கள்.

*　　　*　　　*

மதுவிலக்கு சம்மந்தமான, விமோசனம் என்ற படம் சீக்கிரம் தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் திரை இடப்படும்.

*　　　*　　　*

சியாமளா பிக்சர்ஸார் இரண்டு படங்களை எடுக்கப் போகிறார்கள் ஒன்று தமிழ், மற்றொன்று மலையாளம் மலையாளப் படத்தின் பெயர் ஞானம்பிகை அது ஒரு சமூகப்படம். மற்றொன்று வேதவதி அதாவது சீதையின் ஜனனம், என்ற புராணப்படம். படம் நியூடோனில் எடுக்கப்படும்.

*　　　*　　　*

மள்ளிபெண்ட்லி அல்லது மறுபடியும் விவாகம் என்ற படத்தின் சில பாகங்கள் எடுக்கப்பட்டு விட்டன. டைரக்டர் ஒய். வி. ராவும் காஞ்சனமாலாவும், நடிக்கின்றனர். நியூடோன் ஸ்டுடியோ ரொம்ப பரபரப்பாக இருக்கிறது.

*　　　*　　　*

குபேரா பிக்சர்ஸாரின், இரண்டாவது புராணப்படமான மயில் ராவணனை சீக்கிரம் முடித்து விடுவார், டைரக்டர் நாராயண மூர்த்தி. இதில், வேமுரி கக்கையாவும், காஞ்சனமாலாவும் நடிக்கின்றனர்.

மைசூர் எஸ். எஸ். நாடக மண்டலின் ராஷ்ட்ர வீரன், என்ற படம் வேல் பிக்சர்ஸ் ஸ்டுடியோவில் தயாராகிறது. அனேகமாக டைரக்டர் குணே தான் இதை டைரக்ட் செய்வார்.

* * *

மைசூர் பாரமவுண்ட் பிலிம் கம்பெனியார் இரண்டு படங்களை எடுப்பார்கள். ஒன்று தமிழிலும், மற்றொன்று கன்னடத்திலும் எடுக்கப்படும்.

* * *

சுந்தரம் சௌண்ட் ஸ்டுடியோவில் எடுக்கப்பட்டு வரும் உஷா என்ற தெலுங்குப் படம் சீக்கிரம் பூர்த்தியாகி விடும். இதில் பிரசித்தி பெற்ற வடநாட்டு நடிகையான மிஸ் பத்மாவதி சாலிக்ராம் நடிக்கிறார்.

* * *

பம்பாயில் இருபத்தைந்து லக்ஷ ரூபாய் மூலதனத்தில் நேஷனல் ஸ்டுடியோஸ் என்ற பெயருடன் ஒரு கம்பெனி ஆரம்பமாகிறது. இதில் பத்து லக்ஷ ரூபாய்க்கு ஷேர்களை சாகர் கம்பெனி சொந்தக்காரர் சிமன்லால் தேசாயும், ரஞ்சித் கம்பெனி சொந்தக்காரர் சந்துலால் ஷாவும், ஒய். ஏ. பசுல் பாயும் எடுத்துக்கொண்டு மேற்படி கம்பெனிக்கு டைரக்டர்களாகிறார்கள். பாக்கி மூலதனம் ஷேர்கள் மூலம் வசூலிக்கப்படும்.

* * *

டைரக்டர் விநாயக், பிரம்மசாரி என்ற கதையை எழுதி பிரசித்திபெற்ற, புரபெஸர், பி. கே. அத்ரே அவர்களின் கதையான, அர்த்தாங்கி மனைவியை அடுத்தபடியாக படம் எடுக்க வேண்டி சினேரியா எல்லாம் தயாரித்து விட்டார். சீக்கிரம் படப்பிடிப்பு வேலை ஆரம்பமாகும். இதில் விநாயக்கும் நடிப்பார்.

பம்பாய் ஹிந்துஸ்தான் ஸினிடோன் கம்பெனியார் யார் எவருடையது, மண் என இரண்டு படங்களை எடுக்கப் போகின்றனர். இதில் சோபனா சமர்த், குர்ஷித், ஜயந்த், கே. என். சிங். கோபி, முதலியவர்கள் நடிப்பார்கள்.

கல்கத்தா பாரத லக்ஷ்மி பிக்சர்ஸார் "மதவாலி மீரா" என்ற படத்தை ஹிந்தி பஞ்சாபி, இரண்டு பாஷைகளில் எடுப்பார்கள். இதில், கே. ஸி. டே. நிஸ்ஸார், முக்தார் பேகம், கமலா ஜஹாரியா. இந்து பாலா, முதலியவர்கள் நடிக்கிறார்கள். படம் சீக்கிரம் திரைக்குவந்து விடும்.

* * *

நியூ தியேட்டர்ஸாரின் கபால குண்டலாவை, ஏக காலத்தில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் காட்ட ஏற்பாடு நடந்து வருகின்றன.

கோடீசுவரன், அனாதாச்ரமம், முதலிய படத்தை டைரக்ட் செய்த ஸ்ரீ ஹேம்சந்தர். தனது நான்காவது படமா. சிர்கோ என்ற படத்தைத் தயாரித்து வருகிறார். இதில் ஹாஸ்யம் நிறைய

இருக்கும். கானன்பாலா, ஜகதீஷ், ரஜூம், நிமோ முதலியவர்கள் நடிக்கின்றனர். படம் ஹிந்தி, வங்காளி இரண்டு பாஷையிலும் எடுக்கப்படும்.

* * *

இந்தியன் பிலிம் கார்ப்பொரேஷன் டைரக்டர்களின் கூட்டம் கூடி சில அருமையான தீர்மானங்களை செய்திருக்கின்றனர். பெரிய மஹான்களைப்பற்றி, பொய்யும் புளுகுமாக கதைகளை எடுப்பதைக் கண்டித்து, சிறந்த ஆசிரியர்களைக்கொண்டு ஆராய்ந்து கதைகளை எழுதிப் படம் பிடிக்கப்போகிறார்கள். முதலில் பக்த கபீரும் அடுத்தபடியாக பிராஞ்சு ஆசிரியர், அனடோல் பிரான்ஸ் என்பரின் தையி என்ற கதையையும் எடுப்பார்கள். இவைகளின் மூலமாகப் பழைய கலாசாரங்களையும் மதத்தையும், வேதாந்தத்தையும் பற்றிய உண்மைகளை ஜனங்கள் அறியும்படிச் செய்வார்கள்.

இவர்களுடைய ஸ்டுடியோவிற்காக உயர்ந்த டெக்னிஷியன்களும், சாதனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* * *

ஆர். கே. ஓ. ரேடியோ, ஸ்டுடியோவில் வால்ட் டிஸ்னியின் பினுச்சியோ என்ற முழுநீள கார்ட்டூன் தயாராகிறது. பனியழகி என்ற படத்திற்குப் பிறகு தயாராகும் முழுநீள படம் இதுதான்.

கொலம்பியா பிக்சர்ஸாரின் ஹரியார் ஸெனெடர் ஸ்மித் படத்தில் 'ஜீன் ஆர்தர், ஜேம்ஸ் ஸ்டுவர்ட், இவர்களுடன் நடிக்க இருநூறு பள்ளிக்கூடப் பையன்களை அமர்த்தி இருக்கிறார்கள்.

* * *

மெட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனியாரின் இருபது கழுதைகள் என்ற படத்தில் வாலஸ் பீரி ஒரு நடிகர்.

* * *

டைரக்டர் ராஜா யாக்னிக், ராஜாமணி, ஸ்ரீநிவாசராவ் முதலியோர் நடிக்கும் ஜேய பாரதி என்னும் மயிர்கூச்செரியும் சம்பவங்கள் நிறைந்த ஸ்டண்ட் படத்தை டைரக்ட் செய்து முடித்துவிட்டார். வெகு சீக்கிரத்தில் ஜேய பாரதி திரைக்கு வரும்.

* * *

பிரசித்தி பெற்ற ரேடியோ பாடகி மிஸ் அமீர் கர்னுடகி, அனில் குமரார் முதலியோர் நடிக்கும் எங்கள் நாடு (அமாரா தேஷ்) என்ற புது இந்திப்படத்தை டைரக்டர் ஏ. எம். கான் ஷூட்டிங் ஆரம்பித்து விட்டார்.

* * *

மோஹன் சின்ஹா ஸ்வஸ்திக் என்ற படத்தை முடித்து மற்றொரு சமூகப்படத்திற்கு ஆரம்பம் செய்து விட்டார். நடிகர்கள் யாரென்று இன்னும் திட்டமாகத் தெரியவில்லை.